கோகுலம்

GOKULAM

ஆகஸ்ட் '90 விலை ரூ. 3/-



கல்வி வளர்ச்சிக்குக் கராத்தே உதவுமா?

கோகுலம்



1990 ஆகஸ்ட் மாத இதழ்
மலர் 8 ○○ இதழ் 7

அன்புத் தம்பி, தங்கைகளே!

உங்களுக்கு என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்கள். எப்படி இருக்கிறீர்கள்?

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு துறையிலும் நீங்கள் மேலும் மேலும் முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படித்தானே?

அறிவில்லாத உயிரினம் கிடையாது. தாவரம், ஊர்வன, நீந்துவன, பறப்பன போன்றவற்றுக்கு உள்ள அறிவுக்கெல்லாம் மேம்பட்ட ஓர் அறிவு நமக்கு இருக்கிறது. பகுத்தறிவு. அந்த அறிவைப் பயன்படுத்தத் தவறும் போதுதான், 'அறிவு கெட்டதனமா நடக்கறியே!' இல்லை, 'பேசறியே!' என்று பெரியவர்களிடம் வாங்கிக் கட்டிக் கொள்கிறோம்.

நம்மைப் பொறுத்தவரை அறிவு என்றால் பகுத்தறிவுதான். நல்லது எது, கெட்டது எது என்று பகுத்தறிதல். சரியானது எது, தவறானது எது என்று பகுத்தறிதல். இலாபம் எது, இழப்பு எது என்று பகுத்தறிதல்.

இந்த அறிவு வேறு எந்த உயிரினங்களுக்கும் கிடையாது. இந்தப் பகுத்தறிவு இருப்பதால்தான் மனிதன் இந்த மாநிலத்தையே ஏன், வானிலவையே கூடத் தன்வயப்படுத்திக் கொண்டிருக்கிறான்.

தம்பி தங்கைகளே,

உரிய முறையில் உங்கள் அறிவைக் கொண்டு செலுத்தினால் உங்களால் எந்தத் தடையையும் தகர்த்தெறிய முடியும். நினைத்த குறிக்கோளை நெருங்கிச் செல்ல முடியும்; வெல்ல முடியும். அறிவு என்றால் என்ன என்று 'அறிவுடைமை'யாய்ப் பத்துக் குறள்கள் இருந்தாலும், அதில் ஒற்றைக் குறளில் திருவள்ளுவர் வலியுறுத்துவதை வாங்கிக் கொண்டாலும் போதும்; அது உங்களை வழிப்படுத்தும்.

மனம் போகும் போக்கில் போக விடாமல் பிடித்து நிறுத்தி, தீமையிலிருந்து நீக்கி, நல்லவையிடத்தே செலுத்துவதுதான் அறிவு.


சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

இதிலே, 'நன்றின் பால் உய்ப்பது' என்பதிலே அத்தனை முன்னேற்றங்களும் அடங்கியிருக்கின்றன. இந்தக் குறள் வழி நடந்து நீங்கள் மென்மேலும் நலம் பெற்று வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

அன்பு அண்ணன்,

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.



இந்த இதழில்

எப்படிக் காப்பாற்றுவேன்?

வேலாத்தூர் என்னும் ஊரில் வேதாண்டி என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரம சாது. யாரிடமும் இனிமையாகப் பேசுவார். யாரையும் பகையாகக் கருத மாட்டார். கருணை ததும்பும் கண்களையுடையவர். சிறிய எறும்புகளும் அவர் காலின் கீழ் அகப்பட்டதில்லை. எந்த உயிருக்கும் தீங்கு செய்யாமல் வாழ்பவர்.

இத்தகைய நல்ல குணம் பொருந்தியவருக்கு ஒரு மனைவி வாய்த்தாள். எல்லம்மாள் என்று பேர். அவள் பேசினால் வீட்டிலுள்ள பொருள்களெல்லாம் அதிரும். நடந்தால் அடுத்த வீட்டிலுள்ள பொருள்கள் உதிரும். அவளுக்குச் சண்டையென்றால் சர்க்கரைப் பொங்கல்; பாதகமென்றால் பாற் சோறு; கணவன் ஒரு துரும்பு; கணவனைத் திட்டுவது அவளுக்குக் கரும்பு. சுருக்கமாகச் சொன்னால் வேதாண்டி பல பிறவிகளில் செய்த பாவங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து ஒரு வடிவம் எடுத்தது போல் எல்லம்மாள் இருந்தாள்.

வேதாண்டி ஒவ்வொரு நாளும் வெம்பிச் சாவார். "இந்தப் பெண் பேயிடம் சிக்கித் தவிக்கிறேனே இறைவனே! இவளிடமிருந்து எனக்கு என்றைக்கு விடுதலை கிடைக்கும்?" என்று முருகப் பெருமானிடம் முறையிடுவார். அந்த அளவுக்குத் தினமும் அவரை வதைத்து வந்தாள் எல்லம்மாள்.

ஒரு நாள் வேதாண்டி பூஜை அறையில் முருகப் பெருமானைப் பூசித்துக் கொண்டிருந்தார். எல்லட

திருமுருக கிருபானந்த வாரியார்

காப்பாற்றுவேன்?

மான், "இந்தப் பாழாய்ப் போன வருக்குப் பூசை வேறு வேணுமா? பூசை பண்ணி, பூசை பண்ணி என்ன பலனைக் கண்டார்? பூனை மாதிரி உட்கார்ந்து கொண்டே தூங்குகின்றார். முணுமுணுவென்று உதட்டை அசைத்துக் குடியைக் கெடுக்கின்றார்," என்று வசை மாரி பொழிந்தாள்.

"முருகா! நீதான் இவளுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கணும்," என்று வேண்டிக் கொண்டார் வேதாண்டி.

"எனக்கா நல்ல புத்தி கொடுக்கணும்? ஏன், இப்ப எனக்கு நல்ல புத்தியில்லையென்று சொல்லுகிறீரா! நீரும் உம் முருகனும்!" என்று திட்டிய படி எல்லம்மாள், வேதாண்டி அபிஷேகம் செய்து கொண்டிருந்த முருக மூர்த்தியைப் பிடுங்கிக் கொண்டு போய், அவர்கள் தோட்டத்திலுள்ள பெரிய கிணற்றில் போட்டு விட்டாள்.

அது கண்ட அவருக்கு உள்ளம் பதறியது; உடல் நடுங்கியது. தாங்க முடியாத துன்பத்தையடைந்தான். கோபம் கொப்பளிக்க, "அடி பாதகி!



என் ஆண்டவனைக் கொண்டு போய்க் கிணற்றில் போட்டு விட்டாயே! இனி இந்த உலகில் இருக்க மாட்டேன். கிணற்றில் விழுந்து இறந்து உன் மேல் பழியைப் போடுகிறேன்,'' என்றார்.

''ஓகோ! உயிரை விட்டுப் பழியை என் மேல் போடப் போகிறீரா? ரொம்ப நல்லதாப் போச்சு. நீர் போனால் உலகம் முழுகிப் போய் விடுமா? சரி, இருக்கட்டும். எப்படி உயிர் விடப் போகிறீர்?''

''என் கடவுளை எந்தக் கிணற்றில் போட்டாயோ, அதே கிணற்றில் நானும் விழுந்து உயிர் விடப் போகிறேன்.''

''அப்படியானால் சரி. இப்போதே என் எதிரிலேயே கிணற்றில் விழுந்து சாகும்,'' என்று கணவன் கையைப் பிடித்துக் கிணறு வரை இழுத்துக் கொண்டு போனாள் எல்லம்மாள்.

''அடியே, என் கையை விடு. நானே விழுந்து இறக்கிறேன். உன்னிடமிருந்து வதைபடுவதை விட உயிர் விடுவது உத்தமம்.''

''சரி. விழுந்து தொலையும். நீர் இறந்தால் உழக்கரிசி மிச்சம். பூமிக்கும் பாரம் குறையும்.''

உடனே, வேதாண்டி சிறிது தூரம் பின்னாடி ஓடிப் போய், அங்கிருந்து வேகமாக ஓடிக் கிணற்றினிடம் வந்து விழாமல் திகைத்து நின்றார்.

எல்லம்மாள் கலகலவென்று சிரித்து, ''ஏன் விழாமல் விழிக்கிறீர்? பயந்து விட்டீரா? இல்லை, நான் பயந்து விடுவேன் என்று பார்த்தீரா? அதற்கு வேறு ஆளைப் பாரும்,'' என்றாள்.

வேதாண்டி, ''அடியே, சும்மா கத்தாதே. நான் கிணற்றில் விழுவதற்கும் உயிர் விடுவதற்கும் பயப்படவில்லை. எனக்கு நீந்தத் தெரியும். விழுந்தாலும் நீந்திக் கரை ஏறி விடுவேன். அதுவுமில்லாது நானே விழுவது என்றால் சற்றுப் பயமாக இருக்கிறது. என்னுடைய இரண்டு கைகளையும் நன்றாகச் சேர்த்துக் கட்டி விடு. நான் கிணற்றோரம் நிற்கிறேன். நீ ஓடி வந்து என்னைத் தள்ளி விடு,'' என்றார்.

எல்லம்மாள், ''நல்லது. அப்படியே செய்கிறேன்,'' என்று நீண்ட கயிறு கொண்டு வந்து கணவனுடைய இரண்டு கைகளையும் கட்டி விட்டாள்.

வேதாண்டி, ''சரி, நீ பின்னாடி ஓடி வந்து என்னைத் தள்ளி விடு,'' என்றார்.

அவ்வாறே, எல்லம்மாள் பின்னுக்குப் போய் அங்கிருந்து வேகமாக ஓடி வந்தாள். கிணற்றோரம் வந்ததும் வேதாண்டி திடீரென்று சிறிது விலகிக் கொண்டார். வேலம்மாள் வேகமாக வந்ததால், கிணற்றில் அவளே விழுந்தாள். தண்ணீருக்குள் போய் திக்குமுக்காடினாள். தூக்கி விடுமாறு கையை ஆட்டினாள்.

வேதாண்டி, ''என்னுடைய கைகளை நீயே கட்டி விட்டாய், நான் எப்படி உன்னை எடுக்க முடியும்?'' என்று சொல்லி விட்டு வீட்டுக்குப் போனார்.

வேலம்மாள் நரகத்தை நோக்கி விரைந்தாள்.

பின்னர் வேதாண்டி முருகன் விக்கிரகத்தைக்கிணற்றுக்குள்ளிருந்து எடுத்து வீடு நிலங்களையெல்லாம் ஏழைகளுக்குத் தானம் கொடுத்து விட்டு முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள தலங்களுக்கெல்லாம் சென்று வழிபட்டு வரலானார்.


ஓடுதே பாலும் தேனும் நெய்யும்!

தமிழகத்தில் உண்மையிலேயே பாலும், தேனும், நெய்யும் ஓடுகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஓர் ஊரின் பெயர் — நெய்யாறு. செங்கல்பட்டிலுள்ள ஓர் ஆற்றின் பெயர் — பாலாறு. மதுரை மாவட்டத்திலுள்ள ஓர் ஆற்றின் பெயர் — தேனாறு.

— ஏ. வி. சண்முகம், கொட்டாரம்.

உலகிலேயே பெரிய மீன்

ஆழி——



உலகில் உள்ள மீன்களில் மிகவும் பெரியது சுறாமீன்தான்! சுறாவின் சட்டகம், மற்ற மீன்கள்போல் கடினமான எலும்பினால் ஆனது அல்ல; அது குருத்து எலும்பினால் ஆனது. பொதுவாக, மீன்கள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. ஆனால் குட்டி போடக்கூடியது சுறாமீன். ஒரு தடவைக்குச் சுமார் 28 குட்டிகள் போடும்.

சுறாக்களில் பலவகைகள் இருக்கின்றன.




மிகவும் பெரியது திமிங்கிலச் சுறா. சுமார் 20 மீட்டர் நீளமும், சுமார் 2500 பவுண்டு எடையும் இருக்கும். வாயின் குறுக்களவு 2 மீட்டர்! ஆனால், இதன் தொண்டை மிகவும் குறுகியது. ஓர் ஆரஞ்சுப் பழ அளவுதான் விழுங்க முடியும்!




12 மீட்டர் நீளம் உள்ளது வெண்சுறா. இது மிகவும் கொடூரமானது. மனிதர்களைத் தின்னக்கூடியது. பசி வந்துவிட்டால் கடலில் மிதக்கக்கூடிய எந்தயும் விழுங்கிவிடும்!



சுத்திபோன்ற விநோதமான தலையைக் கொண்டது சுத்தித்தலை சுறா. சுத்தி போன்ற தலையினால் எதிரிகளைத் தாக்கி வீழ்த்தும்!




சிறுத்தைப்புலியைப்போல், புள்ளிகளைக் கொண்டது புலிச்சுறா. சுறாக்களில் இது ஒன்றுமட்டுமே, முட்டைகளை ஒரு ஜவ்வுப் பையில் இட்டு கடல் தாவரங்களுக்கு இடையே வைத்துக் குஞ்சு பொரிக்கிறது.




உடலைப்போல்
இரண்டு மடங்கு நீளமான
வால் உடையது
'போரடிப்பான் சுறா'!


உலகில் மிகவும் பெரிய உயிரினமான திமிங்கிலத்தைக்கூட பல 'வாள் சுறாக்கள்' ஒன்றுசேர்ந்து கொன்றுவிடும்! வாள் சுறாவின் தலையில் ரம்பம்போன்ற பற்கள் உள்ள உறுப்பு அமைந்திருக்கிறது. தாய் வாள் சுறாவின் வயிற்றில் அதன் குட்டி இருக்கும் போது, குட்டியின் ரம்ப மூக்கு, தாயின் வயிற்றைக் கிழித்துவிடாமல் இருக்க, இயற்கையிலேயே அந்த ரம்ப மூக்கு ஒரு கனமான ஜவ்வினால் மூடப்பட்டிருக்கும்!




சுறாக்களுக்குப் பல வரிசைப் பற்கள் உண்டு. கடிக்கும் போது, சுறா தன் பற்களை இழந்து விட்டால் அவை மறுபடியும் முளைத்து விடும்!



சுறாவின் வாய், கீழ் நோக்கி இருப்பதால் அது எதையாவது கடிக்க வேண்டுமானால் மல்லாந்து நீந்தித் தான் கடிக்க முடியும்!







பொதுவாக சுறாமீன்கள், சூரியன் உதிக்கிற சமயத்திலும், சூரியன் மறைகிற சமயத்திலும் மட்டுமே இரைதின்னும். மற்றச் சமயங்களில் ஒன்றும் தின்னாது.

சுறாவுக்கு வாடையை அறியும் சக்தி அபாரமாக இருக்கிறது. அதன் தலையின் அடியில் வாடை உணர் உறுப்புக்கள் உள்ளன. ஒரு கோடிப் பாகம் நீரில் ஒரு பாகம் மனித இரத்தம் கலந்தால் கூட சுறா அதனை உணர்ந்து விடும்!







சுறா இரவு பகலாகத் தன் துடுப்புகளை அசைத்து நீந்திக் கொண்டேயிருக்கும். அப்படி இருந்தால்தான் அதனால் மிதக்க முடியும்.

உயிரினங்களில் சுறாவின் கல்லீரல்தான் மிகவும் பெரியது. சுறாவின் எடையில் கல்லீரல் மட்டும் கால் பாங்கு இருக்கும்! கல்லீரலில் உணவுச் சத்து நிறையச் சேமித்து வைக்கப் படுவதால், பல வாரங்கள் கூட சுறா இரை தின்னாமல் இருக்க முடியும். இந்தக் கல்லீரலிருந்துதான் மீன் எண்ணெய் எடுக்கப்படுகிறது.



'கடல் புலி' என்று பெயர் பெற்ற சுறாவை எதிர்த்துக் கொல்லக் கூடிய ஒரே கடல் பிராணி இந்த 'டால்பின்' என்னும் 'கடல் பன்றி' தான்!

உலகக் கோப்பை அதிசயங்கள்!

* 1982 ஆம் வருஷம் நவம்பர் 30ம் தேதி. ஆசிய கால்பந்தாட்டப் போட்டியில் வடகொரிய கால்பந்துக் குழுவினர் குவைத் குழுவுக்கெதிராக ஆடும் போது எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி நடந்தது. ஒரு சர்ச்சைக்குரிய 'பெனல்டி' முடிவு குவைத் 3—2 என்ற கோல் கணக்கில் கூடுதல் நேர ஆட்டத்தில் வடகொரியக் குழுவினை வென்று விட்டது. இதனால் கொதிப்புற்ற வடகொரிய ஆட்டக்காரர்கள் தாய் ரெபரிவிஜித்தை மைதானத்திலேயே அடித்து உதைத்துத் துன்புறுத்தவே, போலீஸார் ரெபரிவிஜித்தைக் காப்பாற்றி அழைத்துச் சென்றனர்!

* இப்பொழுது கால்பந்தாட்டத்துக்கு வழங்கப்படும் உலகக் கோப்பை இரண்டாவது கோப்பையாகும். முதல் கோப்பை, உலகக் கோப்பைப் பந்தாட்டக் கழகத்தின் தலைவர் ஜூல்ஸ்ரிமெட் பெயரில் வழங்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டு தன்னிடமே வைத்துக் கொள்ளும் தகுதி பெற்றது.

* 1938 முதல் 1950 வரை 2 வது உலகப் போரின் காரணமாகப் போட்டி நடைபெறவில்லை. கோப்பை 1938 இல் அதை வென்ற இத்தாலியில் தங்கி விட்டது. போரின் போது ஜெர்மெனி இராணுவம் இத்தாலியை முற்றுகையிட்ட போது, நாஜிகளிடமிருந்து கோப்பையைக் காக்க, போட்டிக் குழுவின் உதவித் தலைவரான ஒட்டோரினோ பரஸ்லி அதைப் பாதுகாத்து உலகப் புகழ் பெற்றார். இந்தக் கோப்பையே ஜூல்ஸ் ரிம்மட் கோப்பை என்று பெயரிடப்பட்டது.

* 1966 ஆம் ஆண்டு லண்டனில் போட்டி நடந்த போது, கோப்பை திருடு போய் விட்டது! இதைக் கண்டுபிடித்த பெருமைக்குரியவர்கள் தபால் துறைப் பணியாளரான கார்டி டேவிட் கார்பெட் என்பவரும், அவரது நாயும்!

* 1983 ஆம் ஆண்டு, இந்தக் கோப்பைக்கு மீண்டும் தலைவலி பிடித்தது. திருடு போய் விட்டது. கோப்பையைத் திரும்பக் கொடுத்து போட்டியை நடத்த ஒத்துழைக்கும்படி கால் பந்தாட்ட வரலாற்று வீரர்களும், நிர்வாகிகளும் மனம் உருக வேண்டுகோள் விடுத்தனர். கடைசியில் கோப்பை உருக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. புதிய கோப்பை மீண்டும் உருவாக்கப்பட்டது. இதில் உலகப் புகழ்பெற்ற ஈஸ்ட்மென் கொடாக் கம்பெனி (நியூயார்க்)யும், வில்ஹெல்ம்கிஸ்ட் (மே. ஜெர்மனி) நிறுவனமும் ஆற்றியுள்ள தொண்டு குறிப்பிடத்தக்கது. இதுவே இன்று வரை உள்ள புதிய ரிம்மட் கோப்பை. தங்கத்தால் ஆன இது 1800 கிராம் எடையுள்ளது.

* இந்தக் கோப்பையை வடிவமைத்துக் கொடுத்தவர் ஓர் இத்தாலியர். இதை வடிவமைக்க 53 வல்லுநர்கள் வரை வடிவங்களைச் சமர்ப்பித்தனர். அதில் ஓர் இத்தாலியர் அமைத்த வடிவமே தேர்ந்தெடுக்கப்பட்டது.

* 1982 உலகக் கோப்பை கால்பந்தாட்டத்தில் பல புதிய சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. ஹங்கேரியைச் சேர்ந்த 'ஸப்ஸ்டிட்யூட்' ஆட்டக்காரர் லாஸ்லோகிஸ் 'ஹாட்ரிக்' கோல் போட்டுச் சாதனை புரிந்தார்.



இது எல்சல்வேடார் குழுவுக்கெதிராக அந்த ஸப்ஸ்டிட்யூட் போட்ட சாதனை கோல்கள்! ஆட்டம் தொடங்கி 27 செகண்டில் ஒரு கோல் போட்டுச் சாதனை படைத்தவர் ப்ரியன்ராப்ஸன். இங்கிலாந்து குழுவினைச் சார்ந்த ப்ரியன்ராப்ஸன் பிரான்ஸுக்கு எதிராக இந்தச் சாதனையைப் புரிந்திருக்கிறார்!

* இத்தாலியைச் சேர்ந்த அண்டானியோ காபரினி பெனால்டி ஷாட்டில் நழுவ விட்டதும் ஒரு சாதனை. ஒரு குழு ரிகார்டு ஸ்கோர் கண்டது ஹங்கேரி நாடு 10 கோல்; எல்ஸல்வடார் ஒரு கோல். பெனால்டி கிக்கிலேயே ஒரு பந்தயம் முடிவுக்கு வந்தது; அதாவது பிரான்ஸுக்கும் மேற்கு ஜெர்மனிக்கும் நடந்த பந்தயத்தில்தான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.

* 1930 தொடங்கி 1982ம் ஆண்டு வரை நிகழ்ந்த உலகக் கோப்பைப் பந்தயங்களில் ஸ்பெயினில் நடைபெற்ற 1982ம் வருஷ உலகக் கோப்பைப் பந்தயம்தான் 1,766,277 ரசிகர்களை ஈர்த்து ரிகார்டு கண்டது.

* மெக்ஸிகோவைச் சேர்ந்த அண்டோனியோ கர்பஜால் ஐந்து உலகக் கோப்பைப் பந்தயங்களின் இறுதி ஆட்டத்தில் பங்கேற்கும் தகுதி பெற்றார். இவர் இருபத்தோரு பந்தயங்களில் கலந்து கொண்ட பெருமையோடு 1958, 1962, 1966, 1970 வருஷங்களில் சென்டர் பார்வர்டு ஆடிய பெருமையும் இவருக்கு உண்டு.

* உலகப் புகழ்பெற்ற பீலி பிரேஸில் நாட்டைச் சேர்ந்தவர். மூன்று உலகக் கோப்பைப் பந்தயங்களில் வெற்றி பெற்ற குழுவினில் ஆடிய பெருமை இவருக்கு உண்டு. 1962ம் வருஷ இறுதி ஆட்டத்தில் காலில் அடிபட்டதனால் இவர் பங்கேற்கவில்லை! பீலிதான் நான்கு உலகக் கோப்பைப் பந்தயங்களில் 12 கோல்கள் போட்டுப் புகழ்பெற்றவர்.

* நாற்பது வயதான டினோ ஜாஃப் அந்த வயதிலும் இத்தாலிக் குழுவுக்குக் காப்டனாக இருந்து 1982ல் வெற்றி தேடித் தந்தார்.

* இளம் வயதில் உலகக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டியில் பங்கேற்கும் பெருமை கண்டவர் 17 வயதான நார்மன் ஒயிட்சைட்.

* 1982ம் ஆண்டு டைன்டீஸ் டெலிவிஷன் 'உலகக் கோப்பை; ஒரு காப்டனின் கதை' என்று 90 நிமிடப் படம் ஒன்றைத் தயாரித்தது. அது மேற்கு ஆக்லாண்டிலுள்ள கௌண்டி டர்ஹாம் கால்பந்தாட்டக் குழு 1910ம் ஆண்டில் முதன் முதலில் உலகக் கோப்பை வென்றதைப் பற்றிய வரலாறு.

* தாமஸ் லிப்டன் என்ற கிலாஸ்கோ தொழிலதிபர் 1910ம் ஆண்டில் தம் சொந்தச் செலவிலேயே உலகக் கோப்பைக் கால்பந்தாட்டப் போட்டியை நடத்தியிருக்கிறார். இவருக்கு 1910ம் ஆண்டு 'இத்தாலி நாட்டின் கோமகன்' என்ற கௌரவ விருது வழங்கப்பட்டது.

* ஹெல்மட் ஷோபன் மேற்கு ஜெர்

மனியின் தலைசிறந்த கோச். பதினான்கு வருஷங்கள் மேற்கு ஜெர்மனிக்கு 'கோச்'சாகப் பணியாற்றியவர். 1974ம் வருஷம் மேற்கு ஜெர்மனி உலகக் கோப்பை வென்ற பெருமைக்குக் காரணமானவர்.

* ஹாலந்தைச் சேர்ந்த ராபி ரென்சன்பிரிங் உலகக் கோப்பைப் போட்டியில் ஆயிரமாவது கோலைப் போட்டுச் சாதனை படைத்தவர். 1978ல் ஸ்காட்லாந்துக்கெதிராக ஒரு பெனால்டி கிக்கில் அந்த அபூர்வ சாதனையைச் செய்தார்!

* ஸ்பெயினில் நடைபெற்ற உலகக் கோப்பைப் பந்தயத்தில் குவைத் குழு இறுதி ஆட்டத்துக்கு வந்து சேர்ந்ததும் பட்டத்து இளவரசர் ஷைக் சாட் அப்துல்லா அல்சாப குவைத் கால்பந்தாட்டக் குழுவினருக்குப் பரிசுகளை வாரி வழங்கினார். இருபத்தி நான்கு அங்கத்தினர்கள் கொண்ட குவைத் குழுவில் ஒவ்வொருவருக்கும் காடிலாக் கார், சொகுசு வீடு, ஒரு வீடு கட்டும் மனை, தங்கக் கடிகாரம், ஸ்பா[illegible] வழங்கிக் கௌரவித்தார்.


* 1982ம் வருஷத்தில் பராகுவன் கிளப்புக்கு உருகுவே கோச் லூயிஸ் குபில்லாஸ் வரவழைக்கப்பட்டார். இவரோடு இவரது இரண்டு புதல்வர்களும் வரவழைக்கப்பட்டனர்.

"நேத்து இரவு எங்க வீட்ல 'ஒளியும் எலி'யும் பார்த்தோம்டா!"

"என்னடா சொல்றே...?"

"இரவெல்லாம் தூங்காம வைட்டைப் போட்டுக்கிட்டு எலியை வேட்டையாடிக் கிட்டு இருந்தோம்னு சொல்றேன்!"

— மு. திருநாவுக்கரசு, மொரப்பூர்.



1979 ஒலிம்பியாவின் 'கோச்'சாக லூயிஸ் குபில்லாஸ் பணிபுரிகையில் தென் அமெரிக்கக் கோப்பையை வென்று புகழ்பெற்றது. லூயிஸ் குபில்லாஸ் அர்ஜன்டைனா குழுவுக்குக் கோச்சாகப் பதவி ஏற்கச் சென்றபோது, புதல்வர் ஸட்ரோவுக்கு அந்தப் பதவி கிட்டியது.

* உலகக் கோப்பைக் கால்பந்தாட்டப் பந்தயத்துக்கு 'Ciao' சின்னமாக அமைந்திருக்கிறது. இந்த 'Ciao' மிலான் விளம்பர நிபுணர் லூயியோ பாஸ்கார்டின் கை வண்ணத்தில் படைக்கப்பட்டது. 'ஸிஆயோ' சின்னம் உலகக் கோப்பைப் பந்தயத்தின் போது கொடிகள், பாட்டில்கள், விமானங்கள், டைகள், ஸூட்கேஸ்கள், உடைகள், அலாரம் கடிகாரங்கள், டூத் பேஸ்ட், சைக்கிள், வாசனைத் திரவியங்கள் அனைத்திலும் பவனி வருகிறது. 46 கம்பெனிகள் இந்த 'ஸிஆயோ' சின்னத்தைப் பயன்படுத்தும் உரிமையைப் பெற்றுள்ளன. இதற்காக அந்தக் கம்பெனிகள் 3 லட்சம் டாலர் இத்தாலியிலுள்ள உலகக் கோப்பை நிர்வாகிகளுக்கு வழங்கியுள்ளது. இப்பொழுது 'ஸிஆயோ' ஆபரணங்களிலும் பின்களிலும் வெள்ளி, தங்கம், பிளாட்டினம் ஆபரணங்களிலும் இடம்பெற்றுள்ளது.

* 1994ம் ஆண்டு உலகக் கோப்பைக் கால்பந்தாட்டப் பந்தயத்தை அமெரிக்காவிலுள்ள 22 நகரங்கள் ஏற்று நடத்த முன்வந்திருக்கின்றன.

மியாமியிலுள்ள ஆரஞ்சு பௌல், சிகாகோவிலுள்ள சோல்ஜர் பீல்ட், வாஷிங்டனிலுள்ள கென்னடி ஸ்டேடியம், கலிபோர்னியாவிலுள்ள ரோஸ் பௌல், லாஸ் ஏன்சேல்ஜ் நினைவு அரங்கம் ஆகியவற்றில் கால்பந்தாட்டப் போட்டிகளை நடத்தவுள்ளன.


* நாற்பது வருஷங்களுக்குப் பிறகு முதல் தடவையாக பாப் கான்ஸலர் பயிற்சியளித்த 22 அமெரிக்க கால்பந்தாட்டக் குழுவினர் இத்தாலியில் நடைபெறும் உலகக் கோப்பைக் கால்பந்தாட்டப் போட்டியில் பங்கேற்கின்





• பந்தைக் கைப்பற்றப் போராட்டம்! கோல்கீப்பர் அண்டோனி கபிசாரட்டா. மம்மேட் ரோபெர்டோ. ஃபெர்னாண்டஸ் ஜான் செலுமான்ஸ்.


றவர். அமெரிக்கக் கால்பந்தாட்டக் குழுவில் இடம்பெற்றுள்ள இருபத்தைந்து வயதுள்ள பால் காலிகியூரி அடித்த கோல்தான் அமெரிக்கா உலகக் கோப்பைப் பந்தயத்துக்குத் தகுதி பெறும் வாய்ப்பைப் பெற்றுத் தந்தது. இவர் மேற்கு ஜெர்மனி எஸ். வி. மாப்பன் குழுவினருக்காகவும் ஆடியிருக்கிறார்! ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த பாப்கான்ஸ்லர் பதினொரு வயதிலேயே அமெரிக்காவுக்கு வந்தவர் வின்கான்சின் சர்வ கலாசாலையில் கால்பந்தாட்ட 'கோச்'சாகப் பணிபுரிகிறார்.

* அர்ஜென்டைனாவைச் சேர்ந்த டிகோ ஆர்மாண்டோ மார்டோனா உலகப் புகழ்பெற்ற கால்பந்தாட்டக்காரர். இவரை 'நியூ பீலி' என்றே வர்ணித்தார்கள். அவரது முதல் உலகக் கோப்பை 1982 பந்தயத்தில் (ஸ்பெயின் நாடு) இத்தாலி ஆட்டக்காரர் கிளாடியோ, ரெண்டில் மார்டோனாவைக் கேலி செய்தார்! 'இது நடனம் பயிலும் அரங்கமல்ல!' என்று கெக்கலி செய்தார். உலகப் பந்தயத்துக்குப் பிறகு லீக்மாட்சில் கோயிகோயிச் காலால் மார்டோனாவை உதைத்து இரண்டரை மாதங்கள் விளையாட்டு மைதானத்தை நெருங்க விடாமல் செய்து அவரது இடது முட்டைப் பிறழ வைத்துவிட்டார்! பட்ட காலிலே படும் என்பது போல் 1985ல் வெனிஸுலாவுக்கு ஆட வந்த போது ஒரு கால்பந்தாட்ட விசிறி வலது மூட்டில் உதைத்து விட்டார்! அதிர்ஷ்டவசமாக இடது காலால் ஆடும் அவர் வலது காலை உதவிக்கு மட்டுமே பயன்படுத்தியதால் அதிக அளவு பாதிப்புக்கு உள்ளாகவில்லை.


குட்டி அணில் கற்ற பாடம்
கதை/படம்
அரஸ்
குட்டி அணில் ஒன்று தன் அம்மா அணிலுடன் பெரிய மரத்தின் பொந்தில் வசித்து வந்தது...
அம்மா அணில் குட்டி அணிலுக்கு எவ்வாறு குதிப்பது எப்படி எதிரிகளிடமிருந்து மறைந்து கொள்வது போன்றவற்றைக் கற்றுக் கொடுத்தது...
இத்தனை பாடங்களையும் நான் கற்றுக் கொள்வது அவசியம்தானா மம்மா? நான் மிகவும் களைப்படைந்து விட்டேன்...
நீ ஒரு சோம்பேறி அணில்.. மனிதர்கள் நம்மைச் சூழ்ந்துள்ளார்கள். கற்றுக் கொண்டது போதவே போதாது...



ஒரு நாள்- மாலை நேரம்... குட்டி அணில் மரக் கிளையில் விளையாடிக் கொண்டிருந்தது.. அம்மா அதனைக் கூட்டிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தது.
சூரியன் மறையத் தொடங்கி விட்டான். வெகு தொலைவில் செல்லாதே!
அதே சமயத்தில் குட்டி அணில் விளையாடுவதை ஓர் ஆந்தை மரத்தின் உச்சியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தது.
நல்ல கொழுத்த அணில் இன்றைக்கு ராத்திரிக்கு நல்ல உணவு...


திடீரென்று ஆந்தை குட்டி அணிலை நோக்கிப் பாய...
ஆனால், அம்மா அணில் ஆந்தையைப் பார்த்து விட்டது...!
ஆபத்து! போய் மறைந்து கொள்...
ஒரு நொடியில் குட்டி அணில் அம்மரத்துக் கிளையின் அடியில் மறைந்து கொண்டது.
ஆந்தை குட்டி அணிலைப் பிடிக்க முடியாமல் ஏமாந்து போனது...


சீக்கிரம்! கூட்டிற்குத் திரும்பி வா...
மின்னல் வேகத்தில் குட்டி அணில் கூட்டிற்குள் வந்தது. ஆந்தை மீண்டும் அணிலைப் பிடிக்க முயன்று தோற்றுப் போனது—
உன்னை அந்தப் பறவை அடித்ததா?
இல்லை அம்மா..நீ கற்றுக் கொடுப் பதை இனிமே விருப்பமா கற்றுப்பேன்
குட்டி அணில் நல்ல பாடத்தைக் கற்றுக் கொண்டது. எவ்வாறு தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்வது என்பதைப் பற்றி நன்கு அறிந்து கொண்டது...
—முற்றும்

நான் யார்?

ரா. பொன்ராசன்



சிறகில்லாமல் வானத்திலே பறப்பேன் — மலைச்
சிகரங்களில் கவிந்துகொண்டும் கிடப்பேன்.
கருமையிலே கண்ணன்போலே இருப்பேன் — உண்மைக்
கருணையிலே கர்ணன் போலும் சிறப்பேன்.


உயரிடத்தில் சென்றுவிட்டால் போதும் — சிலர்
உள்ளம் கீழே பார்ப்பதற்கே கூசும்!
உயர் உயரே சென்று விடும்போதும் — என்
உள்ளம் கீழை அணைத்திடவே தாவும்.

ஒலியும் ஒளியும் என்னிடத்தில் பிறக்கும் — என்
உதவியாலே வயலும் வாழ்வும் சிறக்கும்!
உலகத்துக்காய் உருகி நானும் நடந்தால் — சொர்க்க
உலகம் அங்கே மலர்ந்துவிடத் துடிக்கும்


ஆவியாக மாறிவிடும் போதும் — நான்
அழிவதில்லை உயரே வானில் இருப்பேன்
காலம் கொஞ்சம் கனிந்து வந்தால்போதும் — நான்
கரைந்துருகி பூமிநோக்கிப் பாய்வேன்.

என்னை இனம்கண்டு சொல்ல
முடியுமா! நான்
இல்லாவிட்டால் உலகே இல்லை
தெரியுமா?

விடை:
வான்பரப்பில் மிதக்கும் மேகம் நானே — அங்கு
வாணவெடி போடுவதும் நானே
ஆனந்தமாய்ப் பொழியும் மழைக் கெல்லாம் — என்றும்
அடிமுதலாய்த் திகழ்பவனும் நானே.



உடனுக்குடனே வினை முடித்து நில்!



நில், கவனி, புறப்படு! 8

கண்ணில் நிறைந்த கனி மொழிச் செல்வமே, உன்னில் நான் ஓய்விலாது உழைக்கும் கடமைச் செல்வத்தைக் காணுகின்றேன். உடனுக்குடன் எந்தச் செயலையும் முடிக்கின்ற காரணத்தால் ஒளி நிறைந்த வெற்றி உன்னைத் தேடி எங்கும் வருகிறது. உடனுக்குடன் எதனையும் முடிப்பதிலேயே வெற்றியின் 90 சதவீதம் ஒளிந்து கொண்டிருக்கிறது.

'ஊழின் காரணமாக – அதாவது விதியின் காரணமாகச் சில செயல்கள் வெற்றியடைய விடாமல் தடுக்கப்பட்டாலும் துளி கூடச் சோர்வின்றி, உடனுக்குடன் நாம் எடுத்துக் கொண்ட கடமைகளை உறுதியாக நிறைவேற்றினால் நிச்சயம் அந்த விதியையும் தோற்கடித்து நாம் வெற்றி பெற்று விட முடியும்!' – இவ்வாறு வள்ளுவர் கூறுகிறார்.

அன்றன்று நடக்கும் பாடங்களை அன்றன்றே படித்து விடுவது; அன்றன்று கொடுத்த வீட்டுக் கணக்குகளை அன்றைய இரவிலேயே அல்லது சற்று அதிகமாக இருந்தால் மறுநாள் அதிகாலையிலேயே முடித்து விடுவது என உறுதி பூண்டு ஊக்கத்தோடு படிக்க வேண்டும்.

ஒத்தி ஒத்திப் போடுகின்ற எந்தச் செயலும் ஒழுங்கான முழுமையை எந்த நாளிலும் அடைவதில்லை; 'நாளை படிப்போம்,' என்றோ, 'அடுத்த வாரம் படிபபோம்,'

பேரளம் புகழ்மதி


என்றோ எதையாவது மூட்டை கட்டினால் அந்தப் பாடங்கள் அதோடு அவ்வளவுதான்.


திடீரென்று நமக்கு உடல்நலம் குன்றலாம்; அல்லது எதிர்பாராத விருந்தினர் வரலாம். இதன் காரணமாக நாம் எண்ணிய திட்டம் வீணாகலாம். எனவே, இவ்வாறு ஒத்திப் போட்டு ஒத்திப் போட்டுக் காரியங்களை ஒன்றுமில்லாமல் உருக்குலைப்பதை விட மோசமான முட்டாள்தனம் எதுவுமில்லை.

இன்று நடத்திய பாடங்களை இன்றே படித்தால் பாடங்கள் நன்கு புரியும்; ஏதேனும் சந்தேகம் வந்தாலும் மறுநாள் ஆசிரியரிடம் கேட்டால், ஆசிரியர் அதனை விளக்கி விட்டு அடுத்த பாடத்திற்குப் போவார். அதை விட்டு விட்டுப் பத்து நாள் கழித்த பிறகு ஒரு பாடத்தைப் படித்தால் இந்தப் பத்து நாட்களிலேயே நமக்குப் பாதிக்கு மேல் சொல்லித் தந்ததில் மறந்திருக்கும். அதற்குப் பிறகு அதனைப் படிக்கையில் கால்வாசி கூடப் புரியாது. நமக்கு எழுகின்ற சந்தேகங்களை ஆசிரியரிடம் கேட்பதற்கும் நமக்குத் துணிவிருக்காது. பத்து நாட்களுக்குள் அவர் எவ்வளவோ பாடங்களை நடத்தியிருப்பார். பத்து நாட்களுக்கு முன்பே நடத்தியது புரியவில்லையென்றால், அதற்குப் பிறகு நடத்தியவை துளி கூடப் புரியாது. இதனையெல்லாம் கருத்தில் கொண்டு நாம் எந்தச் சந்தேகத்தையும் ஆசிரியரிடம் கேட்காமல் மூட்டை கட்டி வைத்து விடுவோம். பாடங்களைப் புரியாமலே படித்து 'பொட்டை நெட்டுரு' அடித்து, பரீட்சையில் 'வாந்தி' யெடுப்போம். ஏதேனும் ஒரு வார்த்தை மறந்து விட்டாலும் அதற்கடுத்த வார்த்தை கடும் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்து விடும். பதினைந்து நிமிடங்களில் எழுத வேண்டிய விடையை ஒரு மணி நேரம் யோசித்து யோசித்துத் தப்பும் தவறுமாக எழுதி வைப்போம். உடனுக்குடன் அந்தந்தப் பாடங்களை அந்தந்த நாளிலேயே படித்திருந்தால் இந்த உபத்திரவம் நமக்கு நேருமா? எண்ணிப் பார்.



நமக்குப் பெரும்பாலும் எதனையும் ஒத்தி ஒத்திப் போடுவதில்தான் 'சுகம்' இருக்கிறது. 'இன்னும் இரண்டு நாள் கழித்து இந்தப் பாடத்தின் கேள்விகளைக் கேட்பேன்,' என ஆசிரியர் கூறினால், 'இன்னும் இரண்டு நாள் இருக்கிறதே; நாளை





படிக்கலாம்; இன்று புதிய திரைப்படம் ஒன்று வந்திருக்கிறதே, அதற்குப் போவோம்,' என ஒத்திப் போடுகிறோம். சினிமாவுக்குப் போய் விட்டு மறுநாள் படிப்போம் என நினைத்ததை மறுநாளும் படிக்க மாட்டோம். யாரேனும் மாமா பையன் ஊரிலிருந்து வந்திருக்கலாம். அவனோடு ஊர் சுற்றிய அசதியில் அல்லது அவனோடு மொட்டை மாடியில் இரவு ஒரு மணி வரை அரட்டையடித்த அசதியில் அயர்ந்து தூங்கி விடுவோம். இந்த விதத்தில் 'ஒத்திப் போடுதல்' என்ற அரக்கன் நம் உயர்வைக் கொன்று விடுகிறான்.

அன்றைய பாடங்களை அன்றே படிக்காமல் ஒரு மாணவனாகிய நமக்கு வேறு என்ன அலுவல்கள் இருக்க முடியும்? எண்ணிப் பார். நம்மைப் படிக்கவிடாமல் தடுக்கின்ற பிற எதனையும் நாம் விரட்டியடிக்க வேண்டாமா? மாணவப் பருவத்தில் இதை விட நமக்கு வேறு என்ன வேலை இருக்கிறது?

பள்ளிக்குச் செல்லும் நேரத்தில் அவசரம் அவசரமாகப் படிப்பது; அதையும் தாண்டிப் பள்ளிக்குச் சென்ற பின் படிப்பது; ஓர் ஆசிரியர் வகுப்பெடுத்த பின் மற்றோர் ஆசிரியர் வருகின்ற மிகச் சில விநாடிகளுக்குள் சில கேள்விகளைப் படிப்பது; ஆசிரியர் முதல் பெஞ்ச் மாணவர்களிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கும் பொழுது நம்முடைய முறை வருவதற்குள் கிடைக்கின்ற சில நிமிடங்களில் சில கேள்விகளைப் படிப்பது — இப்படி மின்சாரம்போல நாம் இயங்கிக் கொண்டிருப்போம்.

அப்பொழுது நம் மனதுக்குள் என்ன தோன்றும் தெரியுமா? 'அடடா, இவ்வளவு ஈஸியாக இருக்கிறதே. இன்னும் இரண்டு மணி நேரம் கிடைத்தால் கூடப் போதுமே. நன்கு ஒப்பித்து விடலாமே.. இதனை ஏன் நாம் மூட்டை கட்டி வைத்தோம்? கொஞ்சம் முன்கூட்டியே படிக்க உட்கார்ந்திருந்தால் மிகவும் அருமையாகப் படித்திருக்கலாமே!' எனப் பல்வேறு முறைகளில் நம்மை நாமே குற்றக் கூண்டில் நிறுத்தி விசாரணை நடத்துவோம்.

எது எப்படியிருந்து என்ன? நம் முறை வந்தவுடன் நம்மைக் கேள்வி கேட்டவுடன் நமக்கு எல்லாமே மறந்து விடும்; பேந்தப் பேந்த விழிப்போம்; வகுப்பே 'கொல்'லென்று சிரிக்கும். 'மிக எளிய கேள்வியாயிற்றே; இது ஏன் நம் தொண்டையிலிருந்து வர மாட்டேன் என்கிறது?' எனத் திணறுவோம். எவனாவது வாய் கொஞ்சம் அசைப்பானா.. அதை வைத்துக் கொஞ்சம் ஒப்பேற்றலாமே என மற்றவர்கள் வாயைப் பார்ப்போம். இத்தகைய அவலக்

கேடான நிலைமை எதனால் வந்தது? உடனுக்குடன் வினைகளை முடிக்காமல் ஒத்திப் போட்டதால்தானே நேர்ந்தது?

ஒழுங்காகத் திட்டமிட்டு உரிய நேரத்தில் உரியவைகளைப் படிப்பது என்பது வேறு; ஒத்தி ஒத்திப் போட்டுக் கடமைகளை ஆற்ற நினையும் போக்கு என்பது வேறு! ஒழுங்காகத் திட்டமிடுதலில் உரிய காலத்தில் உரிய கடமைகள் உரிய தன்மையில் எப்படியும் நடந்தே தீரும். ஒத்தி ஒத்திப் போட்டுக் கடமையை முடிக்கலாம் என நினைப்பது நமது சோம்பலின் காரணமாக எழுவது; நாம் கையாள வேண்டிய கடமைப் பொறுப்பிலிருந்து நம்மைக் கழற்றிக் கொள்ளும் ஒரு சாக்காக 'ஒத்திப் போடுதல்' என்ற போர்வையை நாம் போர்த்திக் கொள்கிறோம்.

'கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்துத் தன் பொல்லாச் சிறகை விரித்து ஆடும்,' என்பது நீ அறிந்த ஒன்றே. கான மயிலின் ஆட்டம் என்பது ஒழுங்காகத் திட்டமிட்டு உரியவைகளை முடிப்பது போல் சீரானது; சிறப்பானது; செம்மையானது. ஒத்தி ஒத்திப் போட்டு ஒரு காரியத்தை முடிப்பது வான் கோழியின் நடனம் போல் கேலிக்கூத்தானது; நேரத்திற்கு ஏற்றாற் போல் அமைந்தது. இரண்டுமே நடனம்தான். ஆனால் இரண்டையும் 'நடனம்' என்ற பெயரிட்டு அழைக்க முடியுமா? மயிலின் சீரான, கால நிர்ணயத்துக்கு உட்பட்ட செம்மையான பாதப் பதிவுகளைப் பார்க்கும் பொழுதே நம் மனம் அதில் தோயும்; வான் கோழியின் ஒழுங்கற்ற துள்ளல் — உயிர்த் துடிப்பில்லாத பதிவுகள் நமக்கு எரிச்சலைத் தரும். ஒழுங்காகத் திட்டமிடலுக்கும் ஒத்தி ஒத்திப் போடுதலுக்கும் உள்ள வேறுபாடு இதுதான்.

ஒழுங்கான திட்டமிடுதலில் மிக முக்கிய அடித்தளமாக விளங்குவது அன்றைய பாடங்களை அன்றே படித்து விடுவது ஆகும். உடனுக்குடன் வினை முடித்து நிற்கின்ற கம்பீரம்தான் ஒழுங்கான திட்டமிடுதலின் ராஜகோபுரமாகும்.

"பரீட்சை சமயத்துல ஜுரம் வந்தால் தான் 'பரீட்சை ஜுரம்'னு சொல்லிட்டீங்க... இப்ப பரீட்சை முடிந்த பிறகு வந்திருக்கே, இது என்ன ஜுரம் டாக்டர்?"

"ரிஸல்ட் ஜுரம்...!"

— வி. ரேவதி.

இவ்வாறு உடனுக்குடன் வினை முடித்து நிற்காவிடில் இளந்தலைமுறைகளுக்காக அரசாங்கம் இன்று செலவழிக்கின்ற கோடிக்கணக்கான ரூபாய்கள் விழலுக்கு இறைத்த நீராக மாறும். எதிர்காலத்தில் இந்த உலகை இந்த நாட்டை ஆள உள்ள இளந்தளிர்களுக்காக — அவர்களின் அறிவுக் கண் திறப்பதற்காக ஆயிரக்கணக்கான கோடிகளை அரசு அள்ளி வீசுகிறது. அவ்வாறு செலவழிக்கும் பணத்தை நீ சரியான முறையில் பயன்படுத்திக் கொள்கிறாயா? சரியான முறையில் உனக்குக் கற்றுத் தரப்படும் கல்வியை முறையான வழியில் உன் மூளையில் செலுத்திக் கொள்கிறாயா? உடனுக்குடன் உன் வினைகளை முடிக்காமல் உனக்கு அளிக்கப்படுகின்ற அறிவுப் புதையல்களைத் தோண்டியெடுக்கச் சோம்பல் பட்டால் கொஞ்ச காலத்தில் அப்புதையல்கள் எங்கே புதைக்கப்பட்டிருக்கின்றது என்றே புரியாமல் போய் அவை மேலும் ஆழத்தில் அமிழ்ந்து போகும்; நீயும் இடம் தெரியாமல் தடுமாறி இருளில் சிக்கிக் கொள்வாய்.

இளந்தலைமுறையினரைக் கெடுப்பதில் எவை எவை அணிவகுக்கின்றன? அவர்களை வீழ்த்துவதில் எந்த நீர்மூழ்கிக் கப்பல் மிக ஆழத்தில் கொண்டு போய் அவர்களைப் புதைத்து விடுகின்றது? நான்கே நான்கு பொருள்களை அடையாளம் காட்டுகின்றார் வள்ளுவர். 'காலம் நீட்டித்துச் செய்தல், மறதி, சோம்பல், தூக்கம் இவை நான்கும் கெட்டுப் போவோர் விரும்பிச் சவாரி செய்யும்



வாகனங்களாகும்,' என்கிறார் வள்ளுவர்.

> "நெடுநீர் மறவிமடி துயில் நான்கும்
> கெடு நீரார் காமக்கலன்."

என்கிறார் வள்ளுவர்.

இந்த நான்கு கெட்ட வாகனங்களிலும் தலையாய வாகனமாக வள்ளுவர் குறிப்பது 'நெடுநீர்' என்பதைத்தான். 'நெடுநீர்' என்றால் 'காலம் நீட்டித்துச் செயல்படுதல்' — அதாவது 'ஒத்தி ஒத்திப் போட்டு, உடனுக்குடன் வினை முடிக்காமல், செயல்படுதல்' என்பதாகும். தாமதமாகச் செய்கின்ற ஒரு செயல் என்பது மறதி, சோம்பல், தூக்கம் ஆகிய மூன்றையும் விடக் கெடுதியானது என்பதால்தான் அதனைத் தலைமைப்படுத்திக் கூறுகிறார் வள்ளுவர்.

உடனுக்குடன் முடிக்காமல் சற்று ஓய்வெடுக்கக் கருதிய முயல் ஓர் அற்பமான ஆமையிடமே தோற்று விட்டதை நீ அறிவாய். அதனால்தான் ஷேக்ஸ்பியர், 'ஒருமுறை துவங்கப்பட்ட ஒரு செயல் வெல்லப்படாத வரை விடப்படவே கூடாது,' என்று கூறுகிறார்.

உலைக்களத்தில் உருக்கப்படும் இரும்பினை உடனுக்குடன் சம்மட்டி அடி கொடுத்து வளைக்காவிடில் இரும்பு குளிர்ந்து போய் உரிய வடிவத்தைப் பெறாமலே போய் விடும்.

களைகளை ஆரம்பத்திலேயே — தோன்றிய உடனேயே — உடனுக்குடன் களைந்தால் மிக எளிதாக இருக்கும். களைவதைக் கொஞ்ச காலம் ஒத்திப் போட்டால் அக் களைகள் நம்மால் ஒழிக்க முடியா அளவுக்கு விஸ்வரூபமாக வளர்ந்து நம் தோட்டத்தையே, வயலையே வீணாக்கி விடும். தீய குணங்களையும் நம் மனத்திலிருந்து உடனுக்குடன் களையாவிடில் அவை வளர்ந்து நம் மனத்தையே வீணாக்கி விடும்.

ஆன்மீகத் தலைவர்கள், அறிவியல் வல்லுநர்கள், அரசியல் மேதைகள், தத்துவ ஞானிகள், தரணி வென்ற வீரர்கள், இலக்கிய மன்னர்கள் ஆகியோரின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் அவர்களின் வெற்றி உடனுக்குடன் செயல் முடிக்கின்ற அவர்களின் பாங்கில்தான் அமைந்திருப்பதை அறிய முடியும்.

புத்தர் சொகுசான அரண்மனை வாழ்க்கையை இன்னும் சில வருடங்கள் அனுபவித்து விட்டு அதன் பிறகு ஞானத்தைத் தேடலாம் என எண்ணவில்லை. உடனுக்குடன் செயலில் இறங்கினார்; ஓயாத தவத்திற்குப் பின்னர் ஒளியினைக் கண்டார்.

தார் எண்ணெய்க் கட்டியில் யுரேனியத்தை விட சக்தி வாய்ந்த பொருள் இருப்பதாக ராண்ட்ஜென் கண்டுபிடிப்பிலிருந்து அறிந்த க்யூரி தம்பதியினர் அதனைக் கண்டுபிடிக்க உடனடி செயலில் தங்களை ஆழ்த்திக் கொண்டனர்; அதன் பயனாக ரேடியம் கண்டனர்; அதனைக் காணும் வரை அவர்களுக்கு உணவேது; உறக்கமேது?

சன்யாட்சென் சீனாவின் வீழ்ச்சியுற்ற நிலையை வீழ்த்த எண்ணி உடனடி செயலில் இறங்கிப் பத்து முறை புரட்சி செய்து புதிய சீனாவைக் கண்டார்.

பொருளாதார நிலையில் புதிய உலகு காணக் காரல்மார்க்ஸ் 'மூலதனம்' என்ற நூலைப் பதினேழு ஆண்டுகள் துளிக்கூட அயராமல் எழுதினார்; புதிய உலகு கண்டார்.

ஒளிபடைத்த இலக்கியத் தனிரே உயரிய வெற்றி ரகசியம் உடனுக்குடன் வினை முடிப்பதில்தான் உள்ளது என்பது இப்பொழுது புரிகிறதா? அடுத்த மடலில் சந்திக்கிறேன்.

(தொடரும்)


டிரான்சிஸ்டர்

தஞ்சை மாலா





யாரடி நீ
மோகினி.
அம்மாடியோ.. இந்தப்
பெட்டி என்ன, பேய்
மாதிரி, சத்தம் போடுது!
நமக்குக் கிடைத்த
இந்தப் பெட்டியை
வைத்து இந்த
வனவிலங்குகளை
ஒரு கை பார்த்துடணும்!
எந்த மிருகத்தையும் நாம்
மதிக்கவே கூடாது!
பாட்டு கேக்கணும்னு எல்லாம்
நம் காலில் விழுந்து கெஞ்சணும்!
குரங்கு மாமா! அந்தப் பெட்டியின்
கொஞ்சம் பாட்டு கேக்க வையுங்களேன்!
பாட்டு கேக்கணும்னு
ஒரு நார் வாழைப்பழம்,
கொய்யாப்பழம்,
மாம்பழம் எல்லாம்
கொண்டு வாங்க.
எங்களுக்கு
ரொம்ப பசி!


நல்லா காலை அமுக்கிவிடு! நாள் எல்லாம் ஒரேவலி, மாலை பாட்டு கேட்கலாம்!
முயல், மான், வாத்து பறவைகள் கொண்டு வந்த காய்கனிகளைத் தின்று கொழுத்த குரங்குகள் இரண்டும் அகம்பாவம் மிகுந்து அலைந்தன!
யாரை நம்பி நான் பொறந்தேன்? போங்கடா போங்க..
கண்டபடி பாட்டுகளை அலறவைத்து காட்டையே அல்லோலப்படுத்தின.


ஏறாத மலைதனிலே ஜோரான கௌதாரிரெண்டு, தாராளமாய் இங்கேவந்து, ததிங்கிணத் தோம் தாளம் போடுதய்யா!
திடீரென ரேடியோ நின்றுவிடவே.
குரங்குகள் இரண்டும் திருகித்திருகிப்பார்த்தன. தலைக்குமேலே தூக்கி ஆட்டிப்பார்த்தன எதற்குமே ரேடியோ பாடாமற் போகவே, கடைசியில் ஒரு பாறையில் தூக்கிப் போட்டு, சுக்கு நூறாக உடைத்தன! பாட்டரி தீர்ந்து போனவிஷயம் அவைகளுக்கு எங்கே தெரியப்போகிறது?
ரேடியோ பாடாமற் போகவே எந்தமிருகங்களும் குரங்குகளை மதிப்பதே இல்லை, பரிகசித்துப் போயின! கிடைத்த வாய்ப்பை நல்ல முறையில் பயன் படுத்தாதவர்கள் கதியெல்லாம் இப்படித்தான்!

பிருந்தாவனக்

ஐம்பதுக்கு ஆசைப்பட்டால்



மத்தனூர் என்ற கிராமத்தில் முத்து என்பவன் வாழ்ந்து வந்தான். அவனுடைய தொழில் காட்டிலுள்ள சிறு மிருகங்களை வேட்டையாடிப் பக்கத்திலுள்ள நகரத்திற்கு எடுத்துச் சென்று விற்று வருவதுதான்.

ஒருநாள் அவன் வில், அம்பு, சட்டி, வலை முதலியவற்றுடன் வேட்டையாடச் சென்றான். அவனுக்கெதிரே ஒரு முயல் புல் மேய்ந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த முத்து. 'இந்த ஒரு முயல் எதற்கு? இதைப் பின்தொடர்ந்தால் மற்றும் சில முயல்களைப் பிடிக்கலாம்,' என்று எண்ணினான்.

அதனால் முயல் சென்ற திசையில் பின் தொடர்ந்தான் முத்து.

முன்சென்ற முயல் ஐந்து முயல்கள் உள்ள கூட்டத்தில் வந்து சேர்ந்தது. அதைப் பின் தொடர்ந்து வந்த முத்து. 'ஐந்து போதாது. மேலும் பின் தொடர்ந்து சென்றால் ஐம்பது முயல்களைப் பிடிக்கலாம்,' என்று பேராசையுடன் மேலும்பின் தொடர்ந்தான்.

முயல்கள் நடுக்காட்டிற்கு வந்து சேர்ந்தன. அங்கே ஐம்பது முயல்கள் இருக்கின்ற கூட்டத்தை அடைந்தன. இதுதான் தக்க சமயம் என்று எண்ணிய முத்து வலையை விரிக்க எத்தனித்தான்.

அப்போது பயங்கர உறுமல் ஒன்று கேட்டது. அது பசியால் வாடும் ஒரு சிங்கத்தின் கர்ஜனை.

முத்து. 'என் பேராசையால் என் உயிர் போகப் போகிறது.' என்று நினைப்பதற்குள் சிங்கம் அவன் மேல் பாய்ந்தது.

— கே. கௌதம்ராஜ், எலப்பாக்கம்.

இரண்டு கடிதங்கள்



பிரகாஷ், பவித்ரா இருவரும் அண்ணன் தங்கை. பிரகாஷ் இரண்டு மணி நேரம் தான் படிப்பான். மீதி நேரம் எல்லாம் சினிமா, நாடகம், கிரிக்கெட், கதைப்புத்தகம் தான்.

பவித்ரா அப்படி இல்லை. நிறைய நேரம் படிப்பாள். அவள் படிப்பில் பல பரிசுகள் வாங்கியிருக்கிறாள்.

ஒரு நாள் பவித்ரா கதை எழுதி இருந்தாள். அதைப் பிரதி எடுத்து அனுப்புவதற்குப் பேப்பர் வாங்க வேண்டும். அவள் அம்மாவிடம் சென்று, "அம்மா எனக்கு இரண்டு ரூபாய் வேண்டும். பேப்பர் வாங்க வேண்டும் அம்மா," என்றாள்.

அதே சமயம் அவள் அண்ணன் பிரகாஷ் வந்து, "அம்மா எனக்கு இரண்டு ரூபாய் கொடு. சினிமா போகணும்," என்றான். அதற்கு அவன் அம்மா சொன்னாள், "என்னிடம் இரண்டு ரூபாய் தான் இருக்கிறது. நான் யாருக்குடா தருகிறது?"

"எனக்குக் கொடு" பிரகாஷ்.

"பரவாயில்லை, அவனுக்கே கொடுத்து விடம்மா," என்றாள் பவித்ரா.

"நீ நல்ல பொண்ணு. உனக்கு அறிவு இருக்கு. அவனுக்கு இல்லையே." அம்மா சொல்லிக் கொண்டிருந்த போதே தபால்காரர் வந்து இரண்டு கடிதங்களைக் கொடுத்து விட்டுப்போனார்.

பவித்ராவிடம் தந்து, "யார் போட்டிருக்காங்கனு பாரும்மா," என்றாள் அம்மா.

கதைப்பாங்கம்

பவித்ரா பிரித்துப் படித்துவிட்டு, "முன்னாடி நான் எழுதின கதைக்கு நூறு ரூபாய்க்குச் செக்கும், போட்டோ அனுப்பச் சொல்லி லெட்டரும் அனுப்பியிருக்கார் 'நிலவு' ஆசிரியர். இந்த லெட்டர் எங்க ஹெட்மாஸ்டர் போட்டிருக்கார். நான், நீ கொடுக்கிற காசிலே மிச்சம் பிடித்து சஞ்சாயிகால சேர்த்து வைத்தேன். அது 200 ரூபாய் ஆக சேர்ந்து இருக்காம். லீவ் முடிஞ்சு ஸ்கூல் திறக்கிற போது உன்னையோ அப்பாவையோ வந்து வாங்கிட்டுப் போகச் சொல்லி லெட்டர் போட்டிருக்கார் அம்மா," என்றாள் பவித்ரா.

"பார்த்தியாடா. அதுக்கு பேப்பருக்காக தரக்கூடாது அப்படின்னு சொன்னியே இப்ப பார்த்தியா...?" அம்மா.

"என்னை மன்னித்துவிடும்மா. நான் இனிமே இப்படித் தேவையில்லாத செலவு செய்ய மாட்டேன்," என்றான் பிரகாஷ்.

— ரா. ஸ்ரீவித்யா, மயிலாடுதுறை.



ஒரு சமயம் வழியில் ஒரு வைர மோதிரத்தைப் பார்த்தெடுத்த முல்லா, அம்மோதிரம் விலை மதிப்பு மிகுந்தது என்பதை அறிந்ததும் அம்மோதிரத்தைத் தாமே வைத்துக் கொள்ள எண்ணினார்.

ஒருவர் ஒரு பொருளைக் கண்டு எடுத்தால் அந்நாட்டுச் சட்டப்படி அவர் சந்தைக்குப் போய், 'நான் இன்ன பொருளைக் கண்டெடுத்தேன்,' என்று மூன்று முறை கூவி, பொருளுக்கு உரியவர் வந்தால் உடனே பொருளை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.


முல்லாவுக்கு வைர மோதிரத்தின் மேல் ஆசையிருந்தாலும், சட்டத்தை மீற விரும்பாமல், மறுநாள் விடிகாலை மூன்று மணிக்கு, யாருமில்லாத சமயத்தில் சந்தை கூடும் இடத்துக்குப் போய், "நான் ஒரு வைர மோதிரத்தைக் கண்டு எடுத்தேன்," என்று அவசர அவசரமாக மூன்று முறை கூறினார்.

மூன்றாவது தடவை கூறும் போது அங்கு வந்த சிலருக்கு, முல்லா கூறியது தெளிவாகக் கேட்காததால், முல்லாவிடம், "முல்லா, நீங்கள் ஏதோ கூறிக் கொண்டிருந்தீர்களே... என்ன அது?" என்று கேட்டனர்.

அவர்களிடம், "சட்டப்படி மூன்று முறை தான் சொல்ல வேண்டும். நான்காவது தடவை கூறுவது சட்டவிரோதம்," என்று கூறிய முல்லா தம்முடைய விரலில் அணிந்து கொண்ட வைர மோதிரத்தை அவர்களிடம் காட்டி, "எனக்குச் சொந்தமான இந்த வைர மோதிரத்தைப் பாருங்கள்," என்று பெருமையுடன் கூறினார்.

'முல்லாவின் வேடிக்கைக் கதைகள்' என்ற நூலிலிருந்து.

— நல்லாலம் காசிதாசன், கீழ்கொவளவேடு.



ஓர் ஊரில் பிச்சைக்காரன் ஒருவன் வீடு வீடாகப் பிச்சை எடுத்துப் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்தான். அவனிடம் ஒரு பழைய பை இருந்தது.

அவன் ஒரு வீட்டின் வழியே சென்று கொண்டிருக்கையில், 'இந்த வீட்டின் சொந்தக்காரன் பெரும் பணக்காரனாயிருந்தான். ஆனால் இன்னும் பணம் சேர்க்க ஆசை

கொண்டு தன்னுடைய கப்பல்களை வெளி நாட்டுக்கு வியாபாரம் செய்ய அனுப்பினான். ஆனால் பெரும் புயல் அடித்ததால் எல்லாம் நாசமாயிற்று. இப்போது ஏழையாகி விட்டான். ஆனால் நான் அப்படி இருக்க மாட்டேன். எனக்குக் கிடைத்ததைக் கொண்டு திருப்தியாக வாழ்வேன்,' என்று தனக்குள் கூறிக் கொண்டான்.

அப்போது அவ்வழியே சென்று கொண்டிருந்த அதிர்ஷ்ட தேவதை பிச்சைக்காரன் முன் தோன்றி "இதோபார், நீ சொல்வதை நான் கேட்டுக் கொண்டே வந்தேன். இப்போது உன் பையில் நான் தங்கக் காசுகளாகக் கொட்டுவேன். ஆனால் ஒரு எச்சரிக்கை, காசுகள் உன் பைக்குள் விழுந்தால் மட்டுமே தங்கமாகும். அப்படியில்லாமல் கீழே விழுந்தால் காசுகள் அத்தனையும் தூசாகி விடும்," என்று கூறினாள்.

பிச்சைக்காரனும் மகிழ்வோடு ஒப்புக் கொண்டு, தன்னுடைய பையைத் திறந்து வைத்துத் தயாரானான். தேவதையும் அவனுடைய பையில் காசுகளைக் கொட்டிக் கொண்டு வந்தாள். மேலும் பை நிரம்பியவுடன், "உன் பை மிகவும் பழசானதால் போதும் என்று சொல்லிவிடு," என்று எச்சரித்தாள்.

ஆனால் பேராசை பிடித்த அவனோ, "என்னுடைய பைமிகவும் உறுதியானது. இன்னும் காசுகள் போடு, போடு," என்றான்.

காசுகள் பையில் நிரம்ப நிரம்பப் பிச்சைக்காரன் அந்தப் பை மிகவும் பழமையானது என்பதையே மறந்து விட்டான். கனம் தாங்காமல் பை கிழிந்து விட்டது. காசுகள் கீழே விழுந்ததால் எல்லாமே தூசியாகி விட்டது.

பிச்சைக்காரன், "அடடா! நான் எல்லாக் காசுகளும் வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதனால் உள்ளதும் போய் விட்டது. திரும்பவும் பிச்சைக்காரனாகவே ஆகி விட்டேனே," என்று புலம்பினான்.

மூலம்: ஈஸி ராபிட் ரீடர்ஸ்.
தமிழில்: இந்திரா கோபாலன், திருச்சி.

ஏமாற்றாதே! ஏமாறாதே!



ஓர் ஊரில் ஓர் வியாபாரி இருந்தான். அவன் பேராசை பிடித்தவன். அவன் அந்த ஊரில் பலரை ஏமாற்றி இருக்கிறான். அவன் ஏமாற்று வலையில் விழுந்தவர்கள் பலர். அநியாயமாய்த் தங்கள் பொருள்களை இழந்து தவித்தார்கள்.

அந்த மோசடி வியாபாரிக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டுமென்று கந்தன் திட்டமிட்டான். வியாபாரியிடம் சென்றான்.

"ஐயா, நாளை என் வீட்டில் ஒரு கல்யாண விசேடம். சமையலுக்குச் சில பெரிய பாத்திரங்கள் வேண்டும்," என்று கேட்டான். வியாபாரி, "எடுத்துப் போ! இரண்டு நாளுக்கு மேல் நான் வாடகை விடுவதில்லை," என்று அதிகாரத்துடன் சொன்னான்.

கந்தன் பெரிய பாத்திரங்களோடு வீட்டிற்குச் சென்றான். இரண்டு நாள் கழித்து வியாபாரியிடம் வந்து, "உமது பாத்திரங்கள் குட்டி போட்டுள்ளன. வந்து பாரும்!" என்று கூவினான்.

வியாபாரி வந்து பார்த்தான். சில குட்டி பாத்திரங்களோடு பெரிய பாத்திரங்கள் இருந்தன. வியாபாரி மனதிற்குள், 'இவன் சரியான கடைந்தெடுத்த மூட்டாள்!' என்று நினைத்துக் கொண்டான்.

இரண்டு நாள் சென்றது. மறுபடியும் கந்தன் வியாபாரி வீட்டிற்குச் சென்று, "மறுபடியும் என் வீட்டில் விசேஷம் அதனால் பெரிய பாத்திரங்கள் வேண்டும்," என்றான்.

சொன்னதுதான் தாமதம், வியாபாரி வீட்டிற்குள் சென்று இருந்த எல்லாப் பெரிய பாத்திரங்களையும் கொண்டு வந்து கொடுத்து, "இவை குட்டி போட்டால் உடனே கொண்டு வந்து தர வேண்டும்," என்றான்.

கந்தனும், சரி என்று சொல்லி விட்டு எடுத்துக் கொண்டு போய் விட்டான்.

இரண்டு நாள் கழித்து கந்தன் வியாபாரி வீட்டிற்கு வந்து ஓ வென்" அழுதான். வியாபாரிக்குப் பயம் வந்து விட்டது. "என்ன ஆச்சு?" என்று குழப்பமாய்க் கேட்டான்.

அதற்குக் கந்தன், "உமது பாத்திரங்கள் செத்துப் போய்விட்டன," என்று அழுதான்.

வியாபாரி கோபமாக, "மரங்கள், மனிதன், செடிகொடி ஆகியவை இறந்து போகலாம். பாத்திரங்கள் எப்படி இறந்து போகும்?" என்று கேட்டான். கந்தன் அமைதியாக, "முன்பு நான் கொண்டு வந்த போது பாத்திரங்கள் குட்டி போடும். இப்போது இறந்து போகாதா? இது நியாயமா, ஐயா?" என்று கேட்டான்.

வியாபாரி என்ன பதில் சொல்வான்? வாயை மூடிக்கொண்டான்.

— ஜெ. கார்த்திகேயன்,
திருத்துறைப்பூண்டி.



திரும்பி வந்த சட்டை

அழுக்கடைந்த கிழிந்த சட்டையை அணிந்திருந்த சிறுவன் ஒருவன் எதிர்வீட்டில் செந்திலைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தான்.

அவனை ஜன்னல் வழியாகப் பார்த்த வசந்தா, "தம்பி, இதுதான் செந்தில் வீடு. நான்தான் செந்திலோட அம்மா. வந்து உட்காருப்பா," என்றாள்.

"நான் உங்களைத்தான் பார்க்க வந்தேன்," என்று உள்ளே வந்த சிறுவன், "அம்மா, இதுதானே!" என்று கேட்டுக் கொண்டே பையில் இருந்த துணிகளை வெளியே எடுத்தான்.

எங்கோ தொலைந்து போய் விட்டதாகச் செந்தில் காலையில் சொன்ன அதே துணிகள்!

"ஆமாம்... இது எப்படி உன்னிடம் வந்தது?" என்றாள் வசந்தா.

"நான் குமார். செந்தில் வகுப்புதான். நான் ஏழை. என் நிலை கண்டு பரிதாபப்பட்டுச் செந்தில் எனக்காக இதைக் கொடுத்தான். உங்களுக்குத் தெரியாமல் கொடுக்கிறது தப்புன்னு நான் எவ்வளவோ சொன்னேன். செந்தில் கேட்கலே. அதான் திருப்பிக் கொடுக்க வந்தேன். நீங்க செந்திலைத் திட்டாதீங்கம்மா," என்றான் குமார் அடக்கத்தோடு.

குமாரை உட்கார வைத்துவிட்டு வெளியே சென்ற வசந்தா செந்திலுடன் திரும்பி வந்தாள்.

செந்தில் குமாரையும் மேஜை மீது இருந்த உடைகளையும் மாறி மாறிப் பார்த்தான்.

"மன்னிச்சிடும்மா! குமாரை மத்தப் பையன்கள் கிண்டல் பண்றதை என்னால பார்த்துக்கிட்டு இருக்க முடியலை. எனக்குத்தான் ஏகப்பட்ட ட்ரஸ் இருக்கே. உங்களைக் கேட்டால் தருவீங்களோ மாட்டீங்களோங்கிற சந்தேகத்திலதான் நானே..." செந்தில் வார்த்தைகளை முடிக்கவில்லை; அவன் கண்களில் ஈரம் சுரந்தது.

எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த குமார், "அம்மா, நான் வர்றேன். அப்பா தேடுவாங்க," என்று எழுந்தான்.

"குமார், உட்காருப்பா. நேர்மையை விட உயர்ந்த கொள்கை வேறெதுவும் இல்லேப்பா. செந்திலின் உதவி செய்யும் மனப்பான்மையை விட உன் நேர்மை உயர்ந்தது. குமார் இந்த உடைகளை நீயே வச்சிக்க." உடைகளை எடுத்துக் குமாரிடம் கொடுத்தாள் வசந்தா.

நன்றியோடு வாங்கிக் கொண்ட குமாரின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் சுரந்தது.

"குமார், உங்க அப்பாவுக்கு வேற என்னென்ன வேலை தெரியும்?"

"தோட்ட வேலை, சமையல் வேலை எல்லாம் தெரியும் அம்மா. அப்புறம் காரோட்டவும் தெரியும்."

"ரொம்ப நல்லதாப் போச்சு. எங்க வீட்டுக்குக் கூட டிரைவர் இல்லே. நாளைக்குக் காலைல உங்கப்பாவை அழைச்சுக்கிட்டு வா." வசந்தா சொல்ல, குமார் சந்தோஷமாகத் தலையாட்டினான்.

— எஸ். பஞ்சவர்ணம், தஞ்சாவூர்.

ஒரே வீச்சிலே

மூன்னொரு காலத்தில் சிறிய உருவம் கொண்ட தையற்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் உருவம்தான் சிறியது, புத்தியோ மிகப் பெரியது.... அந்த ஊர் மேயரே கோட் ஒன்றை ஒரு நாள் தைக்கக் கொடுத்திருந்தார். அதைத் தைப்பதில் மகா பெருமை அவனுக்கு. இப்படி வேலை மும்முரத்தில் சாப்பாட்டைப் பற்றிய நினைவேயில்லை.

அந்தச் சமயம் தெருவில் ஜாம் விற்கும் பாட்டி, "சுவையான ஜாம், புதிய ஜாம், தித்திக்கும் ஜாம், என்று கூக்குரலிட்டுக் கொண்டே வந்தாள்.

தையற்காரனுக்கு அப்பொழுது தான் அவன் வயிற்றைப் பற்றிய நினைப்பே வந்தது. 'அடடா! நாம் இன்னும் ஒன்றும் சாப்பிடவேயில்லையே! நல்ல ஜாம் விற்கிறது. வாங்க வேண்டும்,' என்று நினைத்து, "இங்கே வா ஜாம் பாட்டி," என்று பாட்டியை அழைத்தான்.

அருகில் வந்தவள் கூடையை இறக்கி விட்டு, "எவ்வளவு வேண்டுமப்பா?" என்று வேர்வையைத் துடைத்துக் கொண்டே கேட்டாள்.

"எனக்கு ஒரு பாட்டில் கொடு," என்று கேட்டு வாங்கி கொண்டு பணத்தைக் கொடுத்தனுப்பினான்.

ரொட்டியைச் சமையலறை அலமாரியிலிருந்து எடுத்து வந்து அதில் ஜாமைத் தடவினான். ரொட்டியை வாயினருகே கொண்டு போனவன், சாப்பிட்டு விட்டால் ஆயாசமாக இருக்கும். கண்கள் சொருகும். ஆகையால் முதலில் மேயரின் கோட்டை ஒரு வழியாகத் தைத்து முடிப்போம். கடைசியில் சாப்பிட்டுக் கொள்வோம், என்று முடிவெடுத்து ரொட்டித் துண்டுகளைப் பக்கத்திலிருந்த மேஜையின் மேல் வைத்து விட்டுக் காரியத்தில் கவனம் வைத்தான். நேரம் போனது தெரியவில்லை.

பட்டென்று அவன் மூக்கில் உட்கார்ந்த ஈ அவன் கவனத்தைக் கவர, மேஜையிலிருந்த ரொட்டியைப் பார்த்தான். அவன் வைத்திருந்த ரொட்டித் துண்டுகளின் மேல் ஈக்களின் பட்டாளம் ஜாம் முழுவதையும் ஒரு கை ருசி பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்ட தையற்காரனுக்குக் கோபம் கோபமாக வந்தது. ஆத்திரத்தில் அவன் கையிலிருந்த ஸ்கேலால் ஈக்களின் மீது மெல்ல ஒரு போடு போட்டான். அவ்வளவுதான், பல ஈக்கள் பறந்தோடின. சில ஈக்கள் அப்படியே ஜாமின் மேல் ஒட்டிக் கொண்டு செத்து மடிந்தன.

செத்த ஈக்கள் எத்தனை என்று கணக்கெடுத்தான், ஒன்று, இரண்டு, மூன்று... அட ஏழு! ஒரே அடியில் ஏழு ஈக்களைக் கொன்ற மாவீரன் இந்த ஊரிலேயே நானாகத்தான் இருக்க வேண்டும். ஒரே வீச்சில் ஏழு பேரைக் கொன்றவன்! சந்தோஷம் தலைககால் புரியவில்லை.

உடனே ஒரு பெரிய பட்டைத் துணியை வெட்டினான். வர்ணத்தைக் குழைத்து அந்தத்துணியின் மேல் பெரிதாக எழுதினான்: 'ஒரே வீச்சில் ஏழு பேரை வீழ்த்திய வீரன்.' அதை எடுத்துத் தன் இடுப்பில் சுற்றிக் கொண்டு குதித்தான்.

மூலம்: பழைய ஜெர்மன் கதை

தமிழில்: எஸ்.சித்ரா



ஏழு பேர்!

"இனிமேல் நமக்கு இந்தச் சாதாரணத் தையல் வேலை தேவையில்லை. பெரிய வீரன் இங்கேயே ஏன் வீணாக அடைந்து கிடக்க வேண்டும்? காட்டுக்குப் போய் நம் முழுத்திறமையைக் காட்டிப் பெரிய ராஜாவாக வர வேண்டாமா? தையல் மிஷினே போய் வருகிறேன்," என்று சொல்லி, அவன் கடையை விட்டு இறங்கி மளமளவென்று காட்டை நோக்கி விரைந்தான்.

அவன் பையில் ஒரு சின்ன வெண்ணெய்ப் பொட்டலம் மட்டும் இருந்தது. வேகமாகக் காட்டு வழியே வந்தவன் மேல் ஒரு சின்னப் பறவை இடறியது. அதைப் பிடித்துத் தன் கோட்டுப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு தொடர்ந்து நடந்தான்.

ஒரு பெரிய மலையடிவாரத்தை அடைந்தான். அந்த மலை மீது ஏறி மறுபுறம் போய் என்ன நடக்கிறது என்று பார்க்க ஆவல் கொண்டவனாய் மளமளவென்று ஏறி மலையுச்சியை அடைந்தான்.

மலையுச்சியில் பயங்கரமான இராட்சசன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவன் தையற்காரனின் இடுப்பில் எழுதியிருந்ததைப் படித்து விட்டு, "என்னது, ஏழு பேரை ஒரே வீச்சில் கொன்ற வீரன் நீயா?" — "என்னோடு போட்டிக்கு வரத் தயாரா?" என்று சவால் விட்டான்.

"நான் தயார்!" தையற்காரன் நிமிர்ந்து நின்றான்.

ஒரு கல்லை எடுத்த இராட்சசன், அதைப் பலம் கொண்ட மட்டும் அழுத்தித் தண்ணீர் வரவழைத்தான்.

திகைத்துப் போன தையற்காரன் அவன் திகைப்பை வெளிக்காட்டாமல், பையிலிருந்த வெண்ணெய்க் கட்டியைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு, "நீ தண்ணீர்தான் வரவழைத்தாய். நான் இந்தச் சின்ன வெள்ளைக் கல்லிலிருந்து பாலை வரவழைக்கிறேன் பார்!" என்று லேசாகப் பிடித்து வெண்ணெயை அழுத்த, அதிலிருந்து நெய் உருகி வழிந்தது.

இராட்சசனுக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது. இருந்தாலும் இரண்டாவதாக ஒரு போட்டியைச் சொன்னான். ஒரு நடுத்தர அளவுள்ள கல்லை எடுத்து வானத்தை நோக்கி வீசினான். அது பல மைல் தூரம் பறந்து போய் அப்புறம் வந்து மண்ணில் விழுந்தது.

"இது போல் இத்தனை தூரத்துக்கு ஒரு கல்லை உன்னால் வீச முடியுமா?" என்றான்.

"நீ வீசிய கல் ஏதோ கொஞ்ச தூரம் போய்த் திரும்ப வந்து விழுந்தது. ஆனால் நான் வீசும் கல் திரும்ப இந்த மண்ணை வந்து தொடாது. அது விண்ணிலேயே வெகு நேரம் பறக்கும், பார்க்கிறாயா?" என்றுரைத்துத் தன் பையிலிருந்த பறவையை எடுத்து வானத்தில் பறக்க விட்டான்.

இதுவரை தோல்வி என்பதையே கண்டறியாத இராட்சசனுக்கு இரண்டு முறை தையற்காரன் ஜெயித்ததைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இருந்தாலும் மூன்றாவதா

கப் போட்டி ஒன்றை சொன்னான். ''நான் இந்தப் பெரிய மரத்தைத் தூக்கிச் செல்வேன். நீ என்னோடு சேர்ந்து இந்த மரத்தைத் தூக்கி வருவாயா?''

''அதற்கென்ன தாராளமாகச் செய்வேன்,'' என்று சொல்லி இராட்சசனை மரத்தின் தண்டுப் பகுதியைத் தூக்கும்படியும் தான் மேல் பகுதியைத் தூக்கி வருவதாகச் சொன்னான். இராட்சசனும் ஒப்புக்கொண்டான். தையற்காரன் இலைகள் நிறைந்த பகுதியை லேசாகப் பிடித்துக் கொண்டு வந்தான். கனமானது அடிப் பகுதிதானே? தையற்காரன் நுனிப் பகுதியைத் தொட்டுக் கொண்டு ஏதோ தானும் மரத்தைச் சுமக்க உதவியது போல பாவனை செய்தான்.

இந்தப் போட்டியிலும் தையற்காரனுக்கு வெற்றிதான். ''நீதான் பெரிய வீரன் ஒப்புக்கொள்கிறேன். எங்கள் குகைக்கு வந்து இந்த இரவை நீ கழித்து விட்டுச் சென்றால், எங்களுக்கெல்லாம் மிகவும் பெருமையாயிருக்கும் வருகிறாயா தம்பி?'' என்று அழைத்தான் இராட்சசன்.

இராட்சசனின் குகை காட்டினுள்ளே அடர்ந்த மரங்களின் நடுவே மிகவும் பெரிதாக அமைந்திருந்தது.

தையற்காரனுக்கும் உணவு பரிமாறி இராட்சசர்கள் நல்ல முறையில் உபசரித்தார்கள்.

சின்ன உருவம் கொண்ட தையற்காரனுக்குத் தனக்குக் கொடுக்கப்பட்ட பெரிய மெத்தை அதிகமாகப் படவே, அவன் அதை விட்டு இறங்கிக் கீழே மூலையில் போய்ப் படுத்துக் கொண்டான். பெரிய இராட்சசன் வஞ்சக எண்ணத்தோடு நடு இரவில் விழித்துக் கொண்டான். பெரிய உருட்டு இரும்பொன்றை எடுத்துக் கட்டிலின் முன்வந்து, ''ஒழிந்தான் பொடியன்!'' என்று ஓங்கி அடித்தான்.

காலி படுக்கையில் அடி விழுந்த சத்தத்தில் தையற்காரன் விழித்துப பார்த்தான். இராட்சசனின் தந்திரத்தை அறிந்து. கொண்டு அந்த இடத்தை விட்டு மெல்ல விலகினான்.

அந்த நாட்டு ராஜாவின் அரண்மனை வழியாக நடந்து வந்து கொண்டிருந்தான் தையற்காரன். அப்பொழுது அந்த வழியே வந்த முதியவர் ஒருவர், ''தம்பி, உன் இடுப்பிலிருக்கும் வாசகத்தைப் படித்தேன். நீ பெரிய வீரன் என்று அறிகிறேன். எங்கள் மன்னர் உன்னைப் போன்ற ஒரு வீரனைத்தான் தேடிக் கொண்டிருக்கிறார். நீ உடனே போய் ராஜாவைச் சந்தித்தால் உனக்கு நல்லது,'' என்று சொன்னார்.

அரசர் அவனுடைய வீரப் பிரதாபங்களைக் கேட்டு மகிழ்ந்தார், ''வீரனே, உனக்கு ஒரு வேலை கொடுக்கிறேன். இந்தக் காட்டில் பல இராட்சசர்கள் வாழ்கிறார்கள். அதில் குறிப்பாக இருவர் வருவோரையெல்லாம் பிடித்துத் தின்று வழிப்போக்கர்களுக்கு ரொம்பத் தொல்லை தருகிறார்கள். அவர்களைக் கொன்று மக்களைக் காப்பாற்ற வேண்டும்,'' என்றார்.

''மகாராஜா, நான் இப்பொழுதே புறப்படுகிறேன். விடை கொடுங்கள்!'' தோள் தூக்கிச் சொன்னான் தையற்காரன்.


''உனக்குத் துணையாக ஒரு நூறு போர் வீரர்களை உடன் அனுப்புகிறேன்.'' அரசர் காவலாளி ஒருவனை அழைத்தார்.

''வேண்டாம் அரசே. ஏழு பேரையும் ஒரே வீச்சில் வீழ்த்திய எனக்கு, கேவலம் இரண்டு ஜீவன்களைக் கொல்ல சக்தியிருக்காதா? நீங்கள் கவலையை விடுங்கள். உங்கள் திருப்திக்காக வேண்டுமானால் பத்து வீரர்களை உடன் அழைத்துப்போகிறேன்.

''நாம் எத்தனை காலம் அடிமைகளாக இருந்தோம்?''

''நாம் என்று என்னையும் சேர்த்துக் கொள்ளாதீர்கள் சார்! நான் சுதந்திர இந்தியாவில் பிறந்தவன் சார்.''

— எம். ராமரத்னம்.





அதுவும் உங்களுக்காகத்தான்: நான் ஒருவனே ஒரு நொடியில் இருவரையும் வீழ்த்தி வெற்றியோடு திரும்புகிறேன், பாருங்கள். வருகிறேன்,'' என்று சொல்லிப் புறப்பட்டான் தையற்காரன்.

பத்து வீரர்களையும், இராட்சசர்கள் தங்கியிருப்பதாகச் சொன்ன இடத்திற்கு வெகு தொலைவிற்கு முன்னமேயே நிறுத்தி வைத்து விட்டு, தையற்காரன் தான் மட்டும் கிளம்பிப் போனான் இராட்சசர்களை நோக்கி.

ஒரு மரத்தினடியில் இரண்டு இராட்சசர்களும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தனர் பூதாகாரமான தோற்றத்தோடு. பயங்கரமாகக் 'கொர் கொர்' என்று குறட்டைச் சத்தம் நடுநடுங்க வைத்தது. தையற்காரன் அவர்கள் படுத்திருந்த மரத்தினடியிலிருந்து மெல்ல ஏறி மரத்தின் உச்சியில் யார் கண்ணுக்கும் தெரியாமல் பதுங்கி உட்கார்ந்து கொண்டான்.



சிறிது நேரங் கழித்து மர உச்சியிலிருந்து ஒரு கல்லை எடுத்து ஓர் இராட்சசன் மேல் போட்டான். அவன் விலுக்கென்று விழித்துக் கொண்டு, ''ஏண்டா என்னை அடித்தாய்?'' என்று மற்றவனைப் பார்த்துக் கேட்டான்.

''நானா? நான் பேசாமல் தூங்கிக் கொண்டிருக்கிறேன். கனவு கினவு கண்டாயா?'' என்று கேட்டான் மற்றவன்.

''இருக்கலாம்,'' என்று சொல்லித் திரும்ப இருவரும் படுத்துத் தூங்க ஆரம்பித்தார்கள்.

இன்னும் சிறிது நேரம் பொறுத்துத் தையற்காரன் இருவர் மேலேயும் சுள்ளிகளைப் பொறுக்கி ஒரே சமயத்தில் போட்டான். அடிபட்ட இருவரும் விழித்துக் கொண்டனர்.

''ஏண்டா அடிக்கிறாய்?'' என்று ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டனர்.

'நானா? நீயா?' என்று போட்டி எழுந்தது. கடுமையான கைகலப்பு. உச்சக்கட்டத்தில் ஒருவன் மேல் ஒருவன் விழுந்து கழுத்தை நெரித்துக் கொண்டனர்.

இருவரும் போட்ட சண்டையில் காடே நடுங்கியது. ஒருவர் பின் ஒருவராக இருவரும் பரலோகம் அடைந்தனர்.

செத்து விழுந்த இருவரின் மார்பிலும் தையற்காரன் தன் கத்தியால் கீறி விட்டு, என்னவோ இவனே இருவரையும் வீழ்த்தியது போல் பாவனை செய்து கொண்டு அந்த இடத்திலிருந்தே, உடன் வந்த வீரர்களை அழைத்தான். ''வீரர்களே வாருங்கள். ஒழிந்தார்கள் இராட்சசர்கள்!'' என்று கும்மாளமிட்டான்.

வந்து பார்த்தவர்களுக்கு ஒரே ஆச்சரியம்! இரண்டு இராட்சசர்களைக் கொன்ற வீரன் என்று அந்த ஊரில் புகழ்பெற்றான்.

ராஜாவுக்குத் திருப்தி ஏற்படவில்லை. அவனுக்கு மற்றொரு சோதனை வைத்து, அதிலும் அவன் ஜெயிக்கிறானா என்று பார்க்க ஆசைப்பட்டார்.

''ஒரு பெரிய காண்டாமிருகம் இந்தக் காட்டில் வசித்து வருகிறது. அது மிகவும் கொடியதாக விளங்குகிறது. நீ அதை எப்படியாவது கொன்று வர வேண்டும்,'' என்று சொன்ன ராஜா தொடர்ந்து,



"அப்படி செய்து விட்டாயானால் உயர்ந்த பரிசு பெறுவாய்," என்று ஆசை வார்த்தை காட்டினார்.

திரும்பப் பத்து வீரர்களை உடன் அழைத்துக் கொண்டு கிளம்பினான் தையற்காரன். அவர்கள் பத்துப் பேரையும் காட்டின் எல்லையிலேயே நிற்க வைத்துத் தான் மட்டும் வழக்கம் போல் உள்ளே போனான்.

காட்டினுள் போனதும் தடதட வென்று பெரிய உருவம் ஒன்று ஓடி வருவதைப் பார்த்தான். அதுதான் ராஜா சொன்ன காண்டாமிருக மென்று இனம் கண்டு கொண்டான்.

காண்டாமிருகம் படு வேகமாகத் தையற்காரனை நோக்கிக் கொம்பை நீட்டிக் கொண்டு ஒரே குத்தாய்க் குத்தி அவன் குடலைச் சரிய வைக்கும் நோக்கத்தோடு பாய்ந்து வந்தது.

தையற்காரன் சடாரென்று அதன் எதிலிருந்து நகர்ந்து பக்கத்திலிருந்த மரத்தின் மீது ஏறினான். வேகமாக வந்த மிருகம் மரத்தின் மீது மோதி அப்படியே கொம்பு முறிந்து செத்து விழுந்தது. அது ஓடி வந்த வேகம் அதற்கே எமனாய் விடிந்தது.

உடனே தையற்காரன் தான் கொண்டு வந்த பெரிய கயிற்றால் காண்டாமிருகத்தின் உடலைச் சுற்றினான்.

"ஆ வெற்றி, வெற்றி! கொன்று விட்டேன் காண்டாமிருகத்தை!" என்று கூக்குரலிட்டான்.

வந்து பார்த்தவர்கள், "இவன் சரியான வீரன்தான்!" என்று மெச்சினார்கள்.

இப்பவும் ராஜா திருப்திப்பட வில்லை. எதிலும் மூன்று முறை போட்டி வைக்க வேண்டுமென்று சொல்லி, மூன்றாவதாக ஒரு போட்டி அறிவித்தார்.

காட்டுப் பன்றி ஒன்றைப் பிடிக்கும் போட்டி.

குட்டி யானை மாதிரி ஒரு பெரிய காட்டுப் பன்றி வயற்காட்டுக்குள் புகுந்து அட்டகாசம் பண்ணிக் கொண்டிருந்தது. "அதைப் பிடித்து அடைக்க வேண்டும். முடியுமா?"


"முடியும்," என்று ஒப்புக் கொண்டு ஒரு பெரிய இரும்புக் கூண்டு செய்யச் சொன்னான் தையற்காரன்.

அந்தக் கூண்டுக்கு இரண்டு கதவுகள். ஒன்று பெரியது. எதிர்ப்பக்கம் தையற்காரன் நுழைகிற மாதிரி சின்ன வாசல். காட்டுப்பன்றி வரும்வழியில் அந்தக் கூண்டை வைத்தான். அதைச் சீண்டி விட்டுத் தன்னைத் துரத்துகிற மாதிரி செய்தான். காட்டுப் பன்றி துரத்தும் போது பெரிய வாசலில் புகுந்து சின்ன வாசலில் வெளியே தப்பி வந்து விட்டான் தையற்காரன். துரத்தி வந்த காட்டுப் பன்றி பெரிய வாசலில் கூண்டுக்குள் நுழைந்து, சின்ன வாசல் வழியே வெளியேற முடியாமல் திணறிய போது, பெரிய வாசல் கதவைச் சடக்கென்று அடைத்து விட்டான்.

காட்டுப்பன்றி கூண்டுக்குள் மாட்டிக் கொண்டது. தையற்காரனின் புத்தி சாதுரியத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்த ராஜா அவர் மகளையே தையற்காரனுக்கு மணமுடித்து வைத்தார்.

தையற்காரனும் அவன் மனைவியும் பல்லாண்டு காலம் சந்தோஷமாக வாழ்ந்தனர்.

தேசியக் கொடி



சிறுசிறு துண்டாய் இந்நாடு
சிதறிக் கிடந்த காரணத்தால்,
'ஒன்றே நாடு, இனம், மக்கள்

ஒன்றே எல்லை, மொழி, இன்னும்
எல்லாம் ஒன்றே,' எனக்கூறும்
இனிய 'தேசியம்' இல்லை;
எனவே தேசி யக்கொடியும்
இருந்த தில்லை ஒருபோதும்!

வங்கப் பிரிவினைச் சமயத்தில்
வெகுண்டு எழுந்த இந்தியர்கள்
'தேசி யத்தை வளர்த்திடவே
தேவை சொந்தக் கொடி,' என்றார்!

சச்சீந் திரநாத் போஸ் என்பார்
சிவப்பு மஞ்சள் பச்சை எனும்
மூன்று பட்டை தனில்பச்சை
மேலே வைத்துக் கொடிதந்தார்!
எட்டு மாநிலம் தனைக்குறிக்க
எட்டுத் தாமரை பச்சையிலே;
இடையாம் மஞ்சள் பட்டையிலே
எழுத்தில் வந்தே மாதரமாம்;
இந்து முஸ்லிம் தனைக்குறிக்க
இருந்தன சிவப்பில் இடவலமாய்ச்
சூரிய னும்பிறைச் சந்திரனில்

சேர்ந்த விண்மீன் உருவங்களாம்!
அதுவே நமது முதற்கொடியாம்;
அதனை இந்த நூற்றாண்டின்
ஆறாம் ஆண்டின் மாதம் அந்த
ஆகஸ்ட் ஏழாம் தேதியன்று
கல்கத் தாவின் மையம்எனும்
கிரீன்பார்க் என்ற இடத்தினிலே
'ஏந்தல் சுரேந்திர நாத்பானர்ஜி
ஏற்றி வைத்தார் முதன்முதலாய்!

குண்டு செய்யும் முறைதனையே
கற்கப் பாரிஸ் நகர்சென்ற
ஹேமச் சந்திரர், சவர்க்காரும்,
காமா அம்மை உடன் சேர்ந்து
எட்டுத் தாமரை தனில்ஏழை
எளிதாய் விண்மீன் எனமாற்றிக்
கொடியில் சிறிய மாற்றம்தனைக்
கொண்டு வந்தே ஸ்டட்கார்ட்டில்
நடந்த உலகச் சோஷலிச
நல்ல பெரிய மாநாட்டில்
ஏழாம் ஆண்டு காமாவும்
ஏற்றி வணக்கம் செய்தாரே!

அடுத்த தாக அன்னிபெசன்ட்
அம்மை வகுத்த தன்னாட்சி
இயக்கம் வந்தது பதினாறில்;
இனிதாய் அவரும் கொடிதனையே
நான்காய் மடித்தால் ஒருபங்கில்

பிறந்த கதை

-ஜி.ஜெயராமன்


நீல வண்ண 'யூனியன்ஜேக்'
தனையே இடது மேல்மூலை
தன்னில் வைத்துப் பிறஇடத்தில்
சிவப்பு பச்சை எனமாறிச்
சிவப்பு ஐந்தும் பச்சையிலே
நான்கு பட்டை தீட்டி, அதில்
நட்சத் திரங்கள் ஏழுடனே
வலமேல் மூலை தனில்பிறையில்
விண்மீன் வைத்துக் கொடிதந்தார்!

இருபத் தொன்றாம் ஆண்டினிலே
இன்னொரு மாற்றம், மூவண்ணக்
கொடியாய் இன்று நாம்காணும்
கொடியின் துவக்கம் அதுவேதான்!
இந்தக் கொடியை ஆந்திரத்தின்
இளைஞன் ஒருவன் வரைந்தானாம்!
அண்ணல் காந்தி சொன்னதுபோல்
அதிலே மாற்றம் சிலசெய்தார்!
வெள்ளை மேலே, இடையினிலே
விளங்கும் பச்சை தனில்ராட்டை,
அடியில் சிவப்பு எனவைத்தார்,
அதுவே மேல்கீழ் வரிசையிலே
மற்றோர், முஸ்லிம், இந்துஇன
மக்கள் சேர்ந்த நிலைகாட்டும்!

ஒற்றை நிறமாம் காவியிலே
உயரே இடது மூலையிலே
இராட்டை தீட்டிக் கொடிஅமைக்க
இடையில் முப்பத்து ஒன்றினிலே
எண்ணம் ஒன்று வந்தது. அதை
எவரும் ஏற்க வில்லைஎன்போம்!

அந்த ஆண்டு தனில்மீண்டும்
அழகாய் ஆகஸ்ட் முதல்நாளில்
மேல்செங் காவி இடையினிலே
மேலாம் வெண்மை, அதில் ராட்டை,
அடியில் கறுத்த பச்சையுமே
அமைத்துக் கொடியை ஏற்றினரே!
அதுவே காங்கிரஸ் கொடிஎன்றே
அழைக்கப் படுதாம் இன்றுவரை!

நாற்பத் தேழாம் ஆண்டினிலே
நாடு விடுதலை பெற்றதனால்
விருப்பம் போலவே நாம்மூன்று
வண்ணக் கொடியாம் அதிலிருந்த
அழகு ராட்டை தனைநீக்கி
அந்த இடத்தில் நீலநிற
அசோகச் சக்கரம் தனைவைத்தே
அரசியல் நிர்ணய சபைகூடி
இருபத் திரண்டு ஜூலையிலே
இந்திய தேசி யக்கொடியாய்
அங்கீ காரம் செய்ததுவே
அதுவே நமது குடியரசின்
ஏற்றம் மிக்க சின்னம். அதை
ஏற்றிப் போற்றிப் பணிந்திடுவோம்!





பாத

"மகான் வருகிறார், மகான் வருகிறார்..." என்று எங்கும் பேச்சு. அந்த மகானுக்குத் தக்க வரவேற்பு வழங்க வேண்டும் என்ற ஆவலில் ஒரு பரபரப்பு வெளிப்பட்டது.

"மகான் வரும் வழியில், படிகளில் நான் பளிச்சென்று ஒளிர்வேன்," என்றது சிவப்பு ரத்தினக் கம்பளம்.

"மகான் வரும்போது மகிழ்ச்சியுடன் மங்கல ஒலி எழுப்புவேன் நான்," என்றது குழல்.

"மகானின் திருமேனி மீது மணம் வீசுவேன் நான்," என்றது பன்னீர் செம்பு.

"மகான் வந்ததும் அவர் என்னைத் தான் முதலில் தீண்டுவார்," என்று பெருமையுடன் பேசியது சந்தனக் கிண்ணம்.


"ஒருவேளை என்னை முதலில் தொடலாம்," என்றது, மலர்த்தட்டு.

மகானை வரவேற்பதில் ஒரு போட்டியும் மகானின் அருளைப் பெறுவதில் ஒரு வேகமும் காட்டின எல்லாம்.

வெகு நாட்களாகப் பரணிலே இருந்தது ரத்தினக் கம்பளம். மேலெல்லாம் ஒரே புழுதி.

குழலோ அறை மூலையில் உறைக்குள் இருந்தாலும் தூசு படிந்து கிடந்தது.

பன்னீர்ச் செம்பு பெட்டிக்குள்



சேவை

கிடந்தது. ஆனாலும் பளபளப்புப் போதாது.

சந்தனக் கிண்ணத்தில் பழைய கறை கொஞ்சம் இருந்தது.

மலர்த் தட்டும் பொலிவோடு இல்லை.

ரத்தினக் கம்பளத்தைப் பார்த்தது சந்தனக் கிண்ணம். "ஐயய்ய. உன் முதுகிலே எவ்வளவு அழுக்கு!" என்று பரிகாசம் செய்தது.

"கம்பளத்தைச் சொல்லப் போய் விட்டாயே. உன் கழுத்தெல்லாம் கறை தெரியுமா?", என்றது குழல். ஏளனமாக.

"குழலுக்குத் தன் தூசு தெரிய வில்லை போலிருக்கிறது!" என்றது மலர்த்தட்டு.

பழைய துணி ஒன்று வெளியே வந்தது. ஓரளவு கந்தல்தான். ஆனாலும் சுத்தமாக இருந்தது.

முதலில் மலர்த் தட்டைத் தொட்டது துணி. பளபளவென்று துடைத்தது.

தட்டு வெளுத்தது. ஆனால் துணி சற்றே அழுக்கடைந்தது.

அடுத்ததாகப் பன்னீர்ச் செம்பைத் தொட்டது துணி. அதை நன்றாகத் தடவித் துடைத்தது.

பன்னீர்ச் செம்பு அழுக்கு நீங்கிப் பளபளத்தது. ஆனால் துணி மேலும் கொஞ்சம் மங்கியது.

அப்புறம் சந்தனக் கிண்ணத்தை அடைந்தது துணி. கறை போக அழுந்தத்துடைத்தது. கிண்ணம் வெளுத்தது. துணியிலோ அழுக்கு ஏறியது.

குழலை நெருங்கியது துணி. மேலே இருந்த தூசு நீக்க உதவியது. குழல் ஒளிர்ந்தது. துணியோ வெளுப்பு மங்கியது.


அப்புறம் ரத்தினக் கம்பளத்தை அடைந்தது. தட்டித் தட்டி அதன் மீது இருந்த புழுதியையெல்லாம் ஓட்டக் களைந்தது.


ரத்தினக் கம்பளம் கம்பீரமாகப் பட்டொளி வீசியது. துணியோ உரு மாறி, நிறம் மாறிக் கறுத்தது.

"நேரம் ஆயிற்று. மகான் வரும் நேரம் ஆயிற்று," என்று எங்கும் ஒரே பரபரப்பு.

ரத்தினக் கம்பளம் தன்னைப் பெருமையுடன் பார்த்துக்கொண்டது. செம்பும் கிண்ணமும் தட்டும் ஒன்றையொன்று பார்த்துப் புன்னகை வீசின. குழலோ உற்சாகத்தில் சீட்டி அடித்துப்

தம்பி சீனிவாசன்





பார்த்துக் கொண்டது.

திடீரென்று எல்லாம் முணுமுணுத்தன.

''சுத்தமான இடத்திலே அழுக்கு இருக்கலாமா?'' என்று துடிப்பாய்ப் பேசியது கம்பளம்.

''ஆமாம், ஒரே கறுப்பு. அதோடு அழுக்கு. தள்ளிப் போ!'' என்று கீச்சிட்டது குழல்.

''ஐயோ கந்தலே, அழுக்கு நாற்றமே!'' என்று பன்னீர்ச் செம்பு வார்த்தையை வீசித் தெளித்தது.

''பார்வையிலே படாதே,'' என்றது தட்டு, படபடப்பாக!

உள்ளே, மறைவிலே, தயங்கி, ஒதுங்கியது துணி.

மறுபடியும் ஒரு பரபரப்பு.

''மகான் வந்துவிட்டார்!''

''மகான் வந்துவிட்டார்!''

வரவேற்க முந்திக் கொண்டன எல்லாம்.

ரத்தினக் கம்பளம் விறைத்து விறைத்து நின்றது.

குழல் திடீரென்று ஒலித்தது.

பன்னீர்ச் செம்பு உயர்ந்து, கவிழ்ந்தது.

சந்தனக் கிண்ணமும் மலர்த் தட்டும், 'நான் முன்னே,' 'இல்லை, நான்தான் முன்னே,' என்பது போல முந்தின.

மகான் திருப்பாதங்களை எடுத்து வைத்தார். விறைத்த ரத்தினக் கம்பளத்தின் ஓரம் ஒரு பாதத்தில் பட்டது. அதே நேரத்தில் திடீரென்று ஒலித்த குழல் அந்தப் பாதத்தைச் சற்றே திடுக்கிட வைத்தது.

அதனால் ஏற்பட்ட தடுமாற்றத்தில் மகானின் திருமேனி தளர்ந்து அசைந்தது.

முந்திக் கொண்ட மலர்த் தட்டும் சந்தனக் கிண்ணமும் தமக்குள் மோதின.

சந்தனம் கீழே சிதறியது, மகானின் காலிலே சில துளி தெறித்தது.

''அடடா! அடடா!'' என்று அலறினார்கள் அன்பர்கள்.

''சந்தனத்தைத் தூர வையுங்கள்.''

''மலர்த்தட்டை நகர்த்துங்கள்.''

''இப்படியா திடீரென்று குழல் ஒலிக்கும்?''

''நல்ல ரத்தினக் கம்பளம். இதை நேராக இழுத்துவிட வேண்டும்.''

''துடைக்க ஒரு துணி இல்லையா?''


உள்ளே மறைவில் இருந்த துணி கண்ணிலே பட்டது.


மகானின் பாதங்களைத் துடைக்கத் துணி உதவியது. துணி மகிழ்ந்தது.

மகான் அதைத் தனது திருக்கரத்தால் மெல்ல எடுத்தார்.

ஆத்திரத்துடன் முந்திக் கொண்ட யாவும் அப்பால் தள்ளப்பட்டன.

அவை ஒதுக்கித் தள்ளிய துணிக்கோ மகானின் தரிசனம் கிடைத்தது. தரிசனம் மட்டுமா? பாத சேவை செய்யும் வாய்ப்பும் கிடைத்தது. மகானின் ஆசியும் கிடைத்தது.


வர்த்தமான நகரில் ஆண்டு வந்த வீர புஜனுக்குப் பல மனைவியர் இருந்தும்...
குணவாரி! எனக்குப்பின் நாட்டை ஆள மகன் பிறக்கவில்லையே...
பட்டத்தரசி குணவாரி...
ராஜ வைத்தியரிடம் சொல்லுங்கள், மன்னா!
யார் அங்கே! வைத்தியரை அழைத்து வா!
மந்திர அம்புகள்
கதை: ஆனந்தி
படம்: விஜு
அரசர் கட்டளைப்படி வைத்தியர்...
ராணிகளே!, பச்சிலைகளால் மருந்து செய்து மந்திரம் ஓதித் தருகிறேன், பெற்றுக் கொள்ளுங்கள்...
அந்தச் சமயம் மன்னரும் குணவாரியும் கோயிலுக்குச் சென்றிருந்தனர்...
இறைவா! மன்னர் மனம் மகிழ் மகனைக் கொடு!
அரண்மனை திரும்பிய மன்னர்...
என்ன இது! பட்டத்தரசிக்கு அல்லவோ முதலில் மருந்து தந்திருக்க வேண்டும்!



வைத்தியர் பயந்து போய்...
அரசே! மன்னியுங்கள்... கோயிலிலிருந்து வருகிறீர்கள். ஒரு குறைவும் பட்டத்தரசிக்கு நேராது...
வைத்தியர் மறுபடி மருந்து செய்தார்...
பட்டத்தரசி! கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு இதைச் சாப்பிடுங்கள்...
இளைய ராணிகளுக்குக் குழந்தைகள் பிறந்தன...
என் செல்வங்களா!
பட்டத்தரசி தாமதமாக மருந்து அருந்தியதால் அவளுக்குச் சிலகாலம் சென்றே குழந்தை பிறந்தது...
குணவரி! பட்டத்து இளவரசன் பிறந்ததால் ஊரே திருவிழாக் கோலம் பூண்டிருக்கிறது!
குணவரி கவலையுடன்...
மன்னா! குழந்தையின் தோள்களைப் பாருங்கள்...



மன்னர் பார்த்தார்...
அட! இவனுக்குத் தோள்களில் கொம்பு முளைத்திருக்கிறதே! இது தெய்வச் செயல்! சிருங்கபுஜன் என்று இவனுக்குப் பெயரிடுவோம்!
இளவரசர்கள் நன்கு படித்து, வளர்ந்தார்கள்...
எல்லாரையும்விட சிருங்கபுஜன் புத்திசாலியாக இருந்தான். ராஜகுரு...
படிப்பில் எப்படியோ அப்படியே போர்க்கலையிலும்! அம்பெய்வதில் உனக்கு நிகர் யாரும் இல்லை!
மற்ற அரசகுமாரர்களுக்குப் பொறாமை உண்டாயிற்று...
சிருங்க புஜனே எப்போதும் ஜெயிக்கிறான்...
அப்பாவுக்கு அவன் மேல்தான் ஆசை...
மன்னர் வீரபுஜனின் ராணிகளுள் ஒருத்தி ஹம்ஸலேகா...
அம்மா! மன்னர், மூத்தவர்களான எங்களை ஒதுக்கிவிட்டு, இளையவனான சிருங்கபுஜனுக்கே பட்டம் கட்டப்போகிறாராமே?



ஹம்ஸலேகா அதிர்ச்சி அடைந்து...
அதெப்படி? எல்லோருக்கும் முன்னதாகப் பிறந்த நீதானே மூத்தவன்? உனக்குத்தானே பட்டம் கட்ட வேண்டும்...
... நிர்வாசா! நாம் பேசாமல் இருந்தால் மோசம் போவோம்! அரசருக்குப் பட்டத்தரசி மீதும் சிருங்கபுஜன் மீதும் வெறுப்பு ஏற்படச் செய்ய வேண்டும்...
நீதான் யோசனை சொல்லணும், அம்மா!
மன்னர் வீரபுஜனைத் தனிமையில் சந்தித்த போது, ஹம்ஸலேகா...
மன்னா! உங்கள் உயிருக்கு ஆபத்து வரக்கூடாதே என்றுதான் எனக்கு ஒரே கவலை...
ஏன், என்ன நடந்தது?
சொல்லவே தயக்கமாய் இருக்கிறது... கட்டளை யிடுவதால் சொல்லுகிறேன்... பட்டத்தரசியும் சுரவிதத்தனும் சேர்ந்து தங்களைக் கொன்று விட்டு சிருங்கபுஜனை அரசனாக்கச் சதி பண்ணுகிறார்கள்....
அரசர் மனம் துணுக்குற்றது... தூக்கமின்றித் தவித்தார்...
அப்படியும் இருக்குமா? உண்மையை எப்படி அறிவது?


ஹம்ஸலேகா தன் சதித்திட்டத்தைத் தொடர்ந்தாள்... ...தாதியை அழைத்து...
ராஜகுமாரன் திருங்கபுஜனுக்கு ஆபத்து வரலாம் என்று குணவாரியிடம் கூறிவிட்டு வா...
தாதி சொன்னதைக் கேட்டுப் பயந்து போனாள் குணவாரி...
எனது நம்பிக்கைக்குரிய சூரஸித்தனிடம் கூறி எச்சரிக்க வேண்டும்.
குணவாரி, அந்தப்புரத்துக்கு சூரஸித்தனை அழைத்து வரச் செய்தாள்...
சூரஸித்தா! ஏதோ சதிகள் நடக்கின்றனவாம். சிருங்கபுஜனை நீதான் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.
கவலைப் படாதீர்கள்...
சூரஸித்தன் விடைபெற்றுச் செல்லும்போது குணவாரியின் அந்தப்புரத்துக்கு வந்த மன்னர் வீரபுஜன்...
சூரஸித்தன் எதற்காகப் பட்டத்தரசியைப் பார்த்து விட்டுப் போகிறான்? ஏதாவது சதி நடக்கிறதோ? ஹம்ஸலேகா கூறியது உண்மைதானோ?
மற்ற அரசிகளிடமும் விசாரித்தார் மன்னர்...
ரத்னா! ஏதேதோ காதில் விழுகிறது... அரண்மனையில் என்ன நடக்கிறது? உனக்கு ஏதாவது தெரியுமா?


ரத்னாதான் கேள்விப் பட்டதைக் கூறினாள்...
சூரஸிதத்தன் துணையோடு குணவாரி தன் மகனை அரசனாக்க முயற்சி செய்வதாக...
இதற்குச் சதி செய்வானேன்? நானே சிருங்கபுஜனைத் தானே வாரிசாக எண்ணி -யிருக்கிறேன்!
சிருங்கபுஜன் இளைஞன்தானே... அவனை முன் வைத்து, சூரஸிதத்தனும் குணவாரியும் தாங்களே நாட்டாளத் திட்டம் தீட்டுகிறார்களாம்... உங்கள் உயிருக்குக் கூட ஆபத்து என்று வதந்தி...
மன்னர் வீரபுஜன் மனத்தில் சந்தேகம் வேரூன்ற...
யார் அங்கே? குணவாரியை அவள் அரண்மனை -யிலேயே சிறை வையுங்கள்...
சிருங்கபுஜன் வேதனை அடைந்து தந்தையை அணுகி...
அப்பா! என்ன இது? என் தாயை எதற்காகச் சிறைப் படுத்தியிருக்கிறீர்கள்? என்னால் கூட அவளைப் பார்க்க முடியவில்லையே?
மன்னர் தந்திரமாக...
அவளுக்கு ஏதோ கண்டம் இருப்பதாக அரண்மனை சோதிடர் கூறுகிறார். அவளைப் பாதுகாப்பது அவசியம். அதனால் தான்...



அது சரி, ஆனால் என் நண்பன் சூரஸிதத்தன் எங்கே? அவனைக் காணோமே?
சிருங்கபுஜா ... மனசைத் தேற்றிக் கொள்... சொல்கிறேன்...
சூரஸிதத்தனையும் நான் சிறையிலடைத்துவிட்டதை மறைந்த மன்னர்...
சூரஸிதந்தன் ஒரு பிராமணனைக் கொன்று விட்டான்... அவனுக்கு மரண தண்டனை விதிக்க எனக்கு மனமில்லை. அதனால் பிராயச்சித்தமாக தீர்த்தயாத்திரை செய்துவர அனுப்பி விட்டேன்...
ஒருநாள் இளவரசர்கள் வேட்டைக்குக் கிளம்பினார்கள்... ஆயுத சாலையில்...
தந்தை பூஜிக்கும் மந்திர அம்புகளை எடுத்துப் போவோம்!
ஐயோ! அந்தத் தங்க அம்புகளைத் தொட்டால் அவர் கோபிப்பார்!
ரொம்ப நல்லதாய்ப் போயிற்று... சிருங்க புஜன் மீது பழியைப் போட்டு விடலாம்! அவன் மீது தந்தைக்கு வெறுப்பு வளரும்!
தம்பி சிருங்கபுஜனையும் அழைத்துக் கொண்டு இளவரசர்கள் வேட்டைக்குச் செல்ல...
அதோ!
ஐயோ! எத்தனை பெரியபறவை!


காட்டிலே வசித்த ஒரு துறவி தோன்றி...
அது பறவையல்ல; பறவை உருவில் வந்துள்ள அக்னிகேசன் என்ற அரக்கன். அவனை விரட்டி அடிக்கும் திறமை உங்களுக்கு இல்லையென்றால் உங்களைத் தின்று விடுவான்!
இளவரசன் நீர்வாசபுஜன் தந்திரமாக...
சிருங்கபுஜா! நீதான் அம்பு விடுவதில் திறமைசாலி. இந்தா, மந்திர அம்புகள். அரக்கனை அடித்து வீழ்த்து...
தங்க அம்புகளின் பின்னணியை அறியாத சிருங்கபுஜன், அவற்றால் பறவையை இருமுறை அடித்தான்...
என் குறி தப்பவில்லை!
அரக்கன் பயந்து பறந்து போய் விட...
ஐயோ! அம்புகள்!
தங்க அம்புகள்!
தந்தைக்கு என்ன பதில் சொல்வது?
அப்போதுதான் அம்புகளின் பின்னணியை அறிந்த சிருங்கபுஜன்...
நான் பறவையைத் தொடர்ந்து போய் அம்புகளைக் கொண்டு வருகிறேன்.
அம்புகளுடன் வராவிட்டால் தந்தை உன்னை நாட்டை விட்டே துரத்திவிடுவார்!


சிருங்கபுஜன், பறவை உருவில் வந்த அரக்கனைத் துரத்திச் செல்ல, இதர சகோதரர்கள்...
அவன் அம்பை மீட்க முயன்றால் அக்னி கேசனிடமிருந்து தப்பவே முடியாது...
நால்வரும் தலைநகர் திரும்பினார்கள்...
அம்புகள் இல்லாமல் திரும்பி வந்தாலோ, தந்தை அவனை மன்னிக்கவே மாட்டார்!
ஒழிந்தான், சிருங்கபுஜன்!
காட்டில் பல நாள் அலைந்து திரிந்த சிருங்கபுஜன், ஓர் ஏரியை அடைய...
பெண்ணே! காட்டில் இப்படி தனியாக இருக்கிறாயே.... யார் நீ?
கோலாஹலம் என்ற ஊரிலிருந்து ஆண்டு வரும் அக்னிகேசன் மகள் நான்... பெயர் ரூபசிகை...
ஆ! பறவை வடிவில் வந்தவர்... நான் போட்ட தங்கபாணங்களுக்கு இலக்கானவர்...
ஆம், அவர் தான் என் தந்தை. அம்புகளை நீக்கி, மருந்து போட்டுக் கட்டினேன்.


சிருங்க புஜன் தன்னைப் பற்றிய விவரங்களைக் கூற...
என் தந்தை மீது அம்பு போட்டுத் துணிந்த நீங்கள் மகாவீரர். உங்களை நான் மணந்து கொள்ள விரும்புகிறேன்.
ரூபசிகை தன் தந்தையிடம் சிருங்க புஜனை அழைத்துப் போனாள்...
அப்பா! உங்கள் மீது அம்பு எய்தவர் இவர்தான். தங்க அம்புகளைத் திரும்பப் பெற வந்திருக்கிறார்.
அப்படியா, இவனைக் கொன்று தின்று விடுகிறேன்! நல்ல ருசியாக இருப்பான்...
அப்பா! இவரை நான் மணந்து கொள்ள விரும்புகிறேன்... இவருக்குத் தீங்கு நேர்ந்தால் நானும் இறந்து விடுவேன்!
திடுக்கிட்ட அக்னிசிகன், தந்திரத்தால் சிருங்க புஜனை வெல்ல எண்ணினான்... அன்று மாலை தனது நூறு பெண்களையும் வரிசையாக நிறுத்தினான்...
ரூபசிகை கழுத்தில் இந்த மாலையைப் போடு... உம்...
எல்லாரும் ஒரேமாதிரி... யார் ரூபசிகை...?


ஒரு பெண் மட்டும் கையில் தாமரைமலர் ஏந்தி நிற்பதைக் கண்ட சிருங்க புஜன்...
இதோ என் அன்புக்குரியவள்!
அக்னிகேசன் தந்திரமாக....
அது ரொம்ப சுலபமான பரீட்சை... இதோ நூறு கோணி எள் இருக்கிறது... இரவோடு இரவாக நிலத்தை உழுது விதைத்து விடு, பார்க்கலாம்!
இருள் கவியும் நேரம், சிருங்க புஜன் கவலையோடு அமர்ந்திருக்க...
கவலைப்படாதீர்கள், நான் பார்த்துக் கொள்கிறேன்...
இருட்டியவுடன் ரூபசிகை குரல் கொடுக்க...
அட! காட்டில் வாழும் யானைகள் தந்தக் கொம்புகளால் நிலத்தை உழுகின்றனவே!
அதிகாலையில் விடியுமுன் மீண்டும் ரூபசிகை குரல் கொடுக்க...
அட, காட்டுப் பறவைகள் நூறு மூட்டை எள்ளையும் விதைத்து விட்டன!


சூரியோதயத்துக்குப் பிறகு வந்து பார்த்த அக்னிகேசன் ஆச்சரியமுற்று...
உன் ஆற்றலை மேலும் சோதிக்க வேண்டும். விதைத்த எள்ளை யெல்லாம் நாளைக் காலைக்குள் மறுபடி மூட்டை கட்டி வைத்து விடு!
அன்றிரவு மீண்டும் சிருங்கபுஜன் கவலையோடு அமர்ந்திருக்க, ரூபசிகை வந்து...
கவலைப்படாதீர்கள்.... மறுபடி உதவிக்கு நண்பர்களை அழைக்கிறேன்... கிச்..கிச்..கிச் .. கிச்...
சாரி சாரியாக, கோடிக்கணக்கான எறும்புகள் வந்து, விதைத்த எள்ளைக் கொண்டு போய் மூட்டைகளில் நிரப்பின...
மூட்டைகளைக் கட்டி வைப்பது தான் என் வேலை! சமர்த்து எறும்புகள்!
மறுநாள் காலை அக்னிகேசன்...
அட! நீ மகா கெட்டிக்காரன்தான்... சரி சரி! என் சகோதரன் தூமதந்தன் முன்னிலையில்தான் உனக்கும் ரூபசிகைக்கும் திருமணம் நடக்க வேண்டும்; அவனை அழைத்து வா!
அன்று மாலை...
ரூபசிகை! இதில் ஏதேனும் சூழ்ச்சி இருக்கிறதா?
கவலைப்படாதீர்கள்: தூமதந்தனை அடையவும் அவனிடமிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் நான் வழி சொல்கிறேன்...


ரூபசிகை கூறியபடி பத்து நாட்கள் நடந்து சிருங்க புஜன், ஒரு மலையைக் கடந்து மறுபக்கம்...
தாமதத்தன் தூங்குகிறான்... இவனைச் சந்தித்ததற்கு அடையாளமாக இந்தக் குத்து வாளை உருவிக் கொள்கிறேன்.
பின்னர் விலகி நின்று தாமதத்தனை எழுப்பினான்...
தாமதத்தா! அக்னி கேசன் உன்னை அழைத்து வரச் சொன்னார்!
தாமதத்தன் சிருங்கபுஜனை விழுங்க ஓடி வந்தான்...
இவனிடமிருந்து தப்ப, ரூபசிகை சொல்லிக் கொடுத்த வழிகளைக் கையாள வேண்டும். மந்திர மண்ணை வீசுகிறேன்...
மண் மலையாகி தாமதத்தனைத் தடுத்தது...
தாமதத்தன் மலையைக் கடக்கும் முன் நான் வெகுதூரம் சென்று விடலாம்...
ஆனால் சீக்கிரமே மலையைக் கடந்து சிருங்கபுஜனைத் துரத்தினான் தாமதத்தன்...
ரூபசிகை தந்த குடுவை நீரை வீசுகிறேன்...


பெரிய ஆறு, வெள்ளப் பெருக்கெடுத்துச் சுழித்து ஓடியது...
தூமதத்தன் ஆற்று வெள்ளத்தைக் கடக்க முடியாது...
ஆனால் ஆற்றையும் கடந்து தூமதத்தன் முன்னேற...
ரூபசிகை தந்த முள்ளைப் போடுகிறேன்....
ஏராளமான முட்புதர்கள் தோன்றி வழி மறித்தன...
இதுவாவது தூமதத்தனைத் தடுத்து நிறுத்துமா பார்க்கலாம்...
ஆனால் தூமதத்தன் முட்புதர்களைக் கோடாலியால் வெட்டி வழி ஏற்படுத்திக் கொண்டு முன்னேறினான்....
சிருங்கபுஜன் சோர்ந்திருந்தான்...
கடைசியாக ரூபசிகை தந்த கந்தக மாத்திரைகளை எறிகிறேன். இதுவும் தூமதத்தனைத் தடுக்கவில்லையெனில் நான் தொலைந்தேன்!


தூமதத்தன், வாளாலும் கொழுந்து விட்டெரிந்த தீயைக் கடக்க முடியாமல் திகைத்தான்; திரும்பிச் சென்றான்...
அக்னிகேசனிடம் திரும்பிய சிருங்கபுஜன்....
உங்கள் சகோதரரை என் திருமணத்துக்கு அழைத்தேன். அவரால் வர முடியவில்லை. இந்தக் குத்துவாளைப் பரிசாக அளித்து அனுப்பினார்...
அக்னிகேசன் அதிசயித்து...
தூமதத்தனிடமிருந்து யாருமே தப்பியதில்லை. சிருங்கபுஜா! நீ மாபெரும் வீரன், என் மகளுக்கு ஏற்றவனே!
ரூபசிகைக்கும் சிருங்கபுஜனுக்கும் திருமணம் நடந்தது...
நீங்கள் நீடூழி வாழவேண்டும். சிருங்கபுஜா! எனக்குத் தெரிந்த மந்திரங்களையெல்லாம் உனக்குக் கற்றுத் தருகிறேன்...
அக்னிகேசனிடம் பல மந்திரங்களைத் தெரிந்து கொண்ட சிருங்கபுஜன் மேலும் பலம் பெற்று விளங்கினான்... ...ஒருநாள்...
ரூபசிகை! நான் என் நாட்டுக்குத் திரும்ப வேண்டும். என் தாயின் கதி என்ன ஆயிற்றோ? ....


தங்க அம்புகளுடன் நான் என் தந்தையைக் காணத் திரும்ப வேண்டும்.
என் தந்தை சம்மதிக்க மாட்டார். அவருக்குத் தெரியாமல் நான் போக வேண்டும்...
ரகசியமாக இருவரும் கிளம்பிப் போய் விட்டதை அறிந்த அக்னிகேசன்...
ஆ! இதோ போய் அவர்களைப் பிடித்து இழுத்து வந்து தண்டிக்கிறேன்...
ரூபசிகையின் சகோதரிகள் தந்தையைச் சாந்தப் படுத்தினார்கள்...
அவள் போனால் போகட்டும், அப்பா! நாங்கள் இருக்கிறோமே...
ரூபசிகை வர்த்தமான நகரில் அரசியாக விளங்குவாள். ...உங்களுக்குப் பெருமைதானே...
சிருங்கபுஜன், அழகிய மனைவியுடன், பல மந்திரங்களை அறிந்து கொண்டு திரும்பியதைக் கண்டு மன்னர் வீரபுஜன் மகிழ்ந்தார்.
இதோ உங்கள் தங்க அம்புகள்!
எனக்குப் பிறகு நீயே நாடாளத் தகுந்தவன் என நிரூபித்து விட்டாய்!
தன் தவறை உணர்ந்து மன்னர் வீரபுஜன், பட்டத்தரசி குணவாரியை விடுவித்தார்...
அப்பா! என் நண்பன் சுரசித்தன்...?
அவனுக்கும் விடுதலை தான்!



V. ABI — Colour Photo: RAJA PONSINGH.

Come, peep into the world of

Gokulam

Aug '90

Independence Day Issue.

- Poems, stories and features that will enthrall you.
- A new geography feature .
- Hours of creativity — *Puzzles, Things to Make and Do, Jokes.....*

96 pages for just Rs. 3/.

BUY YOURSELF A COPY TODAY!



For agency and Subscription contact :
Gokulam, Guindy, Madras - 600 032
Telephone : 434157, 434190

Annual subscription : Rs. 36.00 (India)
Overseas : Rs. 270.00 (Air mail)
: Rs. 120.00 (Sea mail)

ஒரு மரத்துப்

அன்று வழக்கத்துக்கு மாறாக முகவாட்டத்துடன் வெள்ளை மாருதி காரின் உள்ளே நுழைந்த பவித்ராவைப் பார்த்து இலேசாகச் சிரித்தார் டிரைவர்.

''நறுமலர் உயர்நிலைப் பள்ளி கேட்டருகே மாணவர்கள் நிறையப் பேர் நிற்கிறாங்க. வண்டியை நிறுத்தச் சொல்லிக் கையைக் காட்டினால் நிறுத்துங்க.''

அங்கே நின்றிருந்த பள்ளி மாணவத் தலைவனும் மற்றும் மாணவர் சிலரும் பவித்ராவுக்குக் கையசைத்துத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். வண்டியை அவர்கள் நிறுத்தவில்லை.

''இது என்னம்மா இது, புதுசா இருக்கு? இந்தப் பசங்க ஏன் உன்னைப் பார்த்து ஏதோ சிரிச்சுக்கிட்டே கையை ஆட்றாங்க?'' என்று கேட்டார் டிரைவர்.

அவருக்குப் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று அவளுக்குத் தோன்றவில்லை.

''என்னமோம்மா. இதெல்லாம் நல்லா இல்லை,'' என்றார் டிரைவர்.

அப்போதுதான் அவளுக்குக் கோபமாகவும் அவருக்குச் சொல்லியே ஆக வேண்டும் என்றும் தோன்றியது. சுருக்கமாக, இரண்டொரு வார்த்தைகளில் நடந்ததைச் சொன்னாள் பவித்ரா. ''அட, விஷயம் இப்படியாம்மா? இதுக்குப் போயா அம்மா அப்படிக் குதியா குதிச்சுக் கலாட்டா பண்றாங்க?'' என்றார் டிரைவர்.

மாருதி அவள் வீட்டுக்கு வந்து ஓட்டத்தை நிறுத்தியது. பவித்ரா மெதுவாகக் காரை விட்டு இறங்கினாள். அம்மா வேகமாக வந்து அவள் கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக் கொண்டு போனாள்.

'ஏதோ நடக்கப் போகிறது. சாமர்த்தியமாகச் சமாளிக்க வேண்டும்,' என்று முன்னெச்சரிக்கையோடிருந்த பவித்ரா மௌனமாகவே நின்றிருந்தாள்.

பூவை அமுதன்

''நீ என்னதான் நினைச்சிக்கிட்டிருக்கேடி உன் மனசுக்குள்ளே?'' என்று அதட்டினாள் உதயா.

''என்ன கேட்கறீங்கம்மா?'' என்று நிதானமாகக் கேட்டாள் பவித்ரா.

''செய்யறதையும் செய்திட்டு நிற்கிறதைப் பாரு, ஒண்ணுமே தெரியாத மாதிரி. நீ என்ன பெரிய புரட்சிக்காரியா?

''யாரு... அப்பா சொன்னாரா உனக்கு?''

''அவர் என்ன சொல்றது? எல்லாம் கேள்விப்பட்டேன்.''

''கேள்விப்பட்டிருந்தால் அது சரியா இருக்காது. அப்பா சொல்லியிருந்தால் அது சரியாயிருக்கும். அப்பாதான் அந்தத் தேவமாணிக்கத்தோடு வந்தாரே அந்தக் காரில்! அவரைப் பார்த்ததுமே நான் திகைத்துப் போயிட்டேன்,'' என்றாள் பவித்ரா.

பசங்களையெல்லாம் கூட்டி வச்சுக்கிட்டு, விழாவுக்கு வந்த பெரிய மனுஷனை வழி மறிச்சுத் திருப்பி அனுப்பியிருக்கியே, இது தப்பில்லையா? உனக்கு அவ்வளவு தைரியம் எங்கிருந்து வந்தது?''

''நாங்கள் அவரைத் திரும்பிப் போகச் சொல்லலேம்மா. சுற்றிலும் பள்ளிகள் இருக்கிற அந்தப் பகுதியிலே, அது மாதிரி பாட்டுச் சத்தமெல்லாம் வேண்டாம் என்று கேட்டுக் கொண்டோம். ஏற்பாடு செய்து விட்டார்களே என்று அவர் சொன்னார். அப்படியானால் எங்கள் பள்ளிகளுக்கெல்லாம் ஒரு வாரம் விடுமுறை விடச் சொல்லி அரசாங்கத்துக்கு ஏற்பாடு பண்ணுங்கன்னு கேட்டுக்கிட்டோம். அவராலே அப்படிச் செய்ய முடியுமா? யோசித்துப் பார்த்தார். 'இந்த விழாவைக் கோடை விடுமுறையிலே இதே இடத்திலே நடத்திக் கொள்ளட்டுமே. இப்போது நடத்துவதாயிருந்தால் ஊருக்கு வெளியே எவ்

பறவைகள் 9



வளவோ மைதானங்கள் இருக்கே?' என்று சொன்னோம். எங்கள் பேச்சிலே நியாயம் இருப்பது தெரிந்தது அவருக்கு. அங்கே ஓடி வந்த விழாக் காரர்களிடம் ஏதோ சொல்லி விட்டுக் காரைத் திருப்பிக் கொண்டு போய் விட்டார். கொஞ்ச நேரத்திலே பாட்டைப் போடறதையும் நிறுத்திட்டாங்க. அதற்கப்புறம் எல்லாப் பள்ளிகளும் ஒழுங்காகவே நடந்தன. இதுதான் விஷயம். இதிலே என் தப்பு என்ன இருக்கு?'' என்று மூச்சு விடாமல் பேசி, முடிவாகக் கேட்டாள் பவித்ரா.

தன் மகளின் பேச்சைத் தமக்குள் வெகுவாக ரசித்துக் கொண்டார் முத்துமணி. அவர் முகத்தைப் பார்த்ததும் மேலும் கோபமாகி விட்டது உதயாவுக்கு.

''இந்த ஊரிலே எனக்கு எவ்வளவு கௌரவம்... மரியாதை தெரியுமா உனக்கு?'' அந்தத் தேவ மாணிக்கம் யார் தெரியுமா உனக்கு?''

''எனக்குத் தெரியாதும்மா. அவர் என்ன அக்பரா, அசோகரா? சுபாஷா, நேருவா?''

''சொல்றேன், தெரிஞ்சுக்கடி. அவர் சாதாரண ஆள் இல்லே.''

''சாதா... ரணம் இல்லேன்னா, ஸ்பெஷல் ரணமா? இதெல்லாம் குழந்தைக்கு என்ன தெரியும் உதயா?'' என்று அப்போதுதான் குறுக்கிட்டார் முத்துமணி.

''நீங்க சும்மாயிருங்க. உங்களாலே-தான் இவள் இவ்வளவு தூரத்துக்கு வந்திருக்கா,'' என்று தன் கோபத்தைக் கணவர் மீது காட்டினாள் உதயா. ''குழந்தையாம், குழந்தை!'' என்று தனக்குள் கோபமாகப் பல முறை முனகிக் கொண்டாள்.

''என்ன, நீ பாட்டுக்குப் பேசிக்கிட்டே போறே? ஒரு பள்ளிக்கூடத்திலே மாணவத் தலைவியா இருக்கிறவள் பொறுப்போடு எப்படி நடந்து கொள்ளணுமோ அப்படித்தான் நடந்துக்கிட்டிருக்கா. இல்லேன்னா என்ன ஆகியிருக்கும்? எந்தப் பள்ளிக்கூடத்திலேயும் எந்த வகுப்பும் ஒழுங்கா நடந்திருக்க முடியாது. அதுவும் ஏழு நாளைக்கு! நூற்றுக்கணக்கான, பிள்ளைகள் கல்வியை விட, ஒரு தனி மனிதன் சைக்கிளை விட்டுத் தன் வீரத்தைக் காட்டறதுதான் இந்த நாட்டுக்கு இப்ப ரொம்ப அவசியமா?'' என்று எரிந்து விழுந்தார் முத்துமணி.

உதயா அசந்து போய் விட்டாள். பவித்ராவுக்கு ஆச்சரியமாகி விட்டது. அட, அப்பாவுக்குக் கூடக் கோபம் வருகிறதே. அதுவும் அம்மா எதிரிலே!

அப்பாவின் குரல் உயர்ந்து போனதும் அம்மாவின் பேச்சுத் தானாகத் தணிந்து விட்டது. அது கூட அவளுக்கு ஆச்சரியந்தான்.

''அது இல்லைங்க. அந்தத் தேவ மாணிக்கம் பெரிய பதவிகளிலே இருக்கிறவங்களுக்கெல்லாம் ரொம்ப ரொம்ப நெருக்கமானவர். அவருக்கு வலது கரம் இந்த நிரஞ்சன்தாஸ். இப்போ இவன் பஸ் ஸ்டாண்ட் பக்கத்து மைதானத்திலே சைக்கிள் விடாமே தடைப்பட்டுப் போனதனாலே அவனுக்கு ஆத்திரம் இருக்கும்.''

''ஏன்...? ஊரிலே வேற மைதானமே இல்லையா?'' என்று குத்தலாகக் கேட்டார் முத்துமணி.

''என்னங்க... புரியாத மாதிரி பேச றீங்க? பஸ் ஸ்டாண்ட் பக்கம் நிறையக் கூட்டம் எப்பவும் இருக்கும். உள்ளூர் வெளியூர் ஜனங்கள் ஜேஜேன்னு இருப்பாங்க. உண்டியலைக் குலுக்கினால் இங்கேதானே நிறையக் காசு சேரும்? ஊருக்கு

நடுவே இருந்தால்தானே எல்லாருக்கும் சீக்கிரமா விளம்பரம் ஆகும். கடைக்காரர்களெல்லாம் தாராளமாக் காசைக் கொடுப்பாங்க? நிரஞ்சன் தாஸ் கடைத் தெருவிலே எல்லோருக்கும் தெரிஞ்சவன் இல்லையா? இதை விட்டுட்டு.. ஊருக்கு ஒதுக்குப்புறமாகப் போனால், அங்கே போய் அக்கறையாப் பார்ப்பாங்க, பணம் போடுவாங்க?'' என்றாள் உதயா.

''ஓகோ! தன் வீரத்தை வெளிச்சம் போட்டுக் காட்டின மாதிரியும் ஆச்சு; காசு சேர்த்துக்கிட்ட மாதிரியும் ஆச்சு. ஒரு கல்லிலே ரெண்டு மாங்காய். அதுக்கு இப்போது வழியில்லாமே போச்சு. அது சரி, அவனுக்குக் கஷ்டமோ நஷ்டமோ, இதில் உனக்கென்ன அக்கறை?''

''அக்கறையில்லாமலா இந்த உதயா இப்படித் துடிக்கிறா? பாருங்க, இந்த நிரஞ்சன்தாஸ், தேவமாணிக்கம் ரெண்டு பேரையும் பிடிச்சி அந்தக் காண்ட்ராக்டை உங்களுக்கு—



அதுதான் நம்ம கம்பெனிக்கும் பிடிச்சிடலாமுன்னு நான் பிளான் போட்டிருந்தேன். அதுக்குத்தானே தேவமாணிக்கம் காரிலே உங்களை ஒண்டிக்கிடச் சொன்னேன்?''

''என்ன சொல்றே நீ?''

அப்பாவுக்கும் புரியவில்லை. மகளுக்கும் புரியவில்லை.

''என்ன சொல்றேன்னா... இதே மைதானத்திலே நகராட்சிக்காரங்க ஒரு சினிமாத் தியேட்டர் கட்டப் போறாங்க, தெரியுமா?''

''தெரியாதே!''

''இதெல்லாம் நீங்க தெரிஞ்சிக்கணும். நான்தான் தெரிஞ்சு வச்சுக்கிட்டிருக்கேன். கேளுங்க! நகர சபையின் வருமானத்தைப் பெருக்க, ஒரு நவீன திரையரங்கு கட்ட வேண்டும் என்று நகர சபையிலே ஒரு ப்ரபோசல் இருக்கு.''

''அப்படியா?''

''அப்படித்தான்! அந்தத் தியேட்டர் கட்டுகிற கான்ட்ராக்டை நாம், நம்ம கம்பெனிக்குத் தட்டிக் கொள்ளணும். அதுதான் என் திட்டம். அதற்கு நிரஞ்சன்தாஸ்... தேவமாணிக்கம் தயவு நமக்குத் தேவை. அதுக்கு முன்னோட்டமாத்தான் நான் உங்களை அவரோடு போகச் சொன்னேன். இந்தச் சைக்கிள் ஓட்டுகிற நிகழ்ச்சிக்கு நான் ஒரு நாள் எங்கள் மாதர் சங்க உறுப்பினர்களோடு போய், நிறைய அன்பளிப்புத் தரணும்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். இப்போ அவ்வளவும் பாழ்!''

''ஓ...! பள்ளிக்கூடம் பாழானாலும் பரவாயில்லை, எத்தனை பேர் படிப்புக் கெட்டாலும் பரவாயில்லை, நமக்குக் காசு வரணும்! அதாவது அந்தக் கான்ட்ராக்ட்டைப் பிடிச்சு நிறையக் காசைச் சுருட்டணும். இது உன் பிளான்! அம்மாடியோவ்! நான் நீயா இருந்திருக்கணும். நீ நானாயிருந்திருக்கணும். உலகத்தையே வாங்கிடுவே!''

''போதும் நிறுத்துங்க. இவள் நம்ம பொண்ணுன்னு நிச்சயமா அவங்களுக்குத் தெரியும்.''

''நிச்சயமாத் தெரியும்! அதனால் என்ன? நான் இவளைப் பார்த்ததும், காரிலே பக்கத்திலேயிருந்த தேவமாணிக்கத்துக்கு நானே சொன்னேன், பவித்ரா என் மகள்தான்னு.''

''பெருமைதான்!'' தலையில் அடித்துக் கொண்டாள் உதயா.

''ஏம்மா... பஸ் ஸ்டாண்ட்டுக்குப்



உங்கள் நூலகம்

ஔவையார் அருளிய ஆத்திச்சூடி
(விளக்கம்)

(வாண்டு மாமா — பக். 112 — ரூ. 12— வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை — 600 017.)

அழகிய பதிப்பு. மந்திரம் போல ஔவைப் பாட்டியாரின் போதனைகள் 108. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பக்கத்தில் தெளிந்த விளக்கம். ஒவ்வொரு பக்கத்திலும் படங்கள். காலத்துக்கேற்பத் தெளிவுரை செய்திருப்பது மனசில் சிக்கென்று நிற்கிறது. உதாரணத்துக்கு: 'தையல் சொல் கேளேல்' என்ற அறிவுரைக்கு — அந்தக் காலத்துப் பெண்களைப் பற்றிக் கூறுகிறார் ஔவையார் — வெளி உலகைப் பற்றி அதிகம் அறியாது வாழ்ந்த அக்காலப் பெண்களுடைய யோசனைகளைக் கேட்காதே. அது தவறான முடிவைத் தரலாம் என்று. ஆனால் எதிலும் முதலாவதாக நிற்கும் இக்காலப் பெண்களுக்கு இது பொருந்தாது. தையல் — பெண். இன்று நாட்டையே, உலகையே வழி நடத்திச் செல்லுவதில் திறனுள்ளவளாக, வல்லவளாக முன்னேறி விட்டாளே!

எத்தனையோ நீதி நூல்களின் சாரத்தை— வாழ்க்கையில் புரிந்து நடந்து கொள்ள வேண்டிய உபதேசங்களைத் தாங்கியுள்ள ஆத்திச்சூடி, அத்தனை தம்பி தங்கைகளும் திரும்பத் திரும்பப் பயிலத்தக்க அரிய நூல்.

அறிவியலில் அதிசயங்கள்

(ஆழி. வே. ராமசாமி — பக். 120 — ரூ. 15 — வி. ஜே. பி. பப்ளிகேஷன், 34, கோவாபரேஷன் காலனி ரோடு, காந்தி நகர், நாமக்கல், சேலம் மாவட்டம்.)

ஆழி தரும் அதிசயத் துணுக்குச் செய்திகளில் நீங்கள் அவ்வப்போது ஆச்சரியத்தில் மூழ்கிப் போயிருக்கிறீர்கள் அல்லவா? வேட்டையாடக் கூடாது என்று தடை விதிக்கப்பட்ட காடுகளில் வாழும் புலிகள் மனிதர்

பக்கத்திலே சினிமாத் தியேட்டர் கட்டப் போறாங்களா? ஏற்கெனவே அங்கே ஜன நெரிசல் அதிகம். டிராஃபிக் அதிகம். பக்கத்திலே நிறையப் பள்ளிக்கூடங்கள். அந்த இடத்திலா சினிமாத் தியேட்டர் கட்டுவது? அதுவும் நகர சபை?'' என்று அதிசயித்தவளாகக் கேட்டாள் பவித்ரா.

''ஆமா, நகர சபையே கட்டப் போகுது. யாரும் ஒன்றும் செய்ய முடியாது,'' என்று அழுத்தமாகக் கூறினாள் உதயா.

''அந்த மாதிரி காண்ட்ராக்ட் நம்ம கம்பெனிக்கு வேண்டவே வேண்டாம்,'' என்றார் முத்துமணி.

''அந்த இடத்திலே சினிமாத் தியேட்டர் கட்டக் கூடாது,'' என்றாள் பவித்ரா.

''ஆமாம்! நீ பெரிய கலெக்டர். நீ சொல்லி விட்டால் நின்னுபோயிடுமாக்கும்?'' என்று முகத்தைச் சுளித்தாள் உதயா.

''கலெக்டரை விட்டே, அங்கே சினிமாத் தியேட்டர் கட்டக் கூடாது என்று உத்தரவு போட வைத்தால்?'' என்று இழுத்தாள் பவித்ரா.

''அது எப்படி அவர் உத்தரவு போடுவார்?''

''நாங்கள் போட வைப்போம்!''

''நடக்காது.''

''எல்லாப் பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களும் அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும், அந்த இடத்தில் தியேட்டர் கட்டக் கூடாது என்று கடிதம் போட்டுக்கிட்டேயிருப்போம். ஊர்ப் பெரியவர்களையும் உதவிக்கு அழைத்துக் கொள்வோம்,'' என்று உறுதியான குரலில் உரைத்தாள் பவித்ரா.

''ஐயய்யோ... இது என்ன இந்தப் பொண்ணு இப்படி ஆயிடுச்சு? எனக்கென்னவோ பயமாயிருக்கு! இவளை, இந்த வருஷத்தோடு படிப்பை நிறுத்தி...''

''படிப்பை நிறுத்தி?'' முத்துமணி குறுக்கிட்டார்.

''இந்த ஊரிலே படிப்பை நிறுத்தி, பட்டணத்திலே எங்காவது ஹாஸ்டல்லே சேர்த்துப் படிக்க வைக்கணும். அப்பத்தான் சரிப்படுவா.''

''பைத்தியமா உனக்கு? எங்கே போனாலும் பவித்ரா மனசு பவித்ரா

களை வேட்டையாடினவாம்—கங்கைபிரும்ம புத்திரா டெல்டாக் கரைகளில். என்ன செய்வது? மனிதன் மாதிரி பொம்மை செய்து. அதற்கு மின் இணைப்புக் கொடுத்து. புலிகள் நடமாடும் பகுதியில் வைத்தார்களாம். மனிதன் என்று நம்பி. புலி அந்தப் பொம்மையை அடிக்கப் போய் மின் தாக்குதலில் அரண்டு போய். அப்புறம் மனிதர்கள் பக்கமே திரும்புவதில்லையாம்! சூடு கண்ட பூனை மாதிரி 'ஷாக்' கண்ட புலி! எப்படி செய்தி!

குறள் வழிக் கதைகள்

(பூவை அமுதன் — பக். 116 — ரூ. 12— அலைகள்)

என்னதான் உயர்ந்த விஷயம் என்றாலும் அதை அப்படியே நேரிடையாய்ச் சொன்னால், கேட்கிறவர்கள் 'போர்' என்பார்கள். அதே விஷயத்துக்குக் கதை வடிவம் கொடுத்தால் ஏற்றுக் கொள்வார்கள் என்று புரிந்து கொண்டு எழுதப்பட்ட கதைகள். அதிலும் முப்பது ஆண்டுகளுக்கு மேல் பள்ளி ஆசிரியப் பணி புரியும் உளவியலும் பயின்ற பூவை அமுதன் தன் அறிவுபூர்வமான அனுபவங்களைக் கதைகளாய் ஆக்கியிருக்கிறார். பொறுக்கான பத்துக் குறள்களின் அடிப்படையில் பத்துக் கதைகள். ஒவ்வொரு கதையையும் தொற்றிக் கொண்டு அந்தக் குறளும் நினைவுக்கு வரும்.

அன்புத் தம்பிக்கு அறிவூட்டும் கதைகள்

(பாபநாசம் குறள் பித்தன் — பக். 104— ரூ. 11 — இரண்டு புத்தகங்களும்: அலைகள் வெளியீட்டகம், 35, தெற்கு சிவன் கோயில் தெரு, கோடம்பாக்கம், சென்னை — 600 024.)

பத்துக் கதைகளும் முத்தானவை. இனிமை எளிமை கொண்ட நடை. அறிவைத் தொடும் முடிவு. கதையோட்டத்தில் விறுவிறுப்பு. ஒரு கதையில் தன் வாரிசைத் தேர்ந்தெடுக்க மன்னர் ஒரு புதிர் போடுகிறார். 'ஒரு காய் பழமாகும். அதே பழம் பின்னர் காய் என்று அழைக்கப்படும். அந்தப் பழம் எந்தப் பழம்?' எங்கே, ஐந்து நிமிட அவகாசம். உங்களால் பதில் சொல்ல முடிகிறதா, பாருங்கள். அப்புறம், வென்றவர் சொன்ன பதிலைப் பாருங்கள்: 'எலுமிச்சம் பழம். அதுதானே அப்புறம் ஊறுகாய் ஆகிறது?' இப்படித்தான் ஒவ்வொரு கதையிலும் அறிவூட்ட ஏதாவதொன்று இருக்கிறது. படித்துச் சுவைக்கலாம்.

கூடவேதானே இருக்கும்? நம்ம பொண்ணு இவ்வளவு தைரியமா, உற்சாகமா, பொது நன்மைக்காக உரிமைக் குரல் கொடுக்கிறாளேன்னு சந்தோஷப்படுவியா.. அதை விட்டுட்டு ஏதோ நடக்கக் கூடாதது நடந்திட்ட மாதிரி நடுங்கிச் சாகறியே!'' என்று கேலி செய்தார் முத்துமணி.

''பாதகம் செய்பவரைக் கண்டால் பயம் கொள்ளல் ஆகாது பாப்பா, மோதி மிதித்து விடு பாப்பா, அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா, இது பாரதியார் பாட்டும்மா! நீ கூட உங்கள் மாதர் சங்கத்திலே இந்தப் பாட்டைப் பாடியே காட்டினியாமே?'' என்றாள் பவித்ரா.

''என்ன உதயா நீ? பவித்ரா ஆணாகப் பிறக்கவில்லையே என்று எவ்வளவு நாள் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தே? இப்போது பார், ஒரு ஆண் பிள்ளைக்குக் கூட இவ்வளவு துணிச்சல் இருக்குமா? நம்ம பெண்ணுக்கு அஞ்சாத நெஞ்சம் இருக்கு. அறிவு இருக்கு. என்றைக்கும் வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்ல பேரைத்தான் தேடித் தருவாள்.'' என்று உணர்ச்சி கொப்பளிக்க உரைத்தார் முத்துமணி.

அப்போது, ''வெரிகுட்! வெரிகுட் பவித்ரா! ஐ அப்ரிஷியேட் அண்ட் கங்கிராஜுலேட் யூ!'' என்ற குரல் உயரத்திலிருந்து ஒலித்தது.


பவித்ரா நிமிர்ந்து நோக்கினாள். அவளுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது.

''ஏய் சந்தோஷ்! நீ எப்போ வந்தே?'' என்று குஷியோடு துள்ளிக் கொண்டு மாடிக்கு ஓடினாள் பவித்ரா.

''நான் பகல் ஒரு மணிக்கே வந்துட்டேன். நீங்க பேசினதையெல்லாம் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். உன் கேரெக்டர் எனக்கு ரொம்பவும் பிடிக்குது,'' என்று அவன் படிகளில் இறங்கி வந்து அவள் முதுகில் தட்டினான்.

அடுத்த கணம் அவர்கள் யாவருமே அதிர்ந்து போய் அப்படியே நின்று விட்டனர். கூச்சல் வெளியேயிருந்து கேட்டது!

(தொடரும்)


இதுகள் பேசினால்
கருத்து: செ. தியாகராஜன்
சே! நானும் தினம் காலையில எழுந்திரிச்சவுடனே உன் முகத்தில தான் முழிக்கறேன். ஒரு அதிர்ஷ்டமும் அடிக்கமாட்டேங்குதே!
நானும் தினம் என் வீட்டில வாய் வலிக்கக் கத்தறேன். ஒரு விருந்தாளியும் வரலையே!
வீட்டை விட்டு வெளியிலேயே கிளம்ப முடியலை. எப்ப வெளியே கிளம்பினாலும் இந்தக் குட்டிப் பய குறுக்கே வந்திடுறான் சே!
இது என்ன அநியாயமாய் இருக்கு! வெளியில என்னை யார் பார்த்தாலும் வீட்டுக்குள்ளே கூப்பிடாம வெளியிலேயே வச்சுப் பேசி அனுப்பிடறாங்களே!
டைரக்டர் சார்! அழுமூஞ்சிக் கேரக்டரா கொடுத்தீங்கன்னா ஜமாய்ச்சுடுவேன்.
நாலு பேருக்கு முன்னால தெரியாத்தனமா இஞ்சியைத் தின்னுட்டு..... மூஞ்சியைக் காட்ட ஒரே அவமானமாப் போச்சு!

பங்காரு எங்கிருக்கிறான்?



நரசிம்மலு கோபாவேசமாகப் பேசினார். "தன் பையனுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்காக மணியக்காரர் பஞ்சாயத்தைக் கூட்டி முறையிட்டிருக்கிறார். என்னை வரச் சொன்னாங்க. விசாரிச்சாங்க. நம்ம பையன் செய்த குற்றத்திற்குத் தண்டனையா என்னை மன்னிப்புக் கேட்கச் சொன்னாங்க; பதினைந்து நாட்கள் குடும்பத்துடன் பிள்ளையார் கோவிலைக் கூட்டி, மெழுகிக் கோலம் போடணும்னு தண்டனை விதிச்சிருக்காங்க."

கணவனின் கோபத்திற்கான காரணம் தாயம்மாவுக்குப் புரிந்தது.

நெல் குதிருக்குள் ஒளிந்திருந்த சிறுவன் பங்காரு துணிச்சலோடு வெளியே வந்தான்.

"நான் ஒரு நாள் செஞ்ச கொடுமைக்கு இது தண்டனைன்னா, அந்தக் கோவிந்து தினமும் கிராமத்துப் பசங்க மேல கம்பளிப் பூச்சியைப் பிடித்து விட்டுச் சித்ரவதைப்பட வைக்கிறானே... அவனுக்கு எவ்வளவு பெரிய தண்டனை விதிக்க வேண்டும்? மணியக்காரர் பையன் என்றால் தண்டனையே இல்லையா? இது என்ன நியாயம்? நீங்கள் கேட்டிருக்கக் கூடாதா?"

"அடேய், மணியக்காரர் ஊருக்குப் பெரிய மனிதர். அதனால் அவர் பையன் கோவிந்து எது செய்தாலும் யாரும் கண்டிக்க மாட்டாங்க," என்றார் நரசிம்மலு.

"அநியாயத்தைப் பார்த்து நீங்க வேணுமானால் அடங்கிப் போகலாம். ஆனால் எங்கள் நிலை அப்படியில்லை. அந்தக் கம்பளிப் பூச்சி கோவிந்துவால் பாதிக்கப்பட்ட கிராமத்துச் சிறுவர்களெல்லாம் ஒன்று கூடினோம். கோவிந்து குளிக்க ஆற்றுக்கு வரும் போது அவன் முதுகில் பச்சை மிளகாய் விழுதைத் தடவுவதுன்னு முடிவு செய்தோம். யாரு அதைச் செய்யறதுன்னு முடிவு பண்ணத் திருவுளச் சீட்டுப் போட்டோம். என் பெயர் வந்தது. நான் அதற்குக் கட்டுப்பட்டு கோவிந்துவின் முதுகில் மிளகாய் விழுதைத் தடவினேன்."

"அவன் முதுகுத் தோலே வழண்டு போயிருக்கு தெரியுமா?"

"கோவிந்துவின் கம்பளிப் பூச்சி விளையாட்டால் எவ்வளவு சிறுவர் சிறுமியர் சொறிந்து புண் வந்து, சட்டைப் போட முடியாமல் தவிக்கிறாங்க தெரியுமா அப்பா? அவர்கள் விதித்த அநியாயத் தண்டனையை எதிர்க்காமல் கேட்டுக் கொண்டு வந்தது சரியில்லேப்பா."

"அவ்வளவு பெரிய மனிதனா நீ? இனிமே உனக்கு இந்த வீட்டில் இடமில்லை. போடா வெளியே."

ஆத்திரத்தின் உச்சிக்கே சென்றுவிட்ட நரசிம்மலு, புளியங் குச்சியை உடைத்துக் கொண்டு, கை வலியெடுக்கும் வரை பங்காருவை அடித்து விளாசினார். பங்காரு துளியும் எதிர்க்காமல் அவ்வளவு அடிகளையும் வாங்கிக் கொண்டான்.

அடுத்த நாள் காலை, பங்காரு

ஹரிசிங்



படுத்திருந்த திண்ணை காலியாக இருந்தது. பறந்து விடாமல் கல் வைக்கப்பட்டு ஒரு துண்டுக் காகிதம் காணப்பட்டது.

'பாதிக்கப்பட்ட கிராமத்துக் குழந்தைகளின் சார்பில் கோவிந்துவுக்குத் தண்டனை கொடுத்தேன். அதற்கு இதுதான் உங்கள் ஆதரவு என்றால் எனக்கு இந்த வீடு வேண்டாம். போகிறேன். தேட வேண்டாம்— பங்காரு,' என்று எழுதப்பட்டிருந்தது.

தாய்ப்பாச மிகுதியால் தாயம்மாள் அழுத அழுகை கிராம மக்களை உசுப்பி விட்டது. அன்றே மறுபடி பஞ்சாயத்துக் கூட்டம் நடைபெற்றது. மணியக்காரரின் மகன், கம்பளிப் பூச்சிக் கோவிந்துவின் கொடூரச் செயல்கள் அலசப்பட்டன. நரசிம்மலுவுக்கு விதிக்கப்பட்ட தண்டனை அநியாயம் என்று ஏற்கப்பட்டு அது ரத்து செய்யப்பட்டது. அந்த தண்டனை மணியக்காரருக்கு வழங்கப்பட்டது.

"உங்களுக்கு நியாயம் கிடைத்து விட்டது. ஆனால் என் தங்க மகன் பங்காரு போய் விட்டான். இனி அவனை எங்கே காண்பேன்?'' என்று புலம்பினாள் தாயம்மாள்.

பங்காரு வீட்டை விட்டு ஓடிப் பத்து ஆண்டுகள் பறந்து விட்டன. அவனைத் தேட எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. எல்லோருமே அவனை மறந்து விட்டார்கள். ஆனால், தாயம்மாவின் தாயுள்ளம் அவனை மறக்கத் தயாராக இல்லை. தெருவில் நடக்கையில் பஸ்சில் எங்கேயாவது செல்கையில், திருவிழாக்களில், ஊர்வலங்களில் பங்காரு எங்கேயாவது கண்ணில் படுகிறானா என்று பார்த்துக் கொண்டே போவாள். தன் மகன் எப்படியும் ஒரு நாள் கண்டிப்பாகத் திரும்பக் கிடைப்பான் என்ற நம்பிக்கையை அவள் இழக்கவே இல்லை.

ஒரு திருமணத்தை முன்னிட்டுத் திருத்தணிக்கு வந்த நரசிம்மலு, குடும்பத்துடன் திருப்பதிக்கும் சென்றார். திருமலையில் பஸ்சை விட்டு இறங்கியதும் ஓர் அதிசயம் நடந்தது.



இரண்டு போலீஸ்காரர்கள் ஓர் இளைஞனை இழுத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தனர். இளைஞனைப் பார்த்ததும் "பங்காரு ....பங்காரு!" என்று கத்திக் கொண்டே அவன் பின்னால் ஓடினாள் தாயம்மா.

"தாயம்மா, பைத்தியம் மாதிரி நடந்துக்காதே. எல்லோரும் நம்மையே பார்க்கிறாங்க!" அது நம்ம பங்காரு இல்லே யாரோ திருட்டுப் பய!" என்று இரகசியமாகக் கடிந்து கொண்டார் நரசிம்மலு.

"இதோ பாருங்க, உங்களுக்கு அவமானமா இருந்தா தூரப் போய் நின்னுக்குங்க," என்று அழுதாள் தாயம்மா.

"அவன் நம்மை விட்டுப் பிரிந்து பத்து வருஷமாச்சு தாயம்மா!"

"இருக்கட்டுமேங்க. அவனை கண்ணால பார்க்காட்டாலும், ஒவ்வொரு நாளும் அவன் வளர்ச்சி எப்படி இருக்கும்னு என் மனக் கண்ணால் சித்தரிச்சு வைச்சிருக்கேனுங்க. அதை வைச்சுத்தான் சொல்றேன். போலீஸ்காரங்க புடிச்சுட்டுப் போற இந்த இளைஞன், நம்ம பங்காருவே தாங்க. விசாரிச்சுப் பாருங்க," என்று கணவனின் கால்களைப் பற்றிக் கொண்டு கண்ணீர் வடித்தாள் தாயம்மா.

விஷயத்தை உணர்ந்து போலீஸ்காரர்கள் நின்றனர். வேறு வழியின்றி இளைஞனும் நின்றான்.

"தம்பி, உன் பேரு என்னப்பா? அப்பா அம்மா இருக்காங்களா?" என்று கேட்டார் நரசிம்மலு.

"என் பேரு நாகராஜன். அப்பா பெயர் பீமராஜுடு. அம்மா பெயர் அத்திரிதேவி. எங்க ஊர் பீயம் தண்டி கிராமம்," என்றான் அந்த இளைஞன்.

"கேட்டாயா? இவன் வேற யாரோ. அதோட நியாயத்துக்காகப் போராடின நம்ம பங்காரு எங்கே....? என்னவோ குற்றம் செய்து விட்டுத் தவிக்கும் இவன் எங்கே?" என்று மனைவியிடம் கிசுகிசுத்தார் நரசிம்மலு.

"இல்லவே இல்லை. இவன் நம்ம பங்காருவேதான். வலது புறங்கால்ல



"உங்க பையன் கிளாஸ்ல பஸ்ட் வாங்க டி.வி.தான் காரணம்னு எப்படிச் சொல்றீங்க...?"

"டேய்! நீ படிக்கலைன்னா... டி.வி. முன்னாடி அரைமணி நேரம் கட்டிப் போட்டுடுவேன்'னு மிரட்டினதால தான்..." — மொரப்பூர் அ. நவ்சாத்.

கம்பி மத்தாப்பு தீய்த்த வடுவைப் பாருங்க. இவன் என்ன காரணத்திற்காகவோ பொய் சொல்கிறான்," என்று விடாமல் கண்ணீர் விட்டாள் தாயம்மா.

போலீஸ்காரர்களுடன் அந்த இளைஞன் சென்று விட்டான்.

"பத்து வருஷத்திற்குப் பிறகு பையனைக் கண்ணெதிரே பார்த்தும் தொட்டுப் பேசக் கூடப் பாக்கியமில்லாமப் போச்சே! பொது நியாயத்துக்காக நீதி கேட்டு அடி வாங்கின என் மகன் எந்தக் குத்தமும் செய்திருக்கவே மாட்டான்," என்று அழுது அரற்றினாள் தாயம்மா.

"அப்படிச் சொல்லாதேம்மா. அவன் என்னிடம்தான் ஆபீஸ் பையனா வேலை பார்க்கிறான். தங்கமான பையனாத்தான் இத்தனை காலமும் இருந்தான். இன்னிக்கு என்னவோ அவன் நியாயம் தவறிட்டான். என் மூணு வயதுப் பெண் குழந்தை சித்ராவுக்குப் பேச வராது. அவளை இவன்தான் பார்த்துக் கொண்டான். எல்லோருமாக சாமி தரிசனம் பண்ணி விட்டு வெளியே வந்து பார்த்தால் சித்ராவின் கழுத்தில் போட்டிருந்த ரோஜா மலர் நெக்லசைக் காணோம். இவன்தான் திருடியிருக்க வேண்டும். நான்தான் போலீசில் புகார் செய்தேன். இழுத்துக் கொண்டு போகிறார்கள்," என்று கூறினார் பக்கத்தில் இருந்த ஒரு கடுக்கன்காரர்.

"கண்டிப்பாக நெக்லசை அவன் திருடியிருக்க மாட்டான் ஐயா. அவன் பத்து வருஷத்துக்கு முன்பே நியாயம் கேட்டுப் போராடித் தண்டனை பெற்றவன்," என்று பதறினாள் தாயம்மாள்.

போலீஸ் ஸ்டேஷனில் லாக்கப்புக்குள் அந்த இளைஞன் இருந்தான். தாயம்மா கணவனுடன் ஓடோடி வந்தாள்.

"நான் உன் பையனில்லை என்று எத்தனை முறை சொல்வது? திருட்டுப் பட்டம் கட்டப்பட்டுள்ள ஒருவனை உன் பிள்ளை என்று சொந்தம் கொண்டாட உனக்கு அவமானமாக இல்லையா?" என்று சீறினான் இளைஞன்.

"என் மகன் திருடனாக இருக்க முடியாதுப்பா," என்று கண்கலங்கிய தாயம்மா, "தம்பி, நல்லா யோசிச்சுப் பாருப்பா. கடைசியா நெக்லசைக் குழந்தை கழுத்தில எப்போ பார்த்தே?" என்று கெஞ்சினாள்.

"உண்டி அறைக்குப் போகும் வரை அது குழந்தையின் கழுத்தில்தான் இருந்தது. வெளியே வந்து பிரசாதத்திற்கு நின்ற போது காணவில்லை. குழந்தையை நான்தான் தூக்கி வைத்துக் கொண்டிருந்தேன். யாரும் அபகரிக்க இடமே இல்லை," என்றான் அந்த இளைஞன் வேண்டா வெறுப்பாக.


"தம்பி, நீயும் எடுக்கலே. யாரும் எடுக்க வாய்ப்பும் இல்லே. அப்போ அந்தக் குழந்தையே நீ அறியாமல் நெக்லசைத் தானே கழற்றி உண்டிக்குள் போட்டிருக்கலாம் அல்லவா?"

போலீஸ் இன்ஸ்பெக்டருடன் தாயம்மா கணவனைக் கூட்டிக் கொண்டு தேவஸ்தான அலுவலகத்திற்கு ஓடினாள். தாயம்மா ஊகித்தபடியே அந்த ரோஜா மலர் நெக்லஸ் மறுநாள் காலை உண்டியலை உடைத்தபோது கண்டுபிடிக்கப்பட்டது.

"திருட்டுப் பட்டம் சுமத்தப்பட்ட நிலையில் உங்கள் பிள்ளை என்று கூறிக் கொள்ள மனம் இடம் கொடுக்கவில்லைம்மா," என்று தாயம்மாவின் கால்களைக் கட்டிக் கொண்டு பங்காரு அழுதான்.

"கொலைகாரனைக் கூட மகனென்று உறவு கொண்டாடும் மனத்துணிவு தாயன்புக்கு மட்டுமே உண்டு" என்று மனைவியைப் பற்றிப் பெருமை கொண்டார் நரசிம்மலு.





லண்டனில் கிறிஸ்டி என்ற பிரபலமான ஏலக்கடை உள்ளது. அந்தக் கடையில், அண்மையில் ஒரு பழைய கேக் துண்டு ஏலம் விடப்பட்டது. இந்தத் துண்டுக் கேக்கை ஆஸ்திரேலியர் ஒருவர் ரூ. 5000க்கு ஏலத்தில் எடுத்து விட்டார். இந்தத் துண்டு கேக், 150 ஆண்டுகளுக்கு முன் விக்டோரியா மகாராணியின் திருமணத்துக்காகச் செய்யப்பட்ட 'கேக்'கின் ஒரு பகுதியாம். அது சரி, அது அந்தக் கேக்கின் பகுதிதான் என்பதற்கு என்ன ஆதாரம்? அந்தக் கேக் துண்டு வைத்திருந்த அட்டைப் பெட்டியின் மீது "பக்கிங்காம் அரண்மனை, பிப்ரவரி 10, 1840" என்ற வாசகம் உள்ளது. அது விக்டோரியா மகாராணியின் திருமண நாள். இந்தக் கேக் துண்டை வைத்திருந்தவர் அதைத் தமது பாட்டியிடமிருந்து கவிகார உரிமையினால் பெற்றாராம். அவருடைய பாட்டி அந்தக் கேக்கை விக்டோரியா ராணியிடமிருந்தே பெற்றாராம்!

— எஸ். அரவிந்தன், ஆற்காடு.



ஒரு சமயம் ஸ்பெயினிலிருந்து இளைஞர் ஒருவர் தூதுவராக பக்கத்து நாட்டுக்கு அனுப்பப்பட்டார். அவரைக் கண்ட அந் நாட்டு அரசர், "ஸ்பெயினில் மனிதர்களே இல்லை போலும்! அதனால்தான் தாடி முளைக்காத ஒரு சிறுவனை அனுப்பியுள்ளார்கள்," என்று கிண்டலுடன் சொன்னார்.

அதற்கு அந்த இளைஞர், "அரசே! அறிவு என்பது தாடியில் இருப்பதென்று, எங்கள் மன்னருக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் எனக்குப் பதிலாக ஒரு வெள்ளாட்டையே அனுப்பி வைத்திருப்பார்!" என்று பதிலடி கொடுத்தார்.

— எஸ். ரவி, வந்தவாசி.



(சிங்கப்பூரைப் பற்றிய சின்னச் சின்ன செய்திகள்)

* உலகின் மிகச் சிறிய நாடு. இதன் பரப்பு 1000 ச. கி. மீ.
* சிங்கப்பூரின் பழைய பெயர் டெமாசேத்.
* இந்நாட்டின் மக்கட் தொகை 2.5 மில்லியன்.
* சிங்கப்பூர் நாட்டு மக்களில் 13% கல்வி அறிவு பெற்றவர்கள்.
* 13 ஆம் நூற்றாண்டிலேயே சிறப்பான இடம் வகித்திருந்தது சிங்கப்பூர் நகரம்.
* சிங்கப்பூர் என்பது சமஸ்கிருத மொழியிலிருந்து வந்தது.

— மு. பூபாலன், மூஞ்சூர்பட்டு — 57.

கடல்விட்டு நிலம் ஏறும் ஆறு

சாதாரணமாக நிலத்திலிருந்து கடலைச் சென்றடையும் ஆறுகளைத்தான் கண்டிருப்பீர்கள். ஆனால், கிரீஸ் தேசத்துக்கு அருகிலுள்ள செபலோனியா என்னும் தீவில் கடலிலிருந்து நிலத்துக்குச் செல்லும் ஆறு ஒன்று உள்ளது. அங்கே கடல் நீரானது மணிக்கு இரண்டு மைல் வேகத்தில் 150 அடி தூரம் நிலத்தின் மீது செல்கிறது. அப்படிச் செல்லும் நீர் 150 அடி தூரம் ஓர் ஆறு போல்.' அங்குள்ள பாறைகளின் இடையே பாய்ந்து மாயமாக மறைந்து விடுகிறது. அப்படி மறைவதற்கு என்ன காரணம் என்று இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை.

ஆதாரம்: திரு. பொ. திருகூடசுந்தரம் அவர்கள் எழுதிய 'விஞ்ஞானக் கேள்வி பதில்கள்' என்ற நூல்.

— கே. எல். குமணன்,
கல்லிடைக்குறிச்சி.



சின்னக் குழந்தைகள் பத்திரிகைகளை படித்துக் கிழிப்பது உண்டு! கிழிப்பதுடன் நிறுத்தினால் பரவாயில்லை. சில குழந்தைகள் பத்திரிகைத் தாள்களைச் சுவைத்துச் சுவைத்தும் தின்பது உண்டு! ஆனால் இது மிகவும் ஆபத்தானது!

பத்திரிகை அச்சிடப்படும் மையில் காரீயம் இருக்கிறது - இந்தக் காரீயம் குழந்தைகளின் மூளை வளர்ச்சியைப் பாதிக்கும். குழந்தைகள் கழுதை போல மந்தம் ஆகி விடுவார்கள்!

— ஆர். ஜெயலட்சுமி,
திருநெல்வேலி — 6.

புத்தியைத் தீட்டக் கத்தி



நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் எர்னெஸ்ட் ஹெமிங்வே எழுதத் தொடங்குவதன் முன் ஒரு பெரிய பென்சிலை எடுத்துக் கூர் சீவத் தொடங்குவார். சீவிக் கொண்டே இருப்பார். பென்சிலே தேய்ந்து போய் விடும்.

இப்படியாக இரண்டு மூன்று பென்சில்களைக் கத்தியால் சீவிச் சீவியே தீர்த்தவுடன் எழுதத் தொடங்குவார்.

பைத்தியமா இவருக்கு? இல்லை. அப்போதுதான் அவருக்கு எழுதுவதற்கு மூட் வருமாம். இப்படி ஒரு விநோதப் பழக்கம்.

— ஆ. வெங்கடேசன், திண்டிவனம்.

ஒரு கொலை பிரபலம்!

உலகில் பிரபலமான நாடகம்!' அவர் 'அமெரிக்கன் கஸின்' ரொம்பவும் பிரபலமாகி விட்ட நாடகம். நாடகம் பார்த்துக் கொண்டிருந்த ரசிகரின் இறப்பினால் பிரபலமானது. துப்பாக்கிக் குண்டு மூலம் கொலை செய்யப்பட்ட அந்த ரசிகர் பெயர் ஆபிரகாம் லிங்கன். இந்தச் சம்பவம் நடந்து சுமார் 100 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது அமெரிக்காவில் மீண்டும் அந்த நாடகம் அரங்கேற்றப்படவிருக்கிறது.

— ஜி. விஜயகுமார், வந்தவாசி.

ஏழோ ஏழ்..!

1. ஏழு பிறப்பு:
தேவர், மனிதர், விலங்கு, பறவை,

ஊர்வன, நீர்வாழ்வன், தாவரம் ஆகும்.

2. ஏழுமலை

கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், எமகூடம், நீலகிரி என்பவையாகும்.

3. ஏழுவகைப் பெண் பருவம்:

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண்.

4. ஏழு முனிவர்: "சப்த ரிஷிகள்"

அகத்தியன், புலத்தியன், அங்கிரா, கௌதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டன்.

5. எழுவகை அளவை:

நிறுத்தளத்தல், பெய்தளத்தல், சார்த்தியளத்தல், நீட்டியளத்தல், தெளித்தளத்தல், தேங்கமுகந்தளத்தில், எண்ணியளத்தல்.

6. எழுவகைத் தானியங்கள்:

நெல், கொள், எள், உளுந்து, துவரை, கடுகு, பயறு.

7. ஏழு மேகம்:

சமவர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரிதம், துரோணம், காளமுகில், நீலவருணம் என்பனவாகும்.

— தமிழ்ப் பேரகராதியிலிருந்து.
தொகுத்தவர்: அ. க. கிருஷ்ணன்,
சென்னை — 39.



கிரிக்கெட் மட்டையைக் கண்டுபிடித்தவர் இரு நூறு ஆண்டுகளுக்கு முன்புதான் இப்போதிருக்கும் கிரிக்கெட் மட்டை வடிவமைக்கப்பட்டது. இங்கிலாந்திலுள்ள மீட்டர்ஸ் மீல்டு நகரைச் சேர்ந்த ஜான் மால் என்பவர்தான் இன்று உள்ளது போல் கிரிக்கெட் மட்டையை வடிவமைத்துக் கொடுத்தவர். நாலரை அங்குல அகலம் முப்பத்தெட்டு அங்குல நீள அளவிலான இந்த மட்டையை வடிவமைத்த ஜான் ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளி.

— ஜி. விஜயகுமார், வந்தவாசி.

பெரியது கேட்கின்...

- பாரதத்தின் மிகப் பெரிய ஏரி காஷ்மீரில் உள்ள ஊலார் ஏரியாகும்.
- பாரதத்திலுள்ள மசூதிகளில் மிகப் பெரியது டெல்லியில் உள்ள ஜும்மா மசூதி ஆகும்.
- பாரதத்தின் மிகப் பெரிய மிருகக் காட்சி சாலை அலிப்பூரில் உள்ளது.
- பாரதத்தில் உள்ள மிக உயரமான அணை பக்ரா நங்கல் அணையாகும்.

ஆதாரம்: பொது அறிவுப் பூஞ்சோலை.
தொகுப்பு: தா. ஷேக் அப்துல்லா,
செஞ்சி — 2.



டெஸ்ட் டியூப் குழந்தையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். டெஸ்ட் டியூப் புலியைப் பற்றித் தெரியுமா? கடந்த மாதம் (ஏப்ரல்) 27 ஆம் தேதி ஒமாகாவின் ஹென்ரி டூர்லி மிருகக் காட்சிச் சாலையில் உள்ள நிகோல் என்ற புலிக்கு இரண்டு புலிக் குட்டிகள் டெஸ்ட் டியூப் மூலம் பிறந்துள்ளது. உலகிலேயே முதன் முதலாக டெஸ்ட் டியூப் மூலம் பிறக்கும் மிருகம் இதுதான்.

— இலக்மன், கல்லிடைக்குறிச்சி.

பண்பிலே தெய்வமாய்..



கொ.மா.கோதண்டம்

தோப்புக் காவலாளி பெருமாளும் தோப்புக்காரரின் மகன் கண்ணனும் அந்த மலையடிவாரத்து ஆதிவாசிகளின் குடிசைகளுக்கு அருகில் வந்து அவர்களது நாட்டாண்மையை அழைத்தனர்.

சட்டையில்லாமல் இடுப்பில் கந்தல் வேட்டியுடன் பரட்டைத் தலையாக ஒரு நோஞ்சான் கிழவர் வந்தார்.

"நாளக்கி எங்க மொதலாளி தோப்புல வனப்பேச்சி சாமிக்கி குரு பூஜை. பளியங்க எல்லாரையும் சாப்பிட அழைச்சிட்டு வந்துருங்க பெரியவரே! ஆறு பேருக்கு வேட்டிகளும் கிடைக்கும்."

பெருமாள் இப்படிக் கூறியதும் அவர் முகமெல்லாம் பல்லாக, "சரி சாமி," என்றார்.

"அந்தப் பையன் நீலன் எங்கே?"

"இதோ வந்திட்டேன் சாமி," என்றவாறே குடிசையிலிருந்து ஆதிவாசிச் சிறுவன் ஓடி வந்தான்.

"என்ன சாமி ஏதாச்சும் வேலையா?" என்றான்.

"வாழை இலைக்கட்டு காலையில தான் வரும் போலிருக்கு. சமயக்காரங்களுக்கும், தோப்பு ஆளுங்களுக்கும் சாப்பிடத் தேக்க இலை பறிச்சுத் தரணும். கூட நீ வாரியா?"

"சரி சாமி. அப்பனுக்கு ஒடம்புக்கு ஆகல்ல. கஞ்சி குடுத்துட்டு வந்திடுறேன். நீங்க வடக்கே தேக்கங் காட்டுக்குப் போயிக்கிட்டு இருங்க. இப்ப ஓடியாந்திடுறேன்."

"சரி, வெரசா வந்துடு. சின்ன மொதலாளி நீங்க வாங்க போகலாம்," பெருமாளு சொல்லி விட்டு நடந்தார். கண்ணனும் பின்தொடர்ந்தான்.

கண்ணனின் அப்பாவுக்கு மலையடிவாரத்தில் சொந்தமாகப் பெரிய தோப்பு இருந்தது. தோப்போர ஆற்றங்கரையில் ஒரு பெரிய மரத்தின் கீழ் கரிய எண்ணெய்ப் பிசுக்குடன் கூடிய ஒரு கல் நடப்பட்டிருந்தது. அது தான் வனப்பேச்சி கோவில். சுற்று வட்டாரத் தோப்புக்காரர்கள் அவ்வப்போது அங்கே பூஜை செய்வார்கள்.

தோப்பில் திருட்டு நடக்காமல் இருப்பதற்கும் நல்ல வருவாய் கிடைப்பதற்கும் வனப்பேச்சி சாமி அருள் செய்வாள் என்பது அவர்கள் நம்பிக்கை.

நாளை இவர்களது குரு பூஜை. மலைப்பளியர்கள், சுற்று வட்டாரத் தோப்புக்காரர்கள், உறவினர்கள், ஊரிலுள்ள ஏழைகள் யாவருக்கும் விருந்து விமரிசையாக நடக்கும். முதல் நாள் சமையல் பாத்திரங்கள், அரிசி, பருப்பு, காய்கறி ஆகிய பொருள்கள், சமையல் ஆட்கள் சகிதம் வண்டி புறப்படும் போது, "நானும் இன்னிக்கே போவேன்," என்று கண்ணன் தந்தையிடம் அடம் பிடித்தான்.

முதலில் மறுத்தவர் அவன் அழவே ஒப்புக் கொண்டார். "ஏ பெருமாளு, பையனைப் பத்திரமாப் பாத்துக்க. ராவுல தோப்பு ரூமுல கட்டில்ல கம்பளி விரிச்சிப் படுக்கப் போட்டு

நீ கீழ படுத்துக்க. அங்கிட்டும், இங்கிட்டும் ஓட விடாதே. ஞாபகம்,'' என்று எச்சரித்து அனுப்பினார்.

பளியர்களை அழைக்கவும் தேக்க இலைகளைப் பறிக்கவும் பெருமாளு போகும்போது, ''நானும் கூட வருவேன்,'' என்று கண்ணன் புறப்பட்டு விட்டான்.

பச்சைப் பசேல் என்றிருந்த அழகிய அந்தப் பெரிய மலையும், அடிவார வனமும், பறவைகளும், குரங்குகளும் கண்டு கண்ணன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். அடர்ந்த தேக்கங் காட்டின் ஒற்றையடிப் பாதையில் அவர்கள் நடந்தனர்.

மரங்களை மேகங்கள் சூழ்ந்ததைப் போன்று வெண்ணிறப் பூக்கள் அழகுடன் காட்சியளித்தன.

''யோவ் பெருமாளு, என்ன இந்த மலைப்பளியங்ககிட்ட போயி மரியாதையா அழைக்க வேண்டியிருக்கு? சாப்பிட வாங்கடான்னு அதட்டிக் கூப்பிட வேண்டியதுதானே? இலை பறிக்க அந்தப் பையனை வேறு கெஞ்சறாப்பல ஏன் கூப்புடணும்? நாம விருந்து கொடுக்கோம்; அவங்க பிச்சைக்காரங்க மாதிரி சாப்பிட வாராங்க. இந்தக் காட்டாங்களுக்கு என்ன மரியாதை கேட்குது?''

''கண்ணன் இப்படிக் கூறியதும் பெருமாளு சிறிது நின்றார். ''தம்பி. இந்த மலை சனங்க சூது, வாது, கபடம் அறியாத எளிய சனங்க. யாருக்கும் எந்தக் கெடுதலும் நினைக்காதவங்க. தான் வாழ்ந்தா போதும் அதுக்காக அடுத்தவன் ஒழிஞ்சா பரவாயில்லேன்னு நம்ம நாட்டுச் சனங்க நெனப்பாங்க. பாவம், இவங்களுக்கு அதெல்லாம் தெரியாது. கெடைச்சா சாப்பிடுவாங்க; இல்லாட்டி எல்லாரும் பட்டினி கெடப்பாங்க. ரொம்ப அப்பாவி சனங்க. அதனாலதான் இவங்கள சாமி புள்ளகன்னு நாம சொல்லுவோம். நாளக்குப் பாருங்க ஒங்க அப்பாவே இவங்களுக்கு எண்ணெய் தந்து, கெணத்துல மோட்டரு தட்டி விட்டு குளிக்கச் சொல்லி, புது வேட்டி தந்து உடுத்தச் சொல்லி அவுக கையாலேயே இவங்களுக்குச் சாப்பாடு பரிமாறுவாங். கண்ணா பாத்துக்கிடுங்களேன்.''



''அப்படியா? எனக்கென்னமோ இவங்களப் பாத்தாப் பிடிக்கல்லே அசிங்கமா இருக்காங்க'' கண்ணன் இப்படிக் கூறியதும் —

''அப்படிச் சொல்லக் கூடாதுங்க சின்ன மொதலாளி,'' என்றார் பெருமாளு.

இவர்கள் பேசிக் கொண்டு நடக்கும்போதே நீலன் வந்து விட்டான்.

''சாமி, எதுக்கு ரெம்ப தூரம் நடக்கேங்க? இங்கதான் மரங்கள்ள நல்ல இலைக இருக்குல்லே, கொஞ்சம் இப்

பீடி நில்லுங்க. நான் இந்த மரத்துல ஏறி இலை பறிச்சுப் போடுறேன்,'' என்று கூறி விட்டு அருகில் இருந்த மரத்தில் 'விடுவிடு' என்று ஏறத் துவங்கினான்.

நீலனுடன் வந்த குட்டி நாய் மரத்தைச் சுற்றி வந்தது. கண்ணன் முகத்தைச் சுளித்துக் கொண்டான்.

நீலன் மேலேயிருந்து இலைகளைப் பறித்துப்போட, பெருமாள் அவற்றை எடுத்துச் சேகரித்தார். குனிந்து ஓர் இலையை எடுக்கும் போது கீழே சிறு செடிகளின் உள்ளிருந்து சரசர வென்று ஏதோ ஓடியது. ''ஏய் நீலா, இது பச்சோந்திதானே?''

அவன் கீழே பார்த்து விட்டு, ''ஆமா சாமி, அதுவேதான்,'' என்றான்.

''ஏம்பா, எம் பொஞ்சாதிக்கு காலு கை ஒரே கடுப்பு. ஓந்தி ரத்தம் கொடுத்தா சரியாப் போகுமுன்னு சொன்னாக. கொஞ்சம் புடிச்சுக் கொடேன், வீட்டுக்கு எடுத்துட்டுப் போறேன்.''

''சாமி, அது பாவம் சாமி. அதை விட்டுருங்க. நான் காட்டுக் கொடி இலை பறிச்சுத் தாரேன். இடிச்சிச் சாறெடுத்து மூணு நாள் கொடுங்க, சரியாப் போகும்.''

கண்ணன் பாதையிலேயே நின்று கொண்டிருந்தான்.

''சாமி இலை போதுமா?''

''போதும்பா. நாளக்கு விருந்தே இந்த இலையிலயா போடப் போறம்?" என்றவர் திரும்பினார்.

கண்ணனை அங்கு காணவில்லை. பாதையில் பார்த்தார். சிறிது தூரத்தில் ஏதோ ஒரு பிராணி ஓடிக்கொண்டிருந்தது. அதை விரட்டிக் கொண்டு நாய்க் குட்டியும் அதன் பின் கண்ணனும் ஓடிக் கொண்டிருந்தனர்.

அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''ஏய் நீலா, பெரிய நரி போல ஏதோ ஓடுது. நாய்க் குட்டியும் சின்ன



மொதலாளியும் பின்னால துரத்திட்டு போறாங்கப்பா.''

''சாமி, அது என்ன மாதிரி ஓடுது?'' பதட்டத்துடன் கேட்டான் நீலன்.

''என்னமோ பின்னால அடிபட்டது மாதிரி ஒடம்பை இழுத்துக்கிட்டு ஓடுது.'' என்றதும் மரத்திலிருந்து நீலன் தொபீர் என்று கீழே குதித்தான்.

கீழே கிடந்த ஒரு தடிக் கம்பைக் கையில் எடுத்துக் கொண்டு மின்னல் வேகத்தில் பின்னால் ஓடினான். ஓடிக் கொண்டிருந்த அந்த மிருகம் விரட்டிக் கொண்டு வந்த நாயையும் கண்ணனையும் அருகில் வரட்டும் என்பது போல நின்றது. நீலன் கையில் தடியுடன் ஓடி வருவதைப் பார்த்ததும் சடாரென்று குறுக்கே புதருக்குள் ஓடி மறைந்தது.

''தொலைஞ்சிப் போயிட்டயா..'' என்றவாறே தடியைக் கீழே எறிந்த நீலனுக்கு ஓடி வந்த வேகத்தில் பெருமூச்சு வாங்கியது. ஒன்றும் புரியாமல் நின்ற கண்ணனின் அருகில் வந்து, ''என்ன சாமி, வனத்துக்குள்ள இப்படி மிருகத்துக்குப் பின்னால வெரட்டிக்கிட்டு வரலாமா? இப்ப நா வரல்லேன்னா என்ன ஆயிருக்கும் தெரியுமா?'' என்று கூறிக் கொண்டிருந்த போதே பெருமாளும் 'லொங்கு லொங்கு' என்று ஓடி வந்து சேர்ந்தார்.

''என்னப்பா நீலா, என்ன அது? சின்ன மொதலாளி வேற ஓடி வந்ததும் எனக்குப் பதறிப் போச்சுப்பா,'' என்றார்.

''அடிபட்ட நரியை நாய் எப்படிப் புடிக்குதுன்னு வேடிக்கை பார்க்கலாம்னுதானே நான் ஓடி வந்தேன்? இதுல என்ன இருக்கு?'' கண்ணன் சாவகாசமாக பதில் கூறினான்.

''சாமி, அது நரியில்லே; கழுதைப்



புலி சாமி!''

''என்னது, கழுதைப் புலியா!'' பயத்தில் பெருமாளுக்கு உதறல் எடுத்தது.

''அப்ப வாங்க, எல்லாரும் ஓடிப் போயிருவோம்.''

''இப்ப அது ஓடிப் போச்சில்ல சாமி, கழுதைப் புலி நரியாட்டம் இருந்தாலும், அது மாதிரி ரெண்டு மூணு மடங்கு பெரிசா இருக்கும். மொகத் தாடையில பலம் அதிகம். முன்னால ஒடம்பு பெருத்தும் முன் காலுக நீட்டமாவும் இருக்கும். பின் பக்கம் உடம்பு சிறுத்தும் காலுக குட்டையாகவும் இருக்கும். அதனால நடக்கும் போது நொண்டுற மாதிரியும் அடிபட்டு உடம்பை இழுத்துட்டுப் போற மாதிரியும் இருக்கும்.''

''ஆமா... அப்படித்தான் இருந்துச்சி. நான் சின்னப் புள்ளயா இருக்கும் போது எங்க ஊரு சஞ்சீவி மலைக்கு இங்க இருந்து ஒரு கழுதைப் புலி வந்ததாம். ஊருக்காரங்க எல்லாம் வேட்ட நாய்களைக் கூட்டிட்டுப் போயி தடிகளால் அடிச்சுக் கொன்னுட்டாகளாம்! எங்க அப்பா சொன்னாப்பல.''

''சாமி, கழுதப் புலி பலத்துல புலி தான். ஆனால் பயத்துல எலி மாதிரி. எல்லாத்துக்கும் பயந்து சாகும். மானு, பன்னி, கோழி, நாய், கொழந்தைகளைக் கண்டா விடாது. நல்லா ஏமாத்திரும். பயந்து ஓடுற மாதிரி ஏமாத்தும். வெரட்டிக் கிட்டுப் பின்னால போனா படக்குன்னு திரும்பிப் பாஞ்சி கொன்னு போடும். எதுத்தாப்பல புலி, எருமை இதுக அம்புட்டாலும் காலப் புடிச்சதுன்னா ஒடிக்காமெ விடாது. கழுதைப் புலி வாயில அம்புட்ட எந்த உசுரும் பொழக்காது சாமி.''

''அடடா! நல்ல வேளயில்லே.''


''சாமி, இது ரொம்ப தந்திரக்கார மிருகம். வீட்டுக்குள்ளே புகுந்து பெரிய ஆளுக மத்தியில படுக்க வச்ச புள்ளயக் கூட அரவமில்லாமெ தூக்கிட்டு வந்திடும். நம்ம காட்டுல அதிகமில்லேன்னாலும் ஒண்ணு ரெண்டு அங்கங்கே இருக்கத்தான் செய்யுது. வெரட்டி ஓடிப்போயிரும். தொரத்திட்டுப் போற சின்ன மிருகங்கள ஏமாத்திக் கொன்று போடும். புலி தின்னு கழிச்ச 'அழுகின மாமிசம் கழிவுக இதெல்லாம் தின்னுடும். மொத்தத்துல கழுதப் புலி காட்டைச் சுத்தமா வச்சிருக்குற ஒரு தோட்டி போல, இன்னிக்கி என்னமோ வனப்பேச்சி தான் நம்ம சின்ன மொதலாளியைக் காப்பாத்தியிருக்கு, சரி சாமி, வாங்க போகலாம்'', நீலன் நடக்க ஆரம்பித்தான்.

கண்ணனின் நெஞ்சு 'படக் படக்' கென்று அடித்துக் கொண்டது. பெருமாளு வந்து நீலனின் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

''இன்னிக்கி நீ பல உசுருகளைக் காப்பாத்தினேப்பா. நீதான் உண்மையிலேயே தெய்வம் மாதிரி. சின்ன மொதலாளிக்கு ஏதாவது ஆகியிருந்தா பெரியவக என்னைச் சுட்டே கொன்னு போட்டுருப்பாங்க.''

பெருமாளின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொல பொலவென்று வடிந்தது. கண்ணனும் கண்ணீர் முட்ட நீலனைப் பார்த்தான்.

நீலன் ஒரு தெய்வமாகத்தான் அவனுக்குத் தெரிந்தான்.



பசுவுக்குப் பெருமை தெரியுமா?

'பளிச் பளிச்' சென்று காமிராக்கள் மின்னின. திரைப்படத் துறையினரும், தொலைக் காட்சிப் பிரிவினரும் காமிராக்களைத் தட்டிப் பல கோணங்களில் படமெடுத்தனர். ஆரவாரமும் கண் கூசும் ஒளியும் சேர்ந்து கன்றுக் குட்டியை அமைதி யிழக்க வைத்தது. அது துள்ளிக் குதிக்க ஆரம்பித்தது.

முத்துசாமி தலைக் கயிற்றை இறுக்கிப் பிடித்தான். மாணிக்கம் கன்றை மெதுவாகத் தட்டிக் கொடுத்தார்.

''என்ன ஆச்சு உனக்கு? ஏன் இப்படி திமிர்னு துள்ளிக் குதிக்கறே?" என்று கேட்டது தாய்ப் பசு.


''எனக்கு இந்தக் கூட்டமே புடிக்கலே. வாம்மா, நாம்ப நம்ம தொழுவத்துக்கே போயிடலாம்,'' என்றது கன்று.

''இப்படி நூற்றுக்கணக்கான பேர் பார்க்கும்படி நிற்பது எனக்கு மட்டும் பிடிச்சிருக்கா என்ன?''

''பின்னே போக வேண்டியது தானே?''

தாய்ப் பசு, கன்றை ஆசையுடன் நக்கிக் கொடுத்தது. ''நம்மால நம்ப ஐயாவுக்கு இன்று பெரிய பெருமை கிடைச்சிருக்கு. தமிழ் நாட்டில் மிக நன்றாகப் பராமரிக்கப்படும் பசுவும் கன்றும் நாம்தானாம். அதோடு கோவை மாவட்டத்தில் மிக அதிக அளவில் பால் தரும் பசுவும் நான் தானாம். அதனால் நம்ம ஐயாவுக்குக் கவர்னர் பொன்னாடை போர்த்தி, மாலை போட்டு, ஆயிரம் ரூபாய் பரிசும் தரப் போகிறாராம். ஆச்சு, கவர்னர் வந்ததும் விழா ஆரம்பமாகி விடும். நாமும் கிளம்பி விடலாம். நம்மை வளர்க்கும் ஐயாவுக்கு நம்மால ஒரு பெருமை கிடைக்கப் போகிறது என்றால், அதில் நமக்கும் பெருமை இருக்கிறது இல்லையா? அதை நாமும் பார்த்து மகிழ வேண்டாமா?"

கன்று கூட்டத்தைப் பார்த்துப்



ரேவதி



பார்த்து மருண்டது. ''நம்ப ஐயாவுக்குப் பெருமை என்றால் நமக்கு என்னம்மா இலாபம்?''

''நம்ப ஐயா, மற்றவர்களைப் போன்றவர் இல்லை. நீ பிறந்த உடனேயே, உன் தோல் மிக மென்மையாக இருக்கிறது என்று தொப்பி செய்பவர்கள் நம்ப ஐயாவிடம் வந்து உன்னை விலைக்குக் கேட்டார்கள். நிறையப் பணம் தருவதாகவும் ஆசை காட்டினார்கள்...''

கன்று தாய்ப் பசுவை மருட்சியோடு நோக்கியது.

''நம்ப ஐயா என்ன பதில் சொன்னார் தெரியுமா? 'எவ்வளவு பணம் தருவதானாலும் சரி, தாயையும் கன்றையும் பிரிக்க மாட்டேன். நானும் என் குழந்தைகளும் இவற்றை எங்கள் குடும்பத்தினராகவே நேசிக்கிறோம்,' என்று உறுதியாகச் சொன்னார். மேய்ச்சலுக்குப் போகும் போது, ஒவ்வொரு எஜமானர்கள் எவ்வளவு கொடூரமாக நடந்துகொள்கிறார்கள் என்பதை மற்றப் பசுக்கள் கண்ணீருடன் கதை கதையாகக் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். பிறந்த அடுத்த வாரமே கன்றை விலை பேசும் எஜமானர்கள், கன்றுக்குப் பால் விடாமல் ஒட்ட ஒட்டக் கறக்கும் எஜமானர்கள் என்று எவ்வளவு கொடுமைக்காரர்களைப் பற்றி நான் கேட்கிறேன் தெரியுமா?''

கன்று, தாய்ப்பசு மேலே கூறப் போவதைக் கேட்க ஆவலாக இருந்தது.

''கன்றுக்குப் பால் வைக்காமல் ஒட்டக் கறக்காதே என்று நம்ம ஐயா கூறிக் கொண்டே இருப்பார். இவர் நமக்குக் கடவுள் மாதிரி,'' என்று கூறி நன்றிப் பெருக்கால் கண்கலங்கியது தாய்ப்பசு.

''இவ்வளவு தூரம் நீங்கள் விளக்கிய பிறகு நான் நம்ம ஐயாவை மரியாதைக் குறைவாகப் பேச மாட்டேன் அம்மா,'' என்று தாயின் உடலில் உரசிக் கொண்டது கன்று.

கூட்டத்தில் திடீரென்று சலசலப்பு. கவர்னர் வந்து விட்டார். அமைச்சர், மாவட்ட ஆட்சித் தலைவர் என்று எல்லா முக்கியப் புள்ளிகளும் கவர்னருடன் மேடைக்கு வந்தனர். தமிழ்த் தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது.

கவர்னர், கால்நடைச் செல்வங்களைப் பராமரிப்பதன் அவசியத்தைப் பற்றிப் பேசி, மாணிக்கத்தைப் புகழ்ந்தார். பொன்னாடை போர்த்த அவர் வந்த போது, ''இந்தப் பெருமைகளெல்லாம் எனக்கு என் பசுவால் கிடைத்தவையே. அதனால் இந்தப் பொன்னாடையையும், மாலையையும் என் பசுவுக்கே அளிக்க வேண்டுகிறேன்,'' என்று கேட்டுக் கொண்டார் மாணிக்கம்.

பலத்த கை தட்டல்களுக்கிடையே கவர்னர் தகதகத்த பச்சைச் சரிகைப் பொன்னாடையைத் தாய்ப் பசுவுக்கும் அணிவித்தார். ரோஜா மாலையைப் போட்டார். காமிராக்கள் பளிச்சிட்டன.

''வெள்ளை வெளேர் என்ற நம்ம பசுவுக்கு இந்தப் பச்சைப் பசேல் பொன்னாடையும், ரோஜா மாலையும் எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா? யாருடைய கண்ணாவது படப் போகுது. வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போ,'' என்று மாணிக்கம், பசுவையும் கன்றையும் முத்துசாமி அனுப்பி வைத்தார்.

''இவ்வளவு நல்ல ஐயா, எனக்கும் ஒரு மாலை போட்டிருக்கக் கூடாதா?'' என்று கன்று குறைபட்டுக் கொண்ட போது, தாய்ப் பசு சிரித்துக் கொண்



டது.

வழியில் கடை வீதி. கன்றுக்கு முன்பாக ஒரு சிறுவன் கறுப்புப் பேண்ட்டும், கறுப்புச் சட்டையும் அணிந்து, கைப் பையில் ஒரு பொட்டலத்துடன் சென்று கொண்டிருந்தான்.

''அம்மா, அந்தச் சிறுவனின் கையில் உள்ள பை ஓட்டையாயிருக்கு. என்னமோ விழுகிறதே!'' என்று தாயிடம் கூறிய கன்று சிறிது முன்னே விரைந்து தரையில் விழுந்ததை முகர்ந்தது. ''அம்மா உப்பு! வா வா!''

தாய்ப் பசுவும் விரைந்தது. பசுவும் கன்றும் தன் பின்னால் தொடர்ந்து வருவது, கீழே சிந்தும் உப்புக்காக என்பதை அறியாத சிறுவன் பீதியடைந்தான்.

''கறுப்பு உடை வேண்டாண்டா. மாடு துரத்தும்னு சொன்னால் கேட்டால்தானே?'' என்று சிறுவனின் தலையில் குட்டினாள் அவன் தாய்.

பசுவும் கன்றும் வீட்டை நெருங்கின. தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த பாபு, கன்றைக் கண்டதும் கையில் மறைத்து மடக்கி வைத்திருந்த சிவப்பு வண்ணக் குடையைத் திடீரென்று பிரித்துப் பூச்சி காட்டினான்.

குடையில் சிக்கியிருந்த சுள்ளெறும்பு ஒன்று தாய்ப் பசுவின் நெற்றியில் தெறித்து விழுந்து கடித்தது. பசு வால் வலியைத் தாங்க முடியவில்லை. தலையை அசைத்து அசைத்துப் பார்த்தது. எறும்பு விழவில்லை. வெறி பிடித்தது போல் பாபுவை ஒதுக்கித் தள்ளி விட்டு, கைப்பிடிச் சுவரில் நெற்றியை வைத்துத் தேய்த்தது.

''ஏண்டா சனியனே, சிவப்பு வண்ணம் மாட்டை மிரள வைக்கும்னு சொன்னால் கேட்க மாட்டேங்கறியே!'' என்று பாபுவின் தாய், அவனை அடித்து இழுத்துக் கொண்டு போனாள்.


''பச்சைப் புல், பச்சைப் பொன்னாடை, சிவப்பு ரோஜா மாலை, சிவப்புக் குடை என்று ஏதேதோ சொல்கிறார்களே... இதெல்லாம் உனக்குப் புரிகிறதா அம்மா? எனக்கு எல்லாமே கறுப்பு வெள்ளையாகத் தானே தெரிகிறது!'' என்று வருத்தத்துடன் கேட்டது கன்று.

''எனக்கும் அப்படித்தான் கண்ணே. வெள்ளையைத் தவிர இவர்கள் குறிப்பிடும் எல்லா வண்ணங்களும் நமக்குக் கறுப்பாகவே தெரிகின்றன. சிவப்பும், கறுப்பும், பச்சையும், நீலமும் நமக்கு ஒரே கறுப்புத்தான். உப்புக்காக நீ பையனைப் பின்தொடர்ந்ததை, அவன் கறுப்பு உடையைக் கண்டு நீ மிரண்டதாக இவர்கள் எண்ணுகிறார்கள். சுள்ளெறும்புக் கடிதாங்காது தேய்த்துக் கொள்ளவும் அதை நசுக்கி விடவும் நான் சுவரை நோக்கி ஓடியதை, சிவப்புக் குடையைக் கண்டு மிரண்டு துரத்துகிறேன் என்று பையனைத் திட்டுகிறார்கள். இந்த அழகில் நம்மை இவர்கள் மாடுகள் என்று குறிப்பிடுகிறார்கள்!'' என்று சிரித்தது அம்மாப் பசு.

அறிவியல் உண்மை:

உப்புக் கிடைத்தால் பசு விரும்பித் தின்னும்.

பசு ஒரு நிறக் குருடு. (கலர் பிளைண்டு). வெள்ளையைத் தவிர வேறு எந்த வண்ணமும் அவற்றுக்குக் கறுப்புத்தான். சிவப்பும் கறுப்பும் அவைகளை மிரள வைக்கும் என்பதற்கு அறிவியல் அடிப்படையில் ஆதாரம் ஏதுமில்லை.



பிருந்தாவனக்



வீட்டுப் புலி

வட்டக் கண்ணை உருட்டும் புலி!
வாயைப் பிளந்து மிரட்டும் புலி!
வெட்டும் பற்கள் முளைத்த புலி!
வேலைப் பழிக்கும் நகத்துப் புலி!

தட்டை மூக்கு வியர்க்கும் புலி!
தழைத்தே மீசை சிலிர்த்த புலி!
குட்டைக் காது விறைத்த புலி!
குழைத்தே வாலைச் சுழற்றும் புலி!

பட்டுத் தேகம் படைத்த புலி!
பஞ்சுப் பாதம் பதிக்கும் புலி!
சட்டிப் பாலைக் குடிக்கும் புலி!
சமர்த்தாய் வாயைத் துடைக்கும் புலி!

நெட்டை மதிலில் குதிக்கும் புலி!
நிமிர்த்தே பரணில் நடக்கும் புலி!
பட்டை வரியைத் தொலைத்த புலி!
பலரும் விரும்பி வளர்க்கும் புலி!

ஒட்டிச் சுருண்டு படுக்கும் புலி!
உறங்கிப் பகலைக் கழிக்கும் புலி!
எட்டி எலியைப் பிடிக்கும் புலி!
இரையாய்ப் புசிக்கும் பூனைப் புலி!

— தளவை. இளங்குமரன்,
செங்கற்பட்டு — 1.





தூக்கம் பறக்கும்

சின்னஞ் சிறிய குழந்தை
செல்லம் கொஞ்சும் குழந்தை
மழலை பேசி மனதை
மயக்கும் நல்ல குழந்தை!

தாயைக் கண்ணால் கண்டால்
தவழ்ந்து தவழ்ந்து செல்லும்
கன்னம் மின்னச் சிரிக்கும்
கனிவாய் முத்தம் கொடுக்கும்!

தாய்மை நிறைந்த உள்ளம்
துயரைத் தாங்கா உள்ளம்
தூக்கிக் கொஞ்சி மகிழ்ந்தால்
தூக்கம் பறந்து போகும்!

— மு. பிரகாசம், வந்தவாசி.

வீட்டுத் தோட்டம்

வீட்டில் தோட்டம் போடுவோம்
விதவிதமாய் விளையுமே!
பாட்டி விரும்பும் பாகற்காய்
பந்தலில் தொங்கும் புடலங்காய்!

கத்தரி அவரை தக்காளி
காரம் மிக்க மிளகாயும்,
நித்தம் பறிக்கும் வெண்டைக்காய்
நீண்ட சுரைக்காய் பூசணி!

முட்டைக் கோசு மல்லியும்
முளைக் கீரையோ டரைக்கீரையும்
குட்டை மரத்தில் முருங்கைக்காய்,
கொடியில் காய்க்கும் பீர்க்கங்காய்!

வீணாய்ப் போகும் தண்ணீரால்
விளையும் எல்லாக் கனிகாயும்!
வேணும் போது பறிக்கலாம்
விற்றும் காசு சேர்க்கலாம்!

வறுமை நீங்கும் வீட்டிலே!
வளம்தான் பெருகும் நாட்டிலே!
பொறுமை யாக உழைத்திட்டால்
பொழுது எல்லாம் பொன்னாகும்!

— கவிஞர். சின்னமணி.





கவியரங்கம்

நாட்டை உயர்த்து நண்பனே!

ஒன்றெனக் கூடுங்கள் காளைகளே! — நாம்
ஒற்றுமை பெற்றிடின் சோலைகளே! — இங்கு
வென்றிடும் சண்டைகள் மூண்டிடுமோ! — உடல்
வெட்டுகள், குத்துகள் தீண்டிடுமோ?
சோம்பலைப் போரிட்டுத் தின்றிடுங்கள் — சுவைச்
சோற்றுக்கு வாழ்வதைக் கொன்றிடுங்கள்; — இனித்
தேம்பிடும் வாழ்க்கையும் வாழுவையோ? — இளந்
தென்றலின் பண்பினை ஆளுவையோ?
இந்திய அன்னையின் காவியமே! — நீ
ஏந்திடும் நாடதில் பூமயமே; — இவ்
விந்திய நாடுனைப் பார்த்திருக்கும்; — உன்
வீரச்செயல்களில் ஆர்ப்பரிக்கும்.

— கோவி. மகுடேசுவரன், திருப்பூர் — 5.



குட்டிப் பாப்பா

குட்டிப் பாப்பா அழுததாம்,
கூடியாட மறுத்ததாம்.


பண்டம் உண்ண மறுத்ததாம்,
பாடம் படிக்க அழுததாம்.

குட்டிப் பொம்மை கொடுத்தாலும்,
கூடக் கொஞ்சம் அழுததாம்.

சிலுக்குச் சட்டை போட்டாலும்
சிரிக்க அதுவும் மறந்ததாம்.

விடிய விடிய அழுததாம்,
வீணாய்ப் பொழுது கழித்ததாம்.

— எஸ். ராமன், ஆறுமுகநேரி.



வருவாயே தருவாயே!

குட்டிக் குரங்கே குட்டிக் குரங்கே!
தாவித் தாவி வருவாயே — உன்
குழந்தை உள்ளம் அதை எனக்குத்
தாரை வார்த்துத் தருவாயே!

சின்ன மயிலே சின்ன மயிலே!
ஆடி ஆடி வருவாயே — உன்
வண்ண வண்ணச் சிறகை எனக்கு
ஓடி வந்து தருவாயே!

கரிய குயிலே கரிய குயிலே!
பாடிப் பாடி வருவாயே! — உன்
அரிய குரலின் இனிமை எனக்கு
அழகாய்க் கற்றுத் தருவாயே!

நல்ல நாயே நல்ல நாயே!
நன்றே வாலை அசைப்பாயே! — உன்
நன்றி மறவாத் தன்மையை எனக்கு
இன்றே கற்று இசைப்பாயே!

சிறிய எறும்பே சிறிய எறும்பே
சீராய் வரிசை வருவாயே — உன்
அரிய உழைப்பை நீ எனக்கு
அன்பாய்க் கற்றுத் தருவாயே!

— ஆர். வி. பதி, செங்கற்பட்டு.



மீதிக் கதை என்ன?

ஆசிரியரைத் இக்குமுக்காட வைப்பது என்று 'கோகுலம்' வாசகர்கள் முடிவு செய்து விட்டதாகத் தோன்றுகிறது! இல்லா விட்டால் ஒரு கதைப் போட்டியில் 867 பேர் கலந்து கொண்டிருப்பார்களா? வெளி நாட்டுவாசகர்களும்கூட ஏராளமானவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

முதல் பரிசு ரூ. 25/- பெறுபவர்:

ஜி. நவதிலக்,
மானாமதுரை.

இரண்டாவது பரிசு ரூ. 20/- பெறுவோர்:

1. ஜெ. எம். முகமது ரஃபி,
   மானாமதுரை.
2. கே. பி. ஜெயஸ்ரீ,
   பழங்கா நத்தம்.
3. க. பாஸ்கரன்,
   வத்தலாசி.

பாராட்டுப் பெறும் முடிவுகள்:

1. பி. கிருஷ்ணகோபால்,
   அகஸ்தீஸ்வரம்.
2. ப. நந்தபாலன்,
   சிங்கப்பூர்.
3. எம். காதர் உசேன்,
   திருச்சி.
4. ஜெ. வெஸ்லி ஜெபர்சன்,
   செங்கல்பட்டு.
5. சி. செழியன்,
   கொழும்பு, ஸ்ரீலங்கா.

இதுவரை சொல்லப்பட்ட கதை

விடைத்தாளில் 80 மார்க் வாங்கியுள்ள மாதவனுக்கு, கவனக்குறைவாக 100 என்று போட்டு, அவனுக்கு ராமானுஜம் நினைவுப் பரிசையும், 80 மார்க் வாங்கியுள்ள குமாருக்கு 2 வது பரிசையும் அறிவிக்கிறார் ஆசிரியர். இரவில் வீட்டுக்குப் போய் நிதானமாக விடைத்தாளைப் பார்த்த பிறகுதான்; கவனக்குறைவால் ஏற்பட்ட ஒரு தவறு தன்னைப் பரிசுக்குரியவனாக்கிவிட்டதை மாதவன் உணர்கிறான்.

முதல் பரிசு பெற்ற முடிவு

மறுநாள் ஆசிரியரைக் கண்ட மாதவன், விடைத்தாளில் தவறு ஏற்பட்டுள்ளதைத் தெரிவித்து விடைத்தாளைக் கொடுத்தான். ஆசிரியர் அதைப் பார்த்துவிட்டு, "குமார், உண்மையாகவே நீ பரிசுக்குரியவன்தான்" என்றார். "எப்படி ஐயா? நான் எண்பது தானே வாங்கியிருக்கிறேன்!" என்று கேட்டான் மாதவன்.

"நம்ம வகுப்பிலே படிக்கும் நல்ல மாணவன் ஒருவனுக்குச் சிறப்புப் பரிசு கொடுக்க விரும்புவதாகத் தலைமையாசிரியர் கூறினார். உன்னையும், குமாரையும் சோதிக்க முடிவு செய்தேன். உன் கணக்கு விடைத் தாளில் ஒன்றை எடுத்துக் குமாரின் விடைத் தாளுடன் வைத்தேன். உங்கள் இருவரில் யார் நியாயமாக நடப்பவர்கள் என்பதை அறிய முயன்றேன். நீ முந்திக் கொண்டாய். முதல் மதிப்பெண்ணும் உனக்குத்தான். சிறப்புப் பரிசும் உனக்குத்தான்," என்று மாதவனைத் திகைப்பிலாழ்த்தினார் ஆசிரியர்.

— ஜி. நவதிலக்.

2 வது பரிசு பெற்ற முடிவுகள்

1. மறுநாள் ஆசிரியரிடம் விஷயத்தைக் கூறி விடைத்தாளைக் கொடுத்தான் மாதவன். அவனைத் தோளில் தட்டிக் கொடுத்த ஆசிரியர், "நீ மனது வைத்திருந்தால் இந்த விஷயத்தை வெளியிடாது பரிசை வாங்கிச் சென்றிருக்கலாம். உன் நல்ல மனம் அப்படிச் செய்ய மறுத்துள்ளது.

முதல் பரிசைக் குமார் பெறட்டும். நீ இரண்டாவது பரிசைப் பெறுகிறாய். அதோடு இந்த ஆண்டின் சிறந்த மாணவனுக்கான சிறப்புப் பரிசையும் உனக்குத் தர வேண்டும் என்று பரிந்துரைக்கிறேன்," என்றார். மாதவனின் மனம் மகிழ்ச்சியால் துள்ளியது.

— ஜெ. எம். முகமது ரஃபி.

2. அடுத்த நாள் மாதவன் கணக்காசிரியரைத் தேடிச் சென்று செய்தியைக் கூறி, விடைத்தாளையும் கொடுத்தான். ஆசிரியர் அதைத் திருப்பித் திருப்பி இரண்டு முறை

° ஜி. நவதிலக்



° ஜெ. எம். முகமது ரஃபி



—போட்டி முடிவு

பார்த்தார். ''மாதவா, இரண்டு கணக்குக ளுக்கு நான் மதிப்பெண் போட மறந்து விட்டதை நீ கவனிக்கவே இல்லை. இதோ பார். இவற்றுக்கும் மதிப்பெண்ணைச் சேர்த்தால் நூற்றுக்கு நூறு வருகிறது. நீ முதல் ராங்க் மாணவன் என்பது மட்டும்தான் இது நாள் வரை தெரியும். இப்பொழுது நல்ல மாணவன் என்பதையும் காட்டிவிட்டாய். உன்னைப் பற்றிப் பெருமையடைகிறேன்.'' என்று தட்டிக் கொடுத்தார்.

— கே. பி. ஜெயஸ்ரீ:

3. நல்ல மனம் கொண்ட மாதவனால் அதற்குமேல் பொறுமையாக இருக்க முடியவில்லை. இரவு நெடு நேரம் ஆகிவிட்டதே என்பதையும் அவன் பொருட்படுத்தவில்லை. ஆசிரியர் வீட்டுக்கு விரைந்தான்.


என்னவோ ஏதோ என்று கண்ணாடியை மாட்டிக் கொண்டு பரபரப்பாக வெளியே வந்த ஆசிரியரிடம் மாதவன் எல்லாவற்றையும் சொல்லி விடைத்தாள்களையும் தந்தான். மேசையிலிருந்து ஒரு தாளை எடுத்து வந்த ஆசிரியர், ''மாதவா, இது உன்னுடைய விடைத்தாளின் மூன்றாவது நான்காவது பக்கங்கள். இவற்றுக்கும் மார்க் போட்டிருக்கிறேன். பார்த்தாயா? இருபது மார்க். இதையும் சேர்த்துத்தான் நான் மொத்த மார்க்கைப் போட்டேன். ஆனால் இது எப்படியோ என்னிடமே தங்கிவிட்டது. ஆனால் இதற்கு நன்றி சொல்ல வேண்டும். ஏன் தெரியுமா? இதுதானே நீ எப்படிப்பட்ட மாணவன் என்பதை அறிய உதவியாக இருந்தது? '' என்று சிரித்த ஆசிரியர், உள்ளே சென்று ஒரு பேனாவுடன் திரும்பி வந்தார். ''உன் நேர்மைக்கு இந்த ஆசிரியரின் எளிய பரிசு.'' என்று பேனாவைக் கொடுத்தார். மாதவன் மெய் மறந்து நின்றான்.

— சு. பாஸ்கரன்.

கே. பி. ஜெயஸ்ரீ




சு. பாஸ்கரன்



என்ன பேசிக் கொள்ளும்!

—நகைச்சுவைப் போட்டி



நகைச்சுவை எழுதும் தம்பி தங்கைகள் தங்கள் திறமையை வெளிப்படுத்தும்படி போட்டி ஏதாவது வைக்கலாகாதா என்று அடிக்கடி எழுதிக் கேட்கிறார்கள். இதோ அவர்களுக்கெல்லாம் ஓர் அரிய வாய்ப்பு.

படத்தை நன்றாகப் பாருங்கள். கிணற்றின் கைப்பிடிச் சுவரில் இரண்டு தவளைகள் எதிரும் புதிருமாக உட்கார்ந்திருக்கின்றன.

இவை இரண்டும் பேசிக் கொள்ள வேண்டும். அது மற்றவர்களுக்குச் சிரிப்பை வரவழைக்கக்கூடிய நகைச்சுவையாக இருக்க வேண்டும் சிறந்தவைகளுக்குக் கண்டிப்பாகப் பரிசு உண்டு. பரிசு பெற்றோர் புகைப்படம் கோகுலத்தில் வெளியாகும். நாங்கள் எழுதிக் கேட்காதவரை யாரும் புகைப் படத்தை அனுப்ப வேண்டாம். முடிவு தேதி 15.8.90. கூப்பனில்லாதவற்றை ஏற்பதற்கில்லை. முகவரி: ஆசிரியர் கோகுலம், ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 32.

கோகுலம் நகைச்சுவைப் போட்டி

பெயர் : ....

முகவரி : ....

....

....

பின் கோடு ....

பெரியோரைப் பார்த்துப் புரிந்து கொண்டோம்!

பெரியவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சிறுவர்கள் நடை பழகுவது இயல்பு. அவர்களுடைய நல்ல, ஆக்க பூர்வமான உதாரணங்களைப் பின்பற்றி ஒவ்வொரு சிறுவரும் வாழ்க்கையை அமைத்துக் கொள்வது நடைமுறை. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில், அவர்களைப் பார்த்துக் கற்றுக் கொண்ட நன்னடத்தை என்ன? இங்கே, சில சிறுவர்கள் தங்கள் அனுபவங்களைச் சொல்கிறார்கள்:

ஆர். லதா: ஏதாவது பேப்பரைக் கத்தரிக்கோலால் வெட்டி விதவிதமான வடிவங்களைச் செய்யறது என் வழக்கம். வேண்டாத துண்டு பேப்பர் எல்லாம் அப்படியே ஹாலில் சிதறி இருக்கும். சாயங்காலம் அப்பா ஆபீஸிலேருந்து வந்த போது, இதைப் பார்த்து முகம் சுளிப்பார். ஆனாலும் எம் மேல கோபப்பட்டுத் திட்ட மாட்டார். "என்னம்மா, இப்படி குப்பையும் கூளமுமா வெச்சிருக்கே! நம்ம வீட்லதான் பிளாஸ்டிக் குப்பைக் கூடை இருக்குதில்லே, அதிலே போடக் கூடாதா"ன்னு கேட்பார்.



ஆர். லதா

"போங்கப்பா, போர்,"ன்னு நான் பதில் சொல்வேன். வேலையெல்லாம் முடிஞ்சப்புறம் எடுத்துப் போட்டுடலாம்னுதான் நினைப்பேன். ஆனா, அதுக்குள்ள என் ஃப்ரெண்டு யாராவது வர, நான் அவ கூட பேசப் போயிடுவேன். அம்மா ஹாலைப் பெருக்கித் தள்ளிடுவாங்க. இது மட்டுமில்லே, சாக்லெட் பேப்பர், வேண்டாத பேப்பர் பை எதையாவது கசக்கி சுருட்டி அப்படியே எறிஞ்சுடுவேன். ரெண்டு மூணு தரம் அப்பா சொல்லிச் சொல்லிப் பார்த்தார். "யாராவது கெஸ்ட் வந்து பார்த்தா அசிங்கமா இருக்காதாம்மா? இப்படிப் போட்டு வெச்சிருக்கியே"ன்னு சொல்லிப் பார்த்தார். நான் என்னவோ அலட்சியமாகவே இருந்தேன். பேப்பரைக் கசக்கி மூலையில் எறிஞ்சா என்ன தப்பு? மூலையிலேதானே இருக்கு? எனக்குப் புரியலே.

ஒரு நாள் நான் சுருட்டிப் போட்டிருந்த பேப்பரையெல்லாம் என் அப்பாவே பொறுக்கி எடுத்துக் குப்பைக் கூடையில் போட்டார். எனக்கு என்னவோ மாதிரி ஆயிடுச்சு. வெட்கமாகக் கூட இருந்தது. நான் பேப்பர் கட்டிங் பண்ணின போது, பிளாஸ்டிக் குப்பைக் கூடையைக் கொண்டு வந்து என் பக்கத்திலே வைத்தார். "வேஸ்ட் பேப்பரை அப்பப்ப இந்தக் கூடைக்குள்ளே போட்டுடு. தரையிலேயே பரத்திகிட்டிருக்காதே. உனக்குத் தேவையான சின்ன

ஒன்ன கட்டிங் உனக்கே கிடைக்காம நீயே தேட வேண்டியிருக்கும்.''னு சொன்னார்.

அதுதான் எவ்வளவு நிஜம்! வேலை செய்து முடிச்சப்புறம் ஹாலும் எவ்வளவு சுத்தமா இருந்தது! ஒரு வாட்டி விருந்தாளிங்க வந்த போது நான் பேப்பர் கட்டிங் பண்றதைப் பார்த்து. ''அட, உன்னைச் சுத்திக் குப்பை சேர்த்துக்காம அழகா, க்ளீனா வேலை பண்றியே!''ன்னு பாராட்டுனாங்க.

எனக்கு ரொம்பவும் பெருமையா இருந்தது. அப்பாவுக்குக் கண்ணாலேயே அப்பவே 'தாங்க்ஸ்' சொன்னேன்.

ஆர். சுரேஷ்: எங்க சொந்தக்காரங்க வீட்டுக்குப் போயிருந்தோம். டிபன் சாப்பிட வரச் சொல்லியிருந்தாங்க.

அவங்க வீட்ல இருந்த பசங்களோட நான் அவங்க வீட்டுத் தோட்டத்திலே ஜாலியா விளையாடிட்டிருந்தேன். ''டிபன் ரெடி, வாங்க.''ன்னு அந்த வீட்டு மாமி கூப்பிட்டாங்க.

நாங்க உள்ளே போனோம். முன் அறையிலே எல்லாரும் தரையிலே உட்கார்ந்துக்கிட்டோம். சமையலறையிலிருந்து ஒவ்வொரு ஐட்டமா மாமி கொண்டு வந்தாங்க. மாமியின் பெண்ணும் கூடமாட உதவி செஞ்சா. ''சட்னி எடுத்துக்கிட்டு வா.'' அப்படின்னு மாமி அந்த பொண்ணுகிட்டே சொன்னாங்க.

அவளும் உள்ளே ஓடிப் போய்க் கிண்ணத்தை எடுத்துக்கிட்டு வந்தா. கண்ணாடிக் கிண்ணம் அது. கை வழுக்கிட்டுது போலிருக்கு: கீழே விழுந்து களீர்னு உடைஞ்சு போய்த் தரையெல்லாம் சட்னி சிந்திடுச்சு. ''முட்டாளே''ன்னு அவளோட அம்மாவும் அப்பாவும் அவளைத் திட்டினாங்க.

நான் கூட தமாஷ்னு சிரிச்சுட்டேன். ஆனா, என் அம்மா கொஞ்சம் கூடப் பதட்டப்படாம எழுந்து போய், உடைஞ்ச சில்லுகளைப் பொறுக்கி எடுத்தாங்க. அந்தப் பெண்ணைப் பார்த்து, ''உன் கிளாஸ்ல நீ எத்தனாவது ராங்க்? உங்க மிஸ் பேரென்ன?''னெல்லாம் கேட்டாங்க. ஏற்கெனவே பழைய வீடாக இருந்ததால பின்பக்கம் போய்த் துணி எடுத்துக்கிட்டு வந்து தரையைத் துடைச்சாங்க.

''நீங்க விடுங்க. அவளே துடைப்பாள்''னு அந்த மாமி சொல்லியும் அம்மா கேட்கலே.

அம்மா நடந்துகிட்ட முறையினாலே அந்தப் பெண்ணுக்குத்தான் எவ்வளவு சந்தோஷம்! அவளோட அப்பா அம்மா கூட அவளைத் திட்டினதுக்காக உடனே வருத்தப்பட்டது அவங்க மூஞ்சியிலேயே தெரிஞ்சுது. அன்றைய விருந்து ரொம்பத் தமாஷாவும் கலகலப்பாகவும் இருந்துச்சு. என் அம்மா அந்த உதவியைப் பண்ணலேன்னா அந்தப் பெண் மனசு அன்னிக்குப் பூரா வேதனைப்பட்டிருக்கும்.

நானும் முட்டாள் மாதிரி சிரிச்சேனே, அவளைக் கேலி பண்ணிட்டேனேன்னு நான் வருத்தப்பட்டேன். அன்னியிலிருந்து இந்த மாதிரி தவறுதலா ஏதேனும் நடந்தா அவங்க மனசை நோகப் பண்றதில்லேன்னு தீர்மானிச்சேன். அம்மாதான் இதுக்குக் காரணம்.

ஆர். லாவண்யா: என் மாமா கூட பீச்சுக்குப் போயிருந்தேன். மண்ணிலே நடந்து போய்க்கிட்டிருந்த போது என் செருப்பு மண்ணைத் தூவி விட, அது அங்கே உட்கார்ந்திருந்தவங்க மேலே விழுந்திடுச்சு. ஒரு அம்மா, அப்பா ரெண்டு பசங்க. தவிர ஒரு கைக் குழந்தை அந்த அம்மா மடியிலே.

மணல் தூசி மேலே பட்டதும் உட்கார்ந்திருந்த அப்பா விருட்டுன்னு எழுந்தார். நேரே எங்கிட்ட வந்து, ''பீச்ல எப்படி நடக்கறதுன்னு கூடத் தெரியலையே உனக்கு! இப்படி மண்ணைத் தூவிட்டுப் போறியே''ன்னு கோவிச்சுக்கிட்டார்.

''சாரி அங்கிள்,''னு நான் மன்னிப்புக் கேட்டுகிட்டும் பிரயோசனம் இல்லே.

என் மாமாவும், ''இவள் பண்ணினது தப்புத்தான், மன்னிச்சுக்கோங்க,''ன்னு



ஆர். சுரேஷ்



• ஆர். லாவண்யா

எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்.

ஆனால் அந்த ஆள் விடறதா இல்லை. ஒரேயடியாய்க் கத்தினார். என் மாமாவுக்கும் கோவம் வந்திருச்சு. அவரும் வாயால சண்டை போட்டார். உடனே பக்கத்திலிருந்தவங்க ஓடி வந்து சண்டையைத் தடுத்து விலக்கி விட்டாங்க.

அப்புறம் மாமா, "லாவண்யா, செருப்பைக் கையிலே எடுத்துக்கோம்மா. மணல் தாங்காது"ன்னு சொன்னார். நாங்க கொஞ்ச நேரம் கடல் அலையிலே நின்றிருந்து விட்டு பஸ்ஸாக்குத் திரும்பினோம். பஸ் ஸ்டாப்பிலே ஒரே கூட்டம். பஸ் வந்ததும் மாமா பாய்ந்து உள்ளே ஏறிப் போனார். நானும் தட்டுத்தடுமாறி உள்ளே போன போது, ஒரு சீட்டிலே உட்கார்ந்திருந்த மாமா பக்கத்து சீட்டை ரிசர்வ் செய்தா மாதிரி கையை வெச்சுக்கிட்டிருந்தார். நான் பக்கத்திலே போய் உட்கார்ந்திட்டேன். பஸ்ஸாக்குள்ளே 'ஜே, ஜே'ன்னு கூட்டம் ரொம்பிடுச்சு.

திடீர்னு மாமா யாரையோ பார்த்து, "இங்கே வாங்க,"ன்னு கூப்பிட்டார். என்கிட்டத் திரும்பி, "தள்ளி உட்கார்ந்துக்கம்மா,"ன்னு சொன்னார்.

யாருக்காகத் தான் எழுந்து இடம் கொடுக்கிறார்னு பார்த்தேன்... பீச்ல சண்டை போட்டாரே, அந்த மாமா! அந்த மாமி கைக் குழந்தையை வெச்சுக்கிட்டுத் தடுமாறிக்கிட்டிருந்தாங்க. என் மாமா கூப்பிட்டதும் அவர் கிட்ட வந்தார். அவங்களைத் தன் இடத்திலே உட்காரச் சொன்னார். என் பக்கத்திலே ரெண்டு பசங்க, அவங்களுக்குப் பக்கத்திலே அவங்க அம்மா கைக் குழந்தையோட உட்கார்ந்தாங்க.

சண்டைக்கார மாமா, "ரொம்ப தாங்க்ஸ் சார்,'' அப்படின்னார்.

அதுக்கப்புறம் அவங்க ரெண்டு பேரும் நின்னபடியே பேசிக்கிட்டு வந்தாங்க. அந்த மாமி, என்கிட்ட, "எந்த ஸ்கூல், எந்த கிளாஸ், எங்கே வீடு?''ன்னு கேட்டு ரொம்ப அன்பா விசாரிச்சாங்க.

சண்டையை மறந்து உடனே உதவி செய்யறதால எல்லாருக்கும் எவ்வளவு சந்தோஷம்! என் மாமாகிட்டேயிருந்து அன்னிக்கு நான் கத்துக்கிட்டது இது.

ஆர். சுதா: எங்க விக்கி ரொம்ப இன்டலிஜன்ட். அதை நாங்க ரொம்பப் பாசமா வளர்த்து வர்றோம். யாரேனும் புதிய மனிதர் வந்தால் 'வள், வள்' என்று குரைத்து ஊரையே கூட்டி விடும். அழகான பாமரேனியன் நாய்.

விக்கி கூட விளையாடறது எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதுகிட்ட எனக்குப் பிடிக்காத சமாசாரம், என் ஃப்ரெண்ட்ஸ் வரும் போது அது ரொம்பக் கோவமா குரைக்கறது தான். "ஏய் விக்கி, சும்மா இரு. சூ.. அடிப்பேன்.. கட்டிப் போடுவேன்,"னு சொல்லி மிரட்டுவேன்.

அது சும்மா பயப்படற மாதிரி காமிச்சுக்கிட்டாலும் எனக்கு ரொம்பக் கோவம்தான். ஏன்னா, என் ஃப்ரெண்ட்ஸெல்லாம், "நான் உன் வீட்டுக்கு வர மாட்டேம்ப்பா. உங்க நாய் பாயுது,"ன்னு சொல்வாங்க.

ஒரு நாள் நாலஞ்சு ஃப்ரெண்ட்ஸ் வந்தாங்க. அப்போ என் அப்பாவும் வீட்ல இருந்தார். என்னோட வருத்தம் அவருக்குத் தெரியும். அவர் என்கிட்ட சொன்னார்: "இதோ பார் சுதா. நான் சொல்றபடி கேளு. விக்கியை நான் கட்டிப் போடப் போறதில்லே. நீ நேரா வாசலுக்குப் போய் உன் தோழிகளை அழைச்சுக்கிட்டு உள்ளே வா. விக்கி குரைச்சாலும் அதைத் திட்டறதுக்குப் பதிலா, அதுகிட்ட மறைமுகமா, 'இவங்

• ஆர். சுதா





•. ஆர். நாராயணன்

கள்ளாம்என் ஃப்ரெண்டு. எனக்கு வேண்டியவங்க''ன்னு அதுக்கு உணர்த்தனும். அப்பப் பாரு, அதனோட ரியாக்ஷனை.''

எனக்கு நம்பிக்கையில்லைதான். ஆனா, அவர் சொல்லிக் கொடுத்த மாதிரியே செஞ்சேன். அப்பா சொன்னது சரிதான். விக்கி குரைக்காம, வாலாட்டிக்கிட்டு எங்களைச் சுத்திச் சுத்தி வந்திச்சு. எனக்கு ஆச்சரியம்.

''இதுதான் நாய் மனோதத்துவம்,'' என்றார் அப்பா. ''அது மட்டுமில்லே சுதா, நீ விக்கியை மிரட்டி, கட்டுப்படுத்தினேன்னு வெச்சுக்கோ, நிஜம்மாவே திருடன் வந்தாலும் அது குரைக்காது. யார் வந்தாலும் குரைக்கக் கூடாதுன்னு நினைச்சுக்கும். அதுக்குப் பதிலா நீ உன் தோழிகளை, வேண்டியவங்களை மறைமுகமா அதுக்கு அறிமுகப்படுத்தி வெச்சா, அது தெரிஞ்சுக்கும், சரியா?''

ரொம்ப சரின்னு அப்புறம் நிறையச் சந்தர்ப்பங்கள்ல தெரிஞ்சுக்கிட்டேன்.

ஆர். நாராயணன்: காலையிலே எங்க வீட்டு வாசலுக்கு வந்தேன். கீழே அஞ்சு ரூபா நோட்டு ஒண்ணு மடிச்சா மாதிரி கிடந்தது. 'அட, காலங்கார்த்தால என்ன அதிர்ஷ்டம்!'னு நினைச்சுக்கிட்டேன்.

வாசல் வராந்தாவிலே என் அப்பா உட்கார்ந்து பேப்பர் படிச்சுக்கிட்டிருந்தார். அவர்கிட்ட ஓடிப் போய், ''அப்பா, நான் ரொம்ப லக்கி. இதப் பாருங்க, எனக்கு அஞ்சு ரூபா கெடச்சிருக்கு,'' அப்படின்னு சொன்னேன்.

அவர் உடனே, 'வெரிகுட்,' அப்படின்னு பாராட்டுவார்ன்னு நினைச்சேன். ஆனா அவரோ ஒண்ணுமே சொல்லாம, வாசல்ல அங்குமிங்கும் பார்த்தார். அப்புறம் என்னைப் பார்த்தார். ''முதல்ல, எந்த உழைப்பும் இல்லாம, சும்மா பணம் கிடைச்சதுக்காக நீ சந்தோஷப்படக் கூடாது. அதே சமயம் இந்தப் பணத்தைத் தவற விட்டவர் எவ்வளவு வேதனைப்படுவார்ன்னு யோசிச்சுப் பார். யாரேனும் பரிதவிப்போட தேடிக்கிட்டு வருவாங்க. விசாரிச்சு அவங்ககிட்ட கொடுத்திடு. அவங்க எவ்வளவு சந்தோஷப்படறாங்கபாரு. உனக்கும் ரொம்ப நிம்மதியா இருக்கும். இந்த அஞ்சு ரூபாயிலே நீ எதையாவது வாங்கிச் சந்தோஷமா சாப்பிடலாம் தான். ஆனா உன் மனசு உறுத்திக்கிட்டே இருக்கும்,'' அப்படின்னார்.

எனக்கும் அவர் சொன்னது சரியாகவே பட்டது. வாசல்ல போய் நின்னு பார்த்தேன். கொஞ்ச நேரத்திலே ஒரு பையன் அழுதுகிட்டே வந்தான். அவன் பார்வை ரோடெல்லாம் அலை பாய்ஞ்சது. அவன் கையிலே ஒரு பாத்திரம். ''என்ன தம்பி?''ன்னு விசாரிச்சேன்.

''எங்க அம்மா பால் வாங்கிட்டு வரச் சொல்லி அஞ்சு ரூபா கொடுத்தனுப்பிச்சாங்க. அது எங்கேயோ விழுந்திட்டது. எங்கம்மா திட்டுவாங்க, அடிப்பாங்க,''ன்னு சொல்லி அழுதான். எனக்குத் தெரிஞ்சிட்டுது. அந்த அஞ்சு ரூபாய் அவனோடதுதான். ''இதுவா பாரு''ன்னு என் கையிலிருந்த நோட்டை அவன்கிட்டே காமிச்சேன்.

''ஆமா. இதுதான். ஓரத்திலே இங்க் கறை கூட அப்படியே இருக்கே!''ன்னு சந்தோஷத்திலே குதிச்சான். ''அப்பாடா! எங்க அம்மாகிட்டேயிருந்து தப்பிச்சேன். ரொம்ப ரொம்பத் தாங்க்ஸ்''ன்னு சொல்லிக்கிட்டே பால்பூத் பக்கமா ஓடினான்.

என் தோளை யாரோ தட்டினாங்க. அப்பா! ''அவனுக்கு எவ்வளவு சந்தோஷம் பார்த்தியா?''ன்னு கேட்டார்.

''ஆமாம்ப்பா எனக்கும்தான்,''னு நான் சொன்னேன்.

பேட்டி, படங்கள்: **பிரபுசங்கர்.**


''வாடா! ஆளே மாறிட்டியே! பழைய ராமு மாதிரியே இல்லையே? ''

''நான் ராமு இல்லீங்க, சோமு!''

''அடபாவி! ஆள்தான் மாறிட்டியேன்னு பார்த்தா பேருமா மாறிப் போச்சு? ''

— வி. சுந்தரராமன், குத்தாலம்.





கேட்கட்டுமா டாக்டர்?




இந்த இதழுக்கு, 'கேளுங்கள் சொல்லப்படும்!' பகுதி இதுதான். டாக்டர் கு. கணேசனுக்குச் சின்ன அண்ணன் விட்டுக் கொடுத்திருக்கிறார். காரணம், மருத்துவம் சம்பந்தப்பட்ட வினாக்களுக்கு ஒரு டாக்டரே பதில் சொல்வது பொருத்தமாய் இருக்கும் என்று கருதித்தான்.

— ஆசிரியர்.

* சிவமணி கண்டன், கருங்குழி.

கேள்வி: ஒருவருக்குக் காக்கை வலிப்பு எப்படி ஏற்படுகிறது? வலிப்பு வந்தவருக்கு இரும்புப் பொருளைக் கையில் கொடுப்பதன் நோக்கம் என்ன?



பதில்: காக்கை வலிப்பு என்பது மூளை சம்பந்தப்பட்ட ஒரு வியாதி. மருத்துவத் துறையில் 'எபிலப்சி' (Epilepsy) என்று இதற்குப் பெயர். நம் மூளையில் உள்ள நரம்பு செல்களின் செயல்பாட்டில் தற்காலிகமாக இடையூறு ஏற்படும்போது, நரம்பு செல்களில் அதிர்வுகள் உண்டாகின்றன. அந்த அதிர்வுகள் மூளையிலிருந்து வெளிப்படும் நரம்புகள் மூலம் கடத்தப்படும்போது தலை, கை, கால் போன்றவற்றிலும் அதிர்வுகள் உண்டாகின்றன. இதனால்தான் வலிப்பு வந்தவருக்குக் கைகளும் கால்களும் வெட்டி வெட்டி இழுக்கின்றன. இந்தக் 'கை கால் இழுப்பு' காலப்போக்கில் 'காக்கை வலிப்பு' என மருவிவிட்டது என நினைக்கிறேன். வலிப்பு வந்தவருக்கு இரும்புப் பொருளைக் கையில் கொடுத்தால் வலிப்பு நின்றுவிடும் என்பது தவறான எண்ணம். வலிப்பு நிற்பதற்கும் இரும்புப் பொருளுக்கும் எந்த விதத் தொடர்பும் கிடையாது. காக்கை உட்காரப் பனம்பழம் விழுகிற கதைதான் இது! எப்படித் தெரியுமா, தம்பி? ஒருவருக்கு வலிப்பு ஆரம்பித்ததும் அடுத்த மூன்று நிமிடங்களுக்குள் தானாகவே நின்றுவிடும். நாம் வலிப்பு வந்தவரைக் கண்டதும் இரும்புப் பொருளைத் தேடி எடுத்து அவர் கையில் கொடுப்பதற்கு எப்படியும் சில நிமிடங்கள் ஆகும் அல்லவா? தானாகவே வலிப்பு நிற்கக் கூடிய சமயத்தில் இரும்புப் பொருளைக் கொடுத்துவிட்டு, இரும்பு கொடுத்ததால் தான் வலிப்பு நின்றது என்று சொல்வது தவறு! இரும்பினால் வலிப்பு நின்றது என்பதற்கு விஞ்ஞான பூர்வமான ஆதாரம் எதுவும் இல்லை!

* பா. கணேஷ், தக்கோலம்.

கேள்வி: மனிதர்களில் சிலருக்கு வலப் பக்கம் இதயம் அமைந்திருப்பதாகச் சொல்கிறார்களே, அது உண்மைதானா?

பதில்: உண்மைதான், தம்பி! மிகவும் அபூர்வமாகச் சிலருக்கு வலப்பக்க மார்பில் இதயம் அமைந்திருக்கும். இதற்கு 'டெக்ஸ்ட்ரோ கார்டியா' (Dextro Cardia) என்று பெயர். தாயின் வயிற்றில் குழந்தை உண்டாகும் போது, அதன் வளர்ச்சியில் சில இடையூறுகள் நேர்வதால் இடப்

டாக்டர் கு. கணேசன்



பக்கம் வர வேண்டிய இதயம் வலப்பக்கம் மாறிவிடுகிறது. இதனால் தவறொன்றும் இல்லை; இதயத்தின் செயல்பாட்டிலும் மாறுதல் இருப்பதில்லை!

* **வேத. வரதகணேஷ், செருவாமணி.**


கேள்வி: இரத்தப் பெருக்கின் போது இரத்தம் உறைந்து இரத்தத்தைக் கட்டுப்படுத்துகின்றது. இரத்தம் உறைவது எவ்வாறு?



பதில்: பல மரங்கள் சேர்ந்தால் தோப்பாகும்; பல கரங்கள் தட்டினால் ஒலி உண்டாகும். இல்லையா? அது மாதிரி பல பொருட்கள் ஒன்று சேர்ந்து செயல்பட்டால்தான் இரத்த உறைவு (**Blood Clotting**) உண்டாகும். எப்படி என்பதை உனக்குச் சொல்கிறேன். உடம்பில் அடிபட்டு இரத்தம் வெளிப்பட்டதும் இரத்த நாளங்கள் முதலில் சுருங்குகின்றன. இரத்தத்தில் உள்ள தட்டணுக்கள் (**Platelets**) அடிபட்ட இடத்திற்கு அதிகமாக வந்து சேர்கின்றன. அடுத்த கட்டமாக இரத்தப் புரதமான ஃபைப்ரினோஜன் ஃபைப்ரினாக மாறி இரத்த உறை கட்டியை உண்டாக்குகிறது. இதில் கால்சியம், வைட்டமின் -K, திராம்பின் என்று மொத்தம் பதின்மூன்று பொருள்கள் பங்கு கொள்கின்றன. தம்பி, இரத்தம் உறைநிலை இறைவன் நமக்களித்த வரம் என்றுதான் சொல்ல வேண்டும்! இரத்தம் மட்டும் உறையாமல் அடிபட்ட இடத்திலிருந்து வெளியேறிக் கொண்டேயிருந்தால் அடிபட்டவரின் கதி என்னவாகும்? யோசித்துப் பார்! அப்போதுதான் இரத்த உறைவின் அருமை புரியும்.

* **ச. சையது முஸ்தபா, திருச்சி — 17.**

? நாய்க்கடிக்கு மட்டும் தொப்புளைச் சுற்றி ஊசி போடுவது ஏன்?



பதில்: நாய்க்கடிக்குப் போடக் கூடிய தடுப்பு ஊசி மருந்தின் அளவு மற்றத் தடுப்பு ஊசி மருந்தின் அளவைக் காட்டிலும் அதிகம். அது மட்டுமல்லாமல், அந்த மருந்தைத் தோலுக்கும் தசைக்கும் இடைப்பட்ட இடத்தில்தான் செலுத்த வேண்டும். அப்போதுதான் அது இரத்தத்தில் கலந்து வேலை செய்யும். பரந்த இடமான வயிறுதான் அதற்கு வசதி!

* **பி. கோபாலகிருஷ்ணன், சிந்தாமணி.**

கேள்வி: நம் உடம்பில் உண்டாகும் உடற்காயங்கள் குணமாகி வரும்போது அரிப்பு தோன்றுவது எதனால்?



பதில்: உன் பழைய பேனா தொலைந்து விட்டது என்று வைத்துக் கொள். அப்பா உனக்குப் புதுப் பேனா வாங்கித் தருகிறார். அப்போது உனக்கு எப்படியிருக்கும்?

மகிழ்ச்சி தாண்டவமாடுமல்லவா? அது மாதிரிதான் உடம்பில் காயங்கள் ஆறும் போது பழைய செல்கள் மடிந்து மறைகின்றன. புது செல்கள் வளர்கின்றன. அவற்றைத் தோல் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது. தோலின் அந்த மகிழ்ச்சிதான் நமக்கு 'அரிப்பு'!

* பெ. அருள், கடலூர் — 1.

கேள்வி: இரத்த ஓட்டம் இல்லாமல் கை, கால்கள் மரத்துப் போனதும் அந்த இடங்களில் சிறிது நேரத்தில் நிறைய ஊசிகள் குத்துவது போல் வலிக்கிறதே அது ஏன்?



பதில்: என்ன தம்பி நீ! கேள்வியும் கேட்டு விட்டுப் பதிலும் சொல்லி விட்டாய். இனி எனக்கென்ன வேலை? நான் நகர்ந்து கொள்ளட்டுமா? வேண்டாமா? உனக்காக இல்லாவிட்டாலும் இக்கேள்வியைப் படிக்கும் மற்றவர்களுக்காவது பதில் சொல்ல வேண்டுமா? சொல்கிறேன். ஒரே இடத்தில் சேர்ந்தாற் போல் பல மணி நேரங்கள் உட்கார்ந்திருந்தால் கால்கள் மரத்துப் போகும். அதே மாதிரி தலைக்கடியில் கைகளை வைத்து அதிக நேரம் படுத்திருந்தால் காலையில் எழுந்திருக்கும்போது கைகள் மரத்துப் போகும். இதற்குக் காரணம் உடல் அழுத்தம் காரணமாகக் கைகளுக்கோ, அல்லது கால்களுக்கோ தற்காலிகமாக இரத்த ஓட்டம் நின்று விடுவதுதான்! மரத்துப் போவதால் உண்டாகும் வலியைப் பொறுக்க முடியாமல் கைகளையும் கால்களையும் உதறுகிறோமல்லவா? அப்போது மீண்டும் இரத்த ஓட்டம் உண்டாகும். அதனால் வலியும், மரத்துப் போதலும் மறையும்!

* மெ. அருள், பெருங்களத்தூர்.

கேள்வி: எனது கைகளில் அதிகப் பருக்கள் வருகின்றன. அவற்றைப் போக்குவதற்கான வழிமுறைகளைச் சொல்லுங்கள்.

பதில்: தம்பி, பருக்கள் முகத்தில்தான் வரும்; கைகளில் வருவதில்லை. பருக்களைப் போலவே கைகளில் வரக் கூடியது



பாலுண்ணிகள் (warts). இவை வைரஸ் கிருமிகளால் வரக் கூடியவை. பாலுண்ணி தானாகவே உதிர்ந்துவிடக் கூடியவை. பாலுண்ணி வந்த இடங்களைச் சுத்தமாக வைத்திருந்தாலே காலப் போக்கில் அவை கரைந்துவிடும். கரையாத பட்சத்தில் பாலுண்ணியின் மேல் ஒரு சொட்டு 'போடோபிலிக் அமில' (Phodophilic Acid) த்தைத் தினமும் இரவில் வைத்து வந்தால் சில வாரங்களில் பாலுண்ணி கரைந்து மறைந்துவிடும்!

* இல. மணிமூர்த்தி, கல்லிடைக்குறிச்சி.

கேள்வி: முடியையும் நகத்தையும் வெட்டும் போது வலிப்பதில்லையே, ஏன்?



பதில்: முடியிலும் நகத்திலும் வலி உணர்வினை நமக்குத் தெரிவிக்கக் கூடிய நரம்புகள் இல்லை. அதனால் அவற்றை வெட்டும் போது வலி ஏற்படுவதில்லை.

கல்வி வளர்ச்சிக்குக் கராத்தே உதவுமா?

ஐ. ஐ. டி.யின் லேடிஸ் கிளப் வளாகம் — ஒரு ஞாயிற்றுக் கிழமை பளிச்சென்று வெள்ளைச் சீருடை அணிந்த பல மாணவ மாணவியர் 'கராத்தே' பயின்று கொண்டிருந்த காட்சி அவ்வழியே செல்வோரைச் சற்று நின்று ஆச்சரியப்பட வைத்ததில் வியப்பில்லை!

பயிற்சி ஆசிரியர் 'ஷியான் ஷாஜ கான் (ஷியான் என்பது தகுதி வாய்ந்த கராத்தே வீரனை மரியாதையுடன் அழைக்கும் ஜப்பானியச் சொல்) அன்புடன் வரவேற்றார். நான் அடுக்கிய பல கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் மிகப் பொறுமையுடனும், அன்புடனும் தக்க விடையளித்துத் தெளிவுபடுத்தினார்.

சுமார் 1000க்கும் மேலான பள்ளிச் சிறுவர், சிறுமிகளுக்குச் சென்னை, வட ஆற்காடு, தென் ஆற்காடு மற்றும் கோவை ஆகிய ஊர்களில் கடந்த 17 ஆண்டுகளாக ஷாஜகான் கராத்தே கற்றுக் கொடுத்து வருகிறார். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும், மனத்தை ஒரு நிலைப்படுத்திக் கொள்ளவும் தேக ஆரோக்கியத்தைக் காத்துக் கொள்ளவும் தற்காப்பு முறைகளை அறிந்து கொள்ளவும் பள்ளிச் சிறுவர், சிறுமியர் கராத்தே கற்றுக் கொள்வது அவசியம் என்கிறார் திரு. ஷியான்.

ஜப்பானுக்கு அருகே உள்ள ஓகினோவா என்ற இடத்தில் ஒரு தற்காப்புக் கலையாகத் தோன்றிய 'கராத்தே', (ஆயுதங்கள் ஏதுமின்றி கை, கால்களின் சாமர்த்தியமான அசைவுகளால் எதிரியைத் தாக்கும் கலை) பின்னர் ஜப்பானில் விஞ்ஞான ரீதியாக வளர்ச்சி அடைந்து, 1953 ஆம் ஆண்டிலிருந்துதான் உலக நாடுகள் பலவற்றுக்கும் பரவிப் பிரபலமானது. கராத்தே கற்கத் தொடங்க ஏற்ற வயது ஆறு அல்லது ஏழு தான். இவரும் தன் ஏழாவது வயதிலிருந்தே கராத்தே கற்க ஆரம்பித்ததாகப் பெருமையுடன் கூறினார்.

கராத்தேயின் அடிப்படை நோக்கங்கள், 'தன்னம்பிக்கை வளர்ச்சி' — (எதையும் தன்னால் உடலாலும், மனத்தாலும் தெளிவாகச் சாதிக்க முடியும் என்ற நிலை) 'ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொள்ளும் தன்மை' — (கூட்டுப் பயிற்சியினால் வருவது) 'மனதை ஒருநிலைப்படுத்துதல்' என்கிறார் இவர்.) கியாங் என்று பயிற்சியின் போது ஒரே மூச்சில் எழுப்பப்படும் ஒலியானது நரம்பு மண்டலங்களில் சமநிலை அதிர்வுகளை ஏற்படுத்துகிறது. பயிற்சி ஆரம்பிக்கும் போதும் முடியும் போதும் செய்யப்படுகின்ற 'சென்' முறை தியானம் (Zen Meditation) மனக் கட்டுப்பாட்டை அதிகரிக்கச் செய்கிறது. மாணவர்களுக்குப் பாடங்களில் முதலாவதாக வரவும் கராத்தே பயிற்சி உதவுகிறது. உடல் ஆரோக்கியத்தைச் சீராக்கி எதிர்பாராமல் ஏற்படக்கூடிய ஆபத்துக்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் கலையையும் எதையும் நிதானத்துடனும், கவனத்துடனும் அணுகும் பக்குவத்தையும் கூடக் கராத்தே ஏற்படுத்துகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக் கராத்தே பயிற்சிக்கு வர ஆரம்பித்தபின், பல மாணவர்கள் முன்பை விடப் படிப்பில் அதிக மதிப்பெண்களைப் பெற்றுள்ளதைக் குறிப்பிடும் திரு. ஷியான், கல்விக்குக் கராத்தே தடையல்ல எனத் தெளிவுபடுத்தினார்.


கை கால்கள் ஊனமான குழந்தைகள் கூடக் கராத்தே பயிலலாம். அது அவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கும். அமெரிக்காவில் சப்பாணியாக இருந்த ஒரு சிறுவன் கராத்தே முயன்று கற்று இப்போது சிறந்த பயிற்சியாளராகவும் உயர்ந்துள்ளார் என்ற சமீபத்திய புதிய செய்தியையும் தெரிவித்தார் திரு. ஷியான். ''ஏதாவது ஒரு காரணத்தினால் தொடர்ந்து கூட்டுப் பயிற்சிக்கு வர முடியாமல் போனாலும் மற்றத் தேகப் பயிற்சிகள் போல் கராத்தேயையும் தனியாகவே வீட்டில் இருந்தபடி தொடர்ந்து செய்யலாம். இப்படிச் செய்யும்படி மாணவர்களை வற்புறுத்துகிறோம்.'' என்றார்.

''இவ்வளவு சிறப்புக்களையும் கொண்ட கராத்தே கலையை எல்லாப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஒரு கட்டாயப் பாடமாகக் கொண்டு சொல்லித் தர அரசு அளவில் ஏற்பாடுகள் செய்யப்படுமானால் நல்லது. சொல்லப் போனால் அதுவே என் குறிக்கோளும் கூட'' என்று விளக்கினார் திரு. ஷியான். இவர் ஜப்பானில் ஐந்தாவது 'டான்' பிளாக் பெல்ட் பெற்றவர்; அகில இந்திய கராத்தே அஸோசியேஷன் பொதுச் செயலாளர்; பல போட்டிகளின் நடுவர். இவருக்கு உலகெங்கிலும் பல கராத்தே போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றி பெற்ற அனுபவமும் ஜப்பானிலேயே நேரடிப் பயிற்சி பெற்ற பாக்கியமும் உண்டு. பார்க்கப் பரமசாதுவாய் இருக்கிறார். நிறை குடம் தளும்பாது இல்லையா?



பேட்டி, வண்ணப்படம்:
ராஜா பொன்சிங்.

அட்டையில்: 'ஷியான்' ஷாஜஹான், மாணவர்: சஜ்ஜாத்.



எல்லாம் வல்ல சூரியன்



ஏப்ரல், மே மாதங்களில் அக்கினி நட்சத்திரத்தின் போது, 'சூரியன் என்னமாய் எரிக்கிறான்! வெய்யில் தாங்க முடியவில்லையே!' என்று அலுத்துக் கொள்கிறோமே, இது மிகவும் தவறான முடிவு.

ஏனெனில் சூரியன் ஆண்டு முழுவதும் ஒரே மாதிரிதான் வெப்பத்தை அள்ளி வீசிக் கொண்டிருக்கிறான். பூமி தன் சுழற்சியினால் இந்த மாற்றங்களைத் தேடிக் கொள்கிறதே தவிர, சூரியனை நாம் நிந்திப்பதற்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை.

உலகுக்கு ஒளியும் வெப்பமும் தந்து உலகத்தில் உள்ள தாவரங்களும், உயிரினங்களும் உயிர் வாழக் காரணமாக இருக்கும் சூரியனும் கூட ஒரு நட்சத்திரம்தான். பல கோடி மைல்களுக்கப்பால் கண் சிமிட்டும் நட்சத்திரங்களை இரவில் காண்கிறோம். இவற்றைக் காட்டிலும் பூமிக்கு அருகில் நாம் காணக்கூடிய தொலைவில் சூரியன் இருப்பதால், அதன் ஒளியும், வெப்பமும் பூமிக்குக் கிடைக்கின்றன.

சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரம் 14 கோடியே 80 இலட்சம் கி. மீ. ஒளியின் வேகம் வினாடிக்கு 186,400 மைல் என்ற அடிப்படையில் சூரியனின் ஒளி பூமியை வந்தடைய (8.25 நிமிடங்கள்) 495 வினாடிகளாகின்றன. இப்பொழுது நாம் அனுபவிக்கும் சூரிய ஒளி, 8.25 நிமிடங்களுக்கு முன்பு சூரியனிலிருந்து புறப்பட்டதாகும்.

சூரியனின் வயது 500 முதல் 600 கோடி ஆண்டுகள். இது முற்றிலுமாக ஏற்கப்படவில்லை. காரணம், சூரியன் தோன்றிய விதம் பற்றிய மாறுபட்ட கருத்துக்களே.

பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு வானவெளியில் நிறைந்து கிடந்த ஹைட்ரஜன் அணுத் துகள்களின் சேர்க்கையால் உருவான ஹைட்ரஜன் அணு உருண்டை, பல்கிப் பெருகித் தன் ஆற்றலையும் ஈர்ப்புச் சக்தியையும் பல கோடி மடங்காகப் பெருக்கிக் கொண்டதன் விளைவே ஒளிக்கோளமான சூரியன் என்கிறார்கள். இதை யாரும் மறுக்கவில்லை. உருவான ஆண்டுதான் பிரச்னையாக்கப்படுகிறது.

எனவே, சூரியன் நம் கண்களுக்குத் தெரிவது போல் திடப் பொருள் அல்ல. கொதிக்கின்ற பல்வேறு வாயுக்களால் ஆன ஒரு கோளம். இந்தச் சூரிய வாயுக் கோளத்திற்கு அடர்த்தியும் திண்மையும் அதிகம்.

சேரநம்பி


எவ்வளவோ கோடி ஆண்டுகளாக இதனுடன் வந்து சேர்ந்து கொண்ட ஹைட்ரஜன் அணுத் துகள்கள் இதனோடு கலந்து வெப்பத்தைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றன. இதனால் வெப்பத்தையும், சக்தியையும் வெளியிடும் ஆற்றல் இயற்கையாகவே சூரியன் என்ற வாயுக் கோளத்திடம் அமைந்துள்ளது.


சூரியன் ஒரு வினாடிக்கு 800,000,000 டன் வெப்பத்தை வெளியிடுகிறது. இதன்படி சூரியன் இன்னும் 5000 கோடி ஆண்டுகளே இருக்கும் என்கிறார்கள். அதற்குப் பிறகு என்னவாகும்? அதன் விளைவு எப்படி இருக்கும்?

மின்சாரத்தை நிறுத்தியதும் விளக்கு அணைவது போல் இது இருக்காது. சூரியனின் மையத்தில் குவிந்து தங்கியுள்ள ஹைட்ரஜன், ஹீலியமாக மாறிப் போகும். இதனால் சூரியனின் பரப்பளவு அதிகமாகும். இதன் காரணமாக மற்ற ஒன்பது கோள்களும் இதனுள் அடங்கி உருத் தெரியாமல் போய் விடும்! இந்த நிலையில் இந்தக் கிரகங்களே சூரியனுக்கு எரிபொருளாகிச் சில காலம் ஒளிரும்; இறுகிய நிலை அடையும். இப்படி மேலும் ஓர் 50 கோடி ஆண்டுகள் இருந்து விட்டு மிஞ்சிய தன் ஒளியையும் வெப்பத்தையும் இழந்து, கறுத்து இறுகி விடும். மற்ற நட்சத்திரங்களுக்கும் கூட இதே கதிதான் இறுதியில் ஏற்படும் என்கிறார்கள்.

சுயமாக ஒளிரும் சூரிய வாயுக் கோளத்தை மற்ற ஒன்பது கோள்களையும் ஆட்டிப் படைக்கும் சக்ரவர்த்தி எனலாம். சூரியனின் ஈர்ப்புச் சக்தி, பூமியில் உள்ளதைப் போல் 27 மடங்கு அதிகம். இந்த ஆற்றலைக் கொண்டே சூரியன் பூமியையும் மற்றக் கோள்களையும் இயங்க வைக்கிறது. இவற்றுக்கென்று தனித் தனிப் பாதை உண்டு. இவற்றுக்குச் சுதந்திரம் கிடையாது! இவை சூரியனை வலம் வந்தே ஆக வேண்டும்.

மெர்க்குரி என்ற புதன் சூரியனை ஒருமுறை சுற்றி வர 88 நாட்களாகின்றன; வீனஸ் என்ற சுக்கிரன் 225





தெரியுமா?

* சிகரெட் புகைப்பவர்கள் எந்த வகையான பழங்கள் சாப்பிட்டாலும் வைட்டமின் 'சி' யைக் கண்டிப்பாகப் பெற முடியாது.

* புகையிலைச் செடிகளின் மீது மின் சாரத்தைப் பாய்ச்சுவதால் செடிகள் அதிவேகமாக வளர்ச்சி பெறுகின்றன என்று லண்டன் இம்பீரியல் கல்லூரியைச் சேர்ந்த தாவரவியல் வல்லுநர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

* 1856 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட 'தினவர்த்தினி' தான் தமிழில் தோன்றிய முதல் தமிழ் வாரப் பத்திரிகை.

* 1827 ஆம் ஆண்டு, இங்கிலாந்தைச் சார்ந்த ஜான் வாக்கர் என்பவர்தான் முதன் முதலில் தீக்குச்சியைக் கண்டு பிடித்தவர்.

* இப்பொழுது நடைமுறையில் இருக்கும் உயில் எழுதும் முறை, கி. பி. 1102ல் சிசிலி நாட்டு மன்னராய் இருந்த இரண்டாம் ரோஜர் என்பவரால் உருவானதாகும்.

* டெலிபோன் டைரக்டரியே அச்சிடாத பெரிய நாடு எங்கே இருக்கிறது? பிரான்ஸ் நாடுதான்!

* கலிபோர்னியாவில் பாலோமார் வானியல் ஆராய்ச்சிக் கூடத்தில் உள்ள தொலைநோக்கிதான் உலகிலேயே அதிகச் சக்தி வாய்ந்தது.

* காப்பி குடிப்பதனால் கொழுப்புச் சத்து (கொலஸ்ட்ரால்) அதிகரித்து ஹார்ட் அட்டாக் ஏற்பட அதிக வாய்ப்பிருக்கிறது. காப்பியை நிறுத்தினால் ஹார்ட் அட்டாக்கைத் தவிர்க்கலாம் என்று நார்வே நாட்டு மருத்துவ ஆராய்ச்சிக் குழு கூறுகிறது.

— நாகை. சே. ரவி.

நாட்கள்; பூமி 365 நாட்கள்; மார்ஸ் என்ற செவ்வாய் 687 நாட்கள்; ஜுபிடர் என்ற குரு 12 ஆண்டுகள்; சாடர்ன் என்ற சனி 25 ஆண்டுகள்; யுரேனஸ் 84 ஆண்டுகள்; நெப்டியூன் 165 ஆண்டுகள்; புளுட்டோ 248 ஆண்டுகள். இக் கோள்கள் யாவும் தங்களைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகின்றன.

சூரியனிலிருந்து புதன் கிரகம் 5.79 கோடி கி. மீ. தொலைவில் உள்ளது; சுக்கிரன் 10.82, பூமி 14.96, செவ்வாய் 22.79, வியாழன் 77.83, சனி 142.7, யுரேனஸ் 286.96, நெப்டியூன் 449.66, புளுட்டோ 590 கோடி கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளன.

பூமியில் நாம் கணக்கிடும் நாள், மாதம், ஆண்டு, அனுபவிக்கும் இரவு பகல், பனி, மழை, கோடை, வசந்த காலங்கள் எல்லாமே பூமியின் சுழற்சியை வைத்துக் கதிரவன் நமக்களித்துள்ள பரிசுகள். பூமியில் தோன்றியுள்ள உயிரினங்கள், தாவரங்கள், மனித வாழ்வுக்குத் தேவையான நீர், காற்று யாவும் சூரிய வெப்பம் பல கோடி ஆண்டுகளாக பூமியில் வீசிய தன் விளைவே.

சூரியனின் மேற்பரப்பு வெப்பம் 5540 டிகிரி சென்டிகிரேட். இதில் பூமி ஆண்டொன்றுக்குச் சுமார் ஒரு கோடி குதிரைச் சக்தி அளவுக்குப் பெறுகிறது. தன் மீது வீசப்படும் சூரிய கிரணங்களில் சுமார் ஏழு சதவீத அளவையே சந்திரன் பிரதிபலிக்கிறது.

சூரிய வெப்பத்தைக் கணக்கிட உதவுவது பைரோடலியோ என்ற கருவி. அதிர்வுகளைக் கணக்கிடுவது 'செஸ்மோகிராப்' கருவி. இதன் உதவியால் சூரியனைப் பற்றிப் பல அதிசய உண்மைகள் அறியப்பட்டு வருகின்றன. பல மர்மங்கள் தெளிவாக்கப்படுகின்றன. சூரியனின் தன்மை குறித்த ஆராய்ச்சிக்கு 'ஹெலியோசோசிஸ் மோலாஜி' என்று பெயர்.

பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் உள்ள தூரம் ஜூலை 3 ஆம் நாள் தான் அதிகமாகும். அருகில் இருக்கும் நாள் செப்டெம்பர் 22.

சூரியனின் குறுக்களவு 8,64,400 மைல்கள். சூரியனுக்குள் மற்ற ஒன்பது கிரகங்களையும் போட்டு மூடி விடலாம்! சூரியன் அவ்வளவு பெரியது.

மிகப் பெரிய சூரியனைச் சூரிய கிரகணத்தின் போது நிலவு முழுவதுமாக மறைத்து விடுவதைப் பார்க்கிறோம். கிரகங்களில் பெரிய சூரியனை, பூமியை விடச் சிறிய கிரகமான சந்திரனால் எப்படி மறைக்க

முடிகிறது? தொலை தூரத்தில் உள்ள சூரியனும், அருகே உள்ள சந்திரனும் சந்திக்கும் கோணமும், தூரமுமே இந்த அதிசயத்தை நடத்தி வைக்கின்றன.

பூமியில் இருப்பது போலவே புயல், அதிர்ச்சி, நடுக்கம், கொந்தளிப்பு எல்லாம் சூரியனிலும் ஏற்படுகின்றன. ஒரே ஒரு வேறுபாடு, இவற்றில் காந்த சக்தி செறிந்திருக்கும்.


ஒளி கக்கும் சூரியனின் உட்பகுதி இருண்டு கிடக்கும் என்பது வியப்பான செய்தி. காரணம் வெப்பம் எக்ஸ் கதிர்களாக அங்கே செறிந்திருக்கும்.


சூரியனின் புற ஊதாக் கதிர்கள் மனித எலும்பு வளர்ச்சிக்கு உதவுவதுடன், கிருமி நாசினியாகவும் பயன்படுகிறது. பூமியை வந்தடையும் சூரிய வெப்ப ஆற்றலைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. சூரிய வெப்பத்தைக் கொண்டு இயங்கும் கடிகாரத்தை ஜெர்மெனி அறிமுகப்படுத்தியுள்ளது. மேற்கு ஜெர்மெனியிலேயே சூரிய சக்தியால் மணிக்கு 45 கி. மீ. வேகத்தில் ஓடும் சைக்கிளை உருவாக்கியுள்ளார்கள். சூரிய வெப்பத்தைக் கொண்டே ஐஸ் கட்டியை உருவாக்கும் கருவிகளை ஆஸ்திரேலியா கண்டுபிடித்துள்ளது.

செயற்கைச் சூரியன் ஒன்றை உருவாக்கி அதன் துணையால் புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த செயற்கைச் சூரிய முயற்சிக்குப் பெயர் 'டொகா மாக்'. நமது நாட்டில் கூட கல்கத்தாவிலும், அகமதாபாத்திலும் 'டொகாமாக்' நிறுவப்படுகிறது. அகமதாபாத் 'டொகாமாக்'கின் பெயர் ஆதித்யா.

பூமியில் இயற்கை எரிவாயு எண்ணெய் வளம் வேகமாகக் குறைந்து கொண்டே வரும் நிலையில், சூரிய ஆற்றலைக் கொண்டு இயங்கும் கருவிகளைக் கண்டுபிடிப்பதில் மேலை நாடுகள் தீவிரமாக இறங்கியுள்ளன. வருங்கால நவீன உலகைச் சூரிய ஆற்றல் வழிநடத்தப் போகும் நாள் வெகு விரைவில் வரப் போகிறது. ●

செப்டம்பர் கோகுலத்தில்
ஷேக்ஸ்பியரின்





* நிலவில் இறங்கிய முதல் மனிதர்' போன்ற நல்ல ஆக்கபூர்வமான அறிவியல் கட்டுரைகளை வெளியிட்டு, எங்களையும் நிலவிற்கே கொண்டு சென்று விட்ட ஆசிரியர் அவர்களுக்குப் பாராட்டுக்கள்.

செஞ்சி. டி. இராமநாதன்.

* உலகில் 3000 பாம்பு வகை உள்ளது என்று 'கிலுகிலுங்ங்...' கதை மூலம் தெரிந்து கொண்டேன். ஆசிரியர் 'தங்க மணி' அவர்களுக்குப் பாராட்டுக்கள்.

மேல்மலையனூர். எஸ். சரவணன்.

* சொந்தங்கள் மூன்று — திருமுருக கிருபானந்தவாரி அவர்கள் நாம் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றி விளக்கியது வளரும் குழந்தைகளுக்குச் சத்தான செவி உணவாகும்.

ஈரோடு. டி. சந்திரன்.

* ஆழி அவர்கள் 'அதிசயப் பறவை பெங்குவின்' பற்றி அதிசயத் தகவல்களைத் தந்து வாசகர்களை ஆச்சரிய ஆழியில் மூழ்கடித்து விட்டார்.

ஸ்ரீ ஆதிவராகநல்லூர். த. எழில் செல்வி.

* 'பார்வையைப் பாதுகாக்க...' டாக்டர் பக்கத்தின் மூலம் பார்வைக் குறைபாடுகள் நீங்கக் கூறிய விதிமுறைகள் அனைத்தையும் மனத்தில் பதித்துக் கொண்டு பார்வையைப் பாதுகாப்போம்.

சங்கமங்கலம். எம். ஜி. இராமச்சந்திரன்.

* சேரநம்பி 'மின்னலோ மின்னல்' என்ற தலைப்பில் தொகுத்த 'மின்னல்' செய்திகள் நான் அறியா அரிய செய்திகள். 'மின்னல்' செய்திகளைச் சிரமப்பட்டுச் சேகரித்த சேரநம்பிக்குப் 'பளிச்' பாராட்டுக்கள்.

ஸ்ரீ ஆதிவராகநல்லூர். சா. கிருஷ்ணசாமி.

* புலவர்களின் புலமையை மதித்து அதற்குச் சன்மானம் தர முடியாத நிலையிலும் புலவருக்குத் துணிந்து தம் தலையையே தானமாக வழங்க முன்வந்த குமண வள்ளவின் கொடைத் திறனை 16 பக்க வண்ணப் படக்கதையில் படித்து மெய்சிலிர்த்தேன்.

* தேன் கடிக்குள் இவ்வளவு விஷயங்களா? சின்ன அண்ணன் அவர்கள் பதிலை படித்து வியந்து போனேன். மேலும் பறக்கும் தட்டு பற்றி பல்வேறு வதந்திகள் உலாவரும் இந்த நிலையில் சின்ன அண்ணன் விளக்கம் அச்சம் தரும் வீண் நம்பிக்கைகளை துடைத்தெறிவதாய் இருந்தது.

தெற்கு காருகுடி. ச. ஐயப்பன்.

* எட்டுக்கு எட்டு படக்கதையின் பதினாலுக்குப் பதினாலு பகுதிகளும் சூப்பர். கடைசியில் கதையைச் சுபமாக முடித்த தேசபந்து அவர்களுக்குப் பாராட்டுக்கள். வேறு ஒரு படக்கதையை விரைவில் ஆரம்பிக்கவும்.

செஞ்சி. தா. ரசூல்.

* சிவபுரம் நடராஜ பெருமான் கடத்தப் பட்டதை எதனை ஆதாரமாகக் கொண்டு ஆங்கிலேய கலா ரசிகர் டக்லஸ் பேரட் கண்டுபிடித்தார் என்பதைக் கூறியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

பரங்கிப்பேட்டை (தெ. ஆ). சாரதா.

* என்னடா இவன் வீட்டுக்கும் போகாம, பள்ளிக்கூடத்துக்கும் போகாம, நிக்கிறானேன்னு பாக்கறீங்களா? எப்படி சார் போறது? வீட்டை விட்டுக் கிளம்பும் போதே சொன்னாங்களே, வரும் போது மறக்காம 'கோகுலம்' வாங்கிட்டு வாங்கன்னு! ஏன்னா அதுலதான் 'புது வகுப்பில் புகுந்தேன்' வாசகர்களின் பேட்டி போட்டு இருக்காங்களாமே! அதுதான் சொன்னேன். பாராட்டுக்கள்.

அடியக்கமங்கலம். பி. சஹாபுதீன்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—




டைனம் கிட்ஸின் உதவியுடன் பாட்டி கூடப் பாடம் நடத்தலாம்.



எஜுகேஷனல் வால்யூஸ்:
நாற்பரப்பு உருவம், முப்பரிமாண உருவம், நெடுங்கிடை மற்றும் நேர்கிடை உருவம் இவற்றை நிர்மாணிக்க உதவுகிறது. பார்வை, செயல் இரண்டையும் நேர்முகப்படுத்தும் திறனை வளர்க்கிறது.


Price – Rs. 60/- + Rs. 20/- *



மொபைல் கிட்

பார்வை/செயல் இவற்றை நேர்முகப்படுத்தும் லாவகத்தை வளர்க்கிறது.* அழகான, அலங்காரமான, உருவங்களை அமைக்க உதவுகிறது.* உண்டாக்கும் திறனை ஊக்குவிக்கிறது.


Price – Rs. 18/- + Rs. 10/- *



ஷேப்-கால்-டெக்ஸ் கிட்

வடிவம், வண்ணம், அளவு, தன்மை இவற்றைப் புரிந்துகொள்ள உதவுகிறது. கூட்டு முயற்சியை வளர்க்கிறது. பொருளார்ந்த சொற்பிரயோகத்தையும், மொழியறிவையும் வளர்க்கிறது. உருவாக்கும் திறனை ஊக்குவிக்கிறது.

Price – Rs. 84/- + Rs. 25/- *



ஸ்பைரா-பால் கிட்

வேகம், திசை இவற்றின் விசித்திரங்களை செயல்முறையாகக் கண்டுபிடிக்க உதவுகிறது.* ஈர்ப்பு சக்தியின் காரண காரியங்களைக் கண்டுபிடிக்கும் ஆசையைத் தூண்டுகிறது.

Price – Rs. 50/- + Rs. 20/- *

(*வரிகள், கட்டும் செலவு, அனுப்பும் செலவு)

நாங்கள் பாட்டியின் அறிவையும் அனுபவத்தையும் மதிக்கிறோம்: விளையாட்டு முறையில் கல்வி கற்பிப்பதின் உபயோகத்தை 25 வருட அனுபவம் எங்களுக்கு உணர்த்தியிருக்கிறது.

டைனம் கிட்ஸ் குழந்தைகளுக்குள்ள கண்டுபிடிக்கும் திறமையைத் தூண்டிவிடுகிறது. மற்றும், இளம் உள்ளங்களில் ஒளிந்துகிடக்கும் படைக்கும் திறனை ஊக்குவிக்கிறது!

டைனம் கிட்ஸ் வளரும் குழந்தைகளின் சுயமாகக் கற்கும் திறனைக் கூட்டுவதில் தன்னையே அர்ப்பணிக்கிறது! வகுப்பறை நிலைமையிலும், கூட்டு முயற்சியிலும் கல்வி கற்கும் திறமையை வளர்க்கவும் உதவுகிறது டைனம் கிட்ஸ்.

டைனம் கிட்ஸ் உதவியுடன் விளையாடும் உங்கள் குழந்தையின் தன்னம்பிக்கை வளருவதை கவனியுங்கள்!

Dynam

என்ஜினியரிங் கார்பொரேஷன்
138, கங்காதர செட்டி ரோட்,
பெங்களூர்-560 042.


ஆம், எனக்கு ____________ கிட்/கிட்கள் தேவை. V.P.P. எனக்கு வந்து சேரும்போது முழுத்தொகையும் செலுத்துவதாக உறுதி அளிக்கிறேன்.
பெயர்: ____________
விலாசம்: ____________

climb ads/DC/901

REGISTERED NO. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka

In a class of its own


Exclusive pencils for one and all,



LION
PREMIER®
HB PENCILS


Sleek, Elegant, meant for executives and others, who like style A consistent dark tone for effortless writing - micronized lead for unbreakable points are what adds to its superiority.






LION
PINKY®
PENCILS


Lion 'PINKY' Pencils Pretty Perfect, Ideal for children because of its pretty designs & colours.Strongly bonded lead for unbreakable points and super smooth writing add to its attraction.





LION
Geematic®
DRAWING PENCILS

Lion Geematic Drawing Pencils. A unit for all Professionals like artists, architects, designers & engineers. Give expertise an edge. Available in 14 grades from H to 6H and B to 6B HB and F



LION PENCILS LTD
95, Parijat, Marine Drive
BOMBAY 400 002